# மக்கள் சாசனம்

## 2015 – 2016

## பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

©
தமிழ்நாடு அரசு
2015

## பொருளடக்கம்


| வ. எண் | திட்ட விவரங்கள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | **முன்னுரை** | **1** |
| 2. | **இடஒதுக்கீடு**<br>சாதிச் சான்றிதழ் வழங்குதல் | **2-3** |
| 3. | **கல்வி**<br>கள்ளர் சீரமைப்பு பள்ளிகள்<br>கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் புதிதாக LKG வகுப்புகள் தொடங்கியது<br>மாணவ/மாணவியர் விடுதிகள்<br>கல்வி உதவித் தொகை திட்டம்<br>மாணவ/மாணவியருக்கான பரிசுத்திட்டங்கள்<br>உணவு மானியம் வழங்குதல்<br>கிராமப்புற பெண் குழந்தைகளுக்கு கல்வி ஊக்குவிப்புத் தொகை வழங்குதல்<br>விலையில்லா மிதிவண்டிகள் வழங்குதல் | **3 - 18** |
| 4. | **பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்**<br>விலையில்லா சலவைப் பெட்டி வழங்குதல்<br>விலையில்லா தையல் இயந்திரங்கள் வழங்குதல்<br>விலையில்லா வீட்டுமனைப்பட்டா வழங்குதல்<br>திறன் வளர்ப்பு பயிற்சி திட்டம் | **18 - 20** |
| 5. | **நலவாரியங்கள்**<br>சீர்மரபினர் நல வாரியம்<br>நரிக்குறவர் நல வாரியம்<br>வன்னியர் பொதுச் சொத்து நல வாரியம் | **20 - 24** |
| 6. | **பொது**<br>புகார்கள் மற்றும் மேல் முறையீடுகளுக்கான வழிமுறைகள்<br>தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 | **24 - 26** |
| 7. | **பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு முஸ்லீம்கள், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினர் பட்டியல்** | **26 - 36** |
| 8. | **தமிழ்நாடு வக்ஃப் வாரியம்**<br>முன்னுரை<br>பணியமைப்பு | **37** |

| வ. எண் | திட்ட விவரங்கள் | பக்கம் எண் |
|---|---|---|
| | வக்ஃப் வாரியத்தின் பணிகள்<br>கணக்கீட்டிற்குள் வரும் மற்றும் கணக்கீட்டிற்குள் வராத வக்ஃப்கள்<br>பதிவு செய்யப்பட்ட / பதிவு செய்யப்படாத வக்ஃப்கள்<br>வாரியத்தின் வருவாய்<br>மத்திய வக்ஃப் கவுன்சிலுக்கு சகாயத்தொகை (1%) செலுத்துதல்<br>வக்ஃப் சொத்துக்களை மேம்பாடு செய்ய மத்திய வக்ஃப் கவுன்சில் மூலம் வழங்கப்படும் கடன் தொகை<br>வக்ஃப் தீர்ப்பாயம் அமைத்தல்<br>நிர்வாக மானியம்<br>முஸ்லிம் பெண்கள் (மண விலக்கில் உரிமைப் பாதுகாப்பு) சட்டம் 1986 நடைமுறைப்படுத்துதல்<br>வக்ஃப் வாரியத்தால் அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் | 37 - 42 |
| 9. | **தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்**<br>பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் கடன் உதவி பெறுவதற்கான வழிமுறைகள்<br>நிதியுதவி அளிக்கப்படும் பல்வேறு தொழில்கள்<br>தகுதிகள்<br>விண்ணப்பிக்கும் முறை<br>அளிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்<br>கடன் வழங்கும் முறை<br>கடன் தொகைக்கான பிணையம்<br>கடன் திட்டங்களின் விவரங்கள்<br>கடன் தொகையினைத் திரும்பச் செலுத்துதல்<br>அபராதவட்டி<br>கடன் தொகை அட்டை பராமரிப்பு | 43 - 48 |
| 10. | **தமிழ்நாடு மாநில ஹஜ் குழு**<br>விண்ணப்பிக்கும் முறை<br>தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவால் ஆற்றப்படும் பணிகள் | 49 - 55 |
| 11. | **தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம்** | 56 - 57 |
| 12. | **தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்**<br>முகவுரை<br>தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் தோற்றம்<br>தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பணிகள்<br>தற்போதுள்ள ஆணையத்தின் அமைப்பு<br>ஆணையத்திற்கு மனு அல்லது முறையீடு அனுப்புதல்<br>2005ஆம் ஆண்டு தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொது தகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர். | 58 - 59 |

| வ. எண் | திட்ட விவரங்கள் | பக்கம் எண் |
|---|---|---|
| 13. | **சிறுபான்மையினர் நலத்துறை**<br>இடஒதுக்கீடு<br>கல்வி உதவித் தொகைகள்<br>பள்ளிப் படிப்பு கல்வி உதவித்தொகை<br>பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை<br>தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை<br>பொதுப்பரிசுகள்<br>விலையில்லா மிதிவண்டிகள்<br>சிறுபான்மையினர் விடுதிகள்<br>முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம்<br>மறுவாழ்வு நிதியுதவி வழங்குதல்<br>உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியம் மற்றும் உதவிகள்<br>திறன்வளர்ப்பு பயிற்சித் திட்டம்<br>ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொள்ள நிதியுதவி<br>தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர் பட்டியல் | **60 – 76** |
| 14. | **தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்**<br>தனிநபர் கடன்<br>கறவை மாட்டுக் கடன்<br>ஆட்டோ கடன் திட்டம்<br>போக்குவரத்து இனக்கடன்<br>சிறு கடன்<br>கல்வி கடன் | **77- 83** |

# தமிழ்நாடு அரசு

## மக்கள் சாசனம் (CITIZEN CHARTER)
## 2015– 2016

**(பொதுமக்களின் தகவலுக்காக திட்டங்கள் குறித்த விவரங்கள்)**

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்**

**மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை**

**முன்னுரை :**

2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள்தொகை 7,21,38,958(த) ஆகும். தமிழகத்தின் மொத்த மக்கள்தொகையில் சுமார் 69 (2/3) விழுக்காடு பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்தவர்களாவர். தமிழகத்தில் உள்ள சிறுபான்மையின முஸ்லிம்களில் சுமார் 95 விழுக்காடு பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலும், சிறுபான்மையின கிறித்தவர்களில் சுமார் 80 விழுக்காடு பிற்படுத்தப்பட்டோர்/மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலும் இடம் பெற்றுள்ளனர். பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்தவர்கள் சமூக, பொருளாதார மற்றும் கல்வி ஆகிய அனைத்துத் துறைகளிலும் சமுதாயத்தின் இதர பிரிவினர்களுக்கு இணையாக முன்னேற்றம் அடையும் பொருட்டு இத்துறையின் மூலம் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்த மக்களின் மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்த விவரங்கள், அத்திட்டங்களின் கீழ் பயன்பெற தேவையானத் தகுதிகள், அணுகவேண்டிய அலுவலர்கள் ஆகிய விவரங்கள் பொதுமக்களின் தகவலுக்காக இம்மக்கள் சாசனத்தில் அளிக்கப்பட்டுள்ளன.

## <u>இடஒதுக்கீடு</u>

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினத்தவரின் சமூக மற்றும் கல்வி நிலையினை மேம்படுத்துவதில் இடஒதுக்கீடு மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. கல்வி நிலையங்களில் மாணவர் சேர்க்கை மற்றும் அரசுப் பணிகளில் நியமனங்கள் ஆகியவற்றில் வழங்கப்படும் இடஒதுக்கீட்டின் மூலம் இவ்வகுப்பினர் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு பெற்று பொருளாதார ரீதியில் மேம்பாடு அடைவதால், அவர்களது சமூக நிலையும் உயர்வு பெறுகிறது. தற்போது வழங்கப்படும் இடஒதுக்கீட்டின் அளவு விவரம் பின்வருமாறு :–

| | | |
|---|---|---|
| பிற்படுத்தப்பட்டவகுப்பினர் (பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்கள் நீங்கலாக) | ⏩ | 26.5 விழுக்காடு |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்கள் | ⏩ | 3.5 விழுக்காடு |
| மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் | ⏩ | 20 விழுக்காடு |
| ஆதிதிராவிடர் | ⏩ | 18 விழுக்காடு *** |
| பழங்குடியினர் | ⏩ | 1 விழுக்காடு |
| மொத்தம் | | 69 விழுக்காடு |

*** ஆதிதிராவிடர் வகுப்பினருக்கு ஒதுக்கப்படும் இடங்களில் 16 விழுக்காடு இடங்கள் அருந்ததியர் வகுப்பினருக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

69 விழுக்காடு இடஒதுக்கீடு தொடர்பான வழக்குகளில் 13.7.2010 அன்று உச்சநீதிமன்றம் பிறப்பித்த கட்டளைக்கிணங்க எண்ணிக்கை அடிப்படையிலான விவரங்களின் அடிப்படையில் இடஒதுக்கீட்டின் அளவு மற்றும் வளமான பிரிவினரை நீக்கம் செய்வது ஆகியன குறித்து ஆய்வு செய்து தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் வழங்கிய பரிந்துரையினை ஏற்று, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு தற்போது அளிக்கப்பட்டு வரும் 50 விழுக்காடு இடஒதுக்கீட்டினை வளமான பிரிவினரை நீக்கம் செய்யாமல் தொடர்ந்து கடைபிடிக்க 11.7.2011 அன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் முஸ்லிம்கள், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்தவர்களின் பட்டியல்கள் இம்மக்கள் சாசனத்தின் இறுதியிலுள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

## சொந்த மாவட்டங்களிலிருந்து குடிபெயர்ந்தவர்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்குதல்

குறிப்பிட்ட பகுதிகளில் (மாவட்டங்கள் மற்றும் வட்டத்தில்) மட்டுமே பிற்படுத்தப்பட்டோர் அல்லது மிகப்பிற்படுத்தப்பட்டோர் அல்லது சீர்மரபினர் என்று அறிவிக்கப்பட்டுள்ளவர்கள் அப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து மாநிலத்தின் வேறு பகுதிகளில் குடியேறியுள்ள நிலையில், அவர்கள் தாங்கள் குறிப்பிட்ட வகுப்பினை சார்ந்தவர்கள் என்பதற்கும் மற்றும் அவ்வகுப்பு பிற்படுத்தப்பட்ட அல்லது மிகப்பிற்படுத்தப்பட்ட அல்லது சீர்மரபினர் என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து வந்து குடியேறியவர் என்பதற்கும் ஆதாரமாக அப்பகுதிகளில் தங்களது பெற்றோர்களுக்கு வழங்கப்பட்ட சாதிச்சான்றிதழை வழங்கும் பட்சத்தில் அதன் அடிப்படையில் அவர்களுடைய வகுப்பு அவர்கள் சொந்த மாவட்டத்தில் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளதோ அதற்குரிய சான்றிதழ்களை குடியேறிய பகுதிகளில் உள்ள சாதிச் சான்றிதழ் வழங்கும் அலுவலர்களிடமே பெற்றுக் கொள்ளலாம் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது. (அரசாணை (நிலை) எண் 95, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிநசிபி)த்துறை, நாள் 28.10.2009).

## கல்வி

சமுதாயத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்குக் கல்வியே அடித்தளமாக அமைகிறது. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்தவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக மாநில அரசு பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இடஒதுக்கீட்டுக் கொள்கையால் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் இவர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் கிடைக்கிறது. கல்வி உதவித்தொகை திட்டத்தால் ஏழை மாணவ, மாணவியர் கல்வி பெற பொருளாதார ரீதியாக உதவி அளிக்கப்படுகிறது. இத்துறையால் நடத்தப்படும் விடுதிகளில் அவர்களுக்கு எவ்வித கட்டணமுமின்றி உணவு மற்றும் தங்கும் வசதிகள் அளிக்கப்படுகின்றன. மாணவ, மாணவியர் ஆர்வத்துடன் கல்வி பயில்வதை ஊக்கப்படுத்துவதன் பொருட்டு பல்வேறு பரிசுகள் வழங்கும் திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.

### கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள்

கள்ளர் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் பிரமலைக்கள்ளர் வகுப்பினரின் கல்வி நிலையினை மேம்படுத்தும் பொருட்டு அவ்வகுப்பினர் பெருமளவில் வாழும் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 290 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:-

## மாணாக்கர்களின் எண்ணிக்கை (2014–15)

| வ. எண் | பள்ளிகளின் விவரம் | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணாக்கர்களின் எண்ணிக்கை (2014–15) | | |
|---|---|---|---|---|---|
| | | | மாணவர்கள் | மாணவிகள் | மொத்தம் |
| 1. | தொடக்கப்பள்ளிகள் மழலையர் வகுப்பு (LKG) உட்பட | **212** | **5207** | **5239** | **10446** |
| 2. | நடுநிலைப்பள்ளிகள் | **23** | **1057** | **1075** | **2132** |
| 3. | உயர்நிலைப்பள்ளிகள் | **22** | **1727** | **1430** | **3157** |
| 4 | மேல்நிலைப்பள்ளிகள் | **33** | **8537** | **6266** | **14803** |
| | **மொத்தம்** | **290** | **16528** | **14010** | **30538** |

**அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் புதிதாக LKG வகுப்புகள் தொடங்கியது**

மாறிவரும் கல்விச் சூழலுக்கு ஏற்ப, 2011–12 ஆம் கல்வியாண்டில் சோதனை திட்டமாக மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில், மாவட்டத்திற்கு 5 பள்ளிகள் வீதம், 15 ஆரம்பப்பள்ளிகளில் புதிதாக ஆங்கில வழியிலான **LKG** வகுப்புகள் துவக்கப்பட்டது. அப்பள்ளிகளில் தற்போது UKG, முதல் மற்றும் இரண்டாம் வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. இவ்வகுப்புகளில் 300 மாணவர்கள் மற்றும் 305 மாணவிகள் என மொத்தம் 605 மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர்.

**அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளி மாணவ, மாணவியருக்கு பரிசுகள் வழங்கும் திட்டம்**

கள்ளர் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரிடையே அதிக மதிப்பெண்கள் பெறும் உணர்வினை ஊக்குவிக்கும் நோக்கத்தில் அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயின்று 10 மற்றும் 12 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ, மாணவியருக்கு கீழ்க்கண்டவாறு பரிசுத்தொகைகள் வழங்கப்படுகின்றன. இந்தப் பரிசுத்திட்டம் மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களிலுள்ள அரசு கள்ளர் பள்ளிகளுக்கு பொதுவானது.

**10 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கு தனித்தனியே வழங்கப்படும் பரிசுகளின் விவரம்**

| பரிசு விவரம் | பரிசுத் தொகை |
|---|---|
| ஒரு முதல் பரிசு (ஒரு மாணவர் அல்லது ஒரு மாணவி) | ரூ.10,000/– |
| ஒரு இரண்டாம் பரிசு (ஒரு மாணவர் அல்லது ஒரு மாணவி) | ரூ.7,000/– |
| மூன்று மூன்றாம் பரிசு ( மூன்று மாணவ / மாணவியருக்கு) | தலா ரூ.5,000/– வீதம் |

**தவிர இப்பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கப்படுகின்றன:-**

| வ.எண் | திட்டங்கள் விவரம் | தகுதியுடைய பயனாளிகள் | அணுக வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| 1. | விலையில்லாப் பாடப்புத்தகம் | 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ, மாணவியர் | சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் |
| 2. | விலையில்லா குறிப்பேடு | 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ, மாணவியர் | சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் |
| 3. | விலையில்லாச் சீருடைகள் ( 4 இணை) | 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ, மாணவியர் | சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் |
| 4. | விலையில்லா சிறப்பு வழிகாட்டிகள் ( வினா மற்றும் விடைகள்) | 1 0 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவ, மாணவியர் | சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் |
| 5. | விலையில்லா மிதிவண்டிகள் | 11 ஆம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவ, மாணவியர் | சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் |
| 6. | விலையில்லா கிரையான்கள் (Crayons) | 1 மற்றும் 2 ஆம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவ, மாணவியர் | சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் |
| 7. | விலையில்லா மடிக்கணினி | 12 ஆம் வகுப்பு மட்டும் | சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் |
| 8. | விலையில்லாப் புத்தகப்பை | 1 மற்றும் 11 ஆம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவ, மாணவியர். | சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் |
| 9. | விலையில்லாப் பேருந்து பயண அட்டை | 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ, மாணவியர் | சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் |
| 10. | விலையில்லாக் காலணி | 1 ஆம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கு மட்டும் | சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் |

| | | | |
|---|---|---|---|
| 11. | விலையில்லாக் கணித உபகரணப் பெட்டி | 6 ஆம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவ, மாணவியர் | சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் |
| 12. | விலையில்லாப் புவியியல் வரைபடம் | 6 ஆம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவ, மாணவியர் | சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் |
| 13. | விலையில்லா வண்ணப்பென்சில்கள் | 3 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ, மாணவியர் | சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் |
| 14. | இடை நிற்றல் குறைப்பதற்கான சிறப்பு ஊக்கத் தொகை | 10 மற்றும் 11 ஆம் வகுப்பு ரூ.1500/–<br>12 ஆம் வகுப்பு ரூ.2000/– | சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் |

## விடுதிகள்:-

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த ஏழை மாணவ, மாணவியர் அனைத்து வசதிகளுடன் கல்வி கற்கும் சூழலை உருவாக்கும் நோக்கத்துடன் பள்ளி மற்றும் கல்லூரிக்கு அருகாமையில் பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு உணவு மற்றும் தங்கும் வசதி இலவசமாக வழங்கப்படுகின்றன.

### அ) பள்ளி விடுதிகள்

சேர்க்கைக்கான தகுதிகள்

1. மாணவ, மாணவியர் 4 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை பயில வேண்டும்.
2. பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.1,00,000/–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
3. மாணவரின் இருப்பிடம் கல்வி நிலையத்திலிருந்து 5 கிலோமீட்டருக்கு அப்பால் இருக்க வேண்டும். (மாணவியருக்கு தூரவிதி பொருந்தாது)

### ஆ) கல்லூரி விடுதி

சேர்க்கைக்கான தகுதிகள்

1. பட்டயம், பட்டம் மற்றும் முதுநிலை படிப்பு பயில வேண்டும்.
2. பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.1,00,000/–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
3. மாணவரின் இருப்பிடம் கல்வி நிலையத்திலிருந்து 5 கிலோமீட்டருக்கு அப்பால் இருக்க வேண்டும். (மாணவியருக்கு தூரவிதி பொருந்தாது)

### இ) தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்கள்.

சம்மந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நல அலுவலர் / விடுதியின் காப்பாளர் /காப்பாளினி.

## ஈ) <u>விடுதிகளின் விவரம்</u>

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியரின் கல்வி நலனுக்காக மொத்தம் 1315 மாணவ, மாணவியர் விடுதிகள் அரசால் நடத்தப்படுகின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு.

### <u>விடுதிகள் மற்றும் மாணவர்/மாணவியரின் எண்ணிக்கை விவரம்</u>

| வ. எண். | துறை | விடுதிகள் | விடுதிகள் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை | | | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | மாணவர்கள் | மாணவிகள் | மொத்தம் | மாணவர்கள் | மாணவிகள் | மொத்தம் |
| 1. | பிவ | கல்லூரி | **110** | **5830** | **3710** | **9540** | **5352** | **3589** | **8941** |
| | | பள்ளி | **611** | **22065** | **12260** | **34325** | **21785** | **12493** | **34278** |
| | | மொத்தம் | **721** | **27895** | **15970** | **43865** | **27137** | **16082** | **43219** |
| 2. | மிபிவ | கல்லூரி | **69** | **2540** | **3465** | **6005** | **2456** | **3110** | **5566** |
| | | பள்ளி | **360** | **13060** | **6425** | **19485** | **13628** | **6810** | **20438** |
| | | மொத்தம் | **429** | **15600** | **9890** | **25490** | **16084** | **9920** | **26004** |
| | சீம | கல்லூரி | **15** | **735** | **440** | **1175** | **654** | **508** | **1162** |
| | | பள்ளி | **136** | **7144** | **3390** | **10534** | **6798** | **3690** | **10488** |
| | | மொத்தம் | **151** | **7879** | **3830** | **11709** | **7452** | **4198** | **11650** |
| 3. | **சி.பா** | பள்ளி / கல்லூரி | **5** | **-** | **250** | **250** | **-** | **259** | **259** |
| | | பள்ளி | **4** | **-** | **350** | **350** | **-** | **178** | **178** |
| | | கல்லூரி | **5** | **100** | **400** | **500** | **100** | **302** | **402** |
| | | மொத்தம் | **14** | **100** | **1000** | **1100** | **100** | **739** | **839** |
| பி.வ./ மிபிவ /சீம & **சி.பா** | | கல்லூரி | **199** | **9205** | **8015** | **17220** | **8562** | **7509** | **16071** |
| | | பள்ளி | **1111** | **42269** | **22425** | **64694** | **42211** | **23171** | **65382** |
| | | பள்ளி / கல்லூரி | **5** | | **250** | **250** | | **259** | **259** |
| | | மொத்தம் | **1315** | **51474** | **30690** | **82164** | **50773** | **30939** | **81712** |

## விடுதிகளில் மாணவ, மாணவியரின் சேர்க்கைக்கு வருமானம் மற்றும் சாதி சான்றிதழ்களை சமர்ப்பித்தல்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் சேர விரும்பும் மாணவ / மாணவியர்களின் பெற்றோர் / பாதுகாவலர் விடுதி சேர்க்கைக்கான விண்ணப்பத்தில் ஆண்டு வருமானம் மற்றும் சாதி குறித்து அளிக்கும் சுயஉறுதிமொழிச் சான்றுகளின் அடிப்படையிலேயே மாணவ, மாணவியர்களை தேர்வு செய்யப்படுகிறது. தேர்வு செய்யப்பட்ட பின்னர் மாணவ, மாணவியர் விடுதியில் சேரும்போது பெற்றோரது ஆண்டு வருமானம் மற்றும் சாதி குறித்த சான்றிதழ்களை உரிய அலுவலர்களிடமிருந்து பெற்று சமர்ப்பித்தால் போதுமானது.

### விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் சலுகைகள் விவரம்

### உணவுக்கட்டணம்

பள்ளி விடுதி ⏩ ரூ. 755/– ஒரு மாதத்திற்கு ஒரு மாணவருக்கு (01–03–2013 முதல்)

கல்லூரி விடுதி ⏩ ரூ. 875/– ஒரு மாதத்திற்கு ஒரு மாணவருக்கு (01–03–2013 முதல்)

(அரசு ஆணை எண் 52 பிவ,மிபிவ (ம) சிபா நலத்துறை நாள் 9.7.2013)

**செய்தித் தாள்கள்** ⏩ பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளுக்கு ஓர் ஆங்கில நாளிதழ் மற்றும் இரண்டு தமிழ் நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன.

**மருத்துவப் பரிசோதனை** ⏩ ஓர் ஆண்டுக்கு மூன்று கட்டங்களாக விடுதி மாணவ, மாணவியருக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்படுகின்றது.

### விடுதிகளில் இட ஒதுக்கீடு முறை

**சேர்க்கை விகிதாச்சாரம்**

| விடுதிகள் | வகுப்பு | ஒதுக்கீடு சதவிகிதம் |
|---|---|---|
| பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு | பி.வ. | 60 % |
| | மி.பி.வ. / சீ.ம. | 20 % |
| | ஆ.தி./ ப.கு | 15 % |
| | இதர வகுப்பினர் | 5 % |
| | **மொத்தம்** | **100 %** |
| மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு | மி.பி.வ. | 60 % |
| | பி.வ. / சீ.ம. | 20 % |
| | ஆ.தி / ப.கு | 15 % |
| | இதர வகுப்பினர் | 5 % |
| | **மொத்தம்** | **100 %** |
| சீர்மரபினர் வகுப்பு | சீ.ம. | 60 % |
| | பி.வ. /மி.பி.வ | 20 % |
| | ஆ.தி./ ப.கு | 15 % |
| | மு.வ. | 5 % |
| | **மொத்தம்** | **100 %** |

| | | |
|---|---|---|
| <u>முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள்</u> | ▸▸ | ஒவ்வொரு விடுதியிலும் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்காக விடுதியின் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மேல் கூடுதலாக 5 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. |
| **மாற்றுத் திறனாளிகள்** | ▸▸ | ஒவ்வொரு விடுதியிலும் 3 சதவீத இடங்கள் மாற்றுத் திறனாளி மாணவ மாணவியருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. |
| <u>குழந்தைத் தொழிலாளர்கள்</u> | ▸▸ | மீட்கப்படும் குழந்தைத் தொழிலாளர்கள் விடுதிகளில் எக்காலத்திலும் எந்த நேரத்திலும் எந்தவித நிபந்தனைகளும் இல்லாமல் சேர்த்துக் கொள்ளவும், படிப்பு முடியும் வரை தங்கிப் பயிலவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. |

**<u>கேரள எல்லையோர பகுதிகளில் உள்ள தோட்டங்களில் பணிபுரியும் கூலித் தொழிலாளர்களது ஏழை குழந்தைகளுக்கு தேனி மாவட்டத்தை ஒட்டியுள்ள விடுதிகளில் அனுமதித்தல்.</u>**

தமிழ்நாட்டை பிறப்பிடமாகக் கொண்டு கேரள எல்லையோரப் பகுதியில் உள்ள தோட்டங்களில் பணிபுரியும் கூலித் தொழிலாளர்களது ஏழைக் குழந்தைகளை விடுதிகளில் சேர்ப்பதற்கு சாதி மற்றும் வருமானச் சான்றிதழ் அளிப்பதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. 2012– 2013 ஆம் ஆண்டு முதல் கேரள எல்லையோரப் பகுதிகளில் தேனி மாவட்டத்தை ஒட்டியுள்ள விடுதிகளில் இச்சான்றிதழ்களுக்கு பதிலாக அவர்களின் பெற்றோர் அளிக்கும் உறுதிமொழிச்சான்றின் அடிப்படையிலேயே சேர்க்கப்படுகின்றனர்.

## <u>இதர சலுகைகள்</u>

| வழங்கப்படும் சலுகைகள் | தகுதி | அணுக வேண்டிய அலுவலர்கள் |
|---|---|---|
| சீருடைகள் | 2013–2014 ஆம் ஆண்டு முதல் விடுதிகளில் தங்கி 4 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் விடுதி மாணவ, மாணவியருக்கு 4 தொகுதி (set) இலவச சீருடைகள் வழங்கப்படுகின்றன. சமூக நலத்துறையால் மதிய உணவு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சீருடைகளை போன்றே அதே நிறத்தில், அதே வடிவமைப்பில் வழங்கப்படுகின்றன. | சம்மந்தப்பட்ட விடுதி காப்பாளர் / காப்பாளினி |
| சிறப்பு வழிகாட்டிகள் | 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவ , மாணவியர் | |
| கம்பளி மேலாடை | நீலகிரி, சேலம் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள மலைப் பிரதேசங்களில் இயங்கும் விடுதிகளில் தங்கிப்பயிலும் அனைத்து மாணவ, மாணவியர் | |
| படுக்கை விரிப்பு, பாய் | பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் பயிலும் அனைத்து மாணவ, மாணவியர் | |

## <u>பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கான கல்வி உதவித்தொகைத் திட்டங்கள்</u>

### <u>i) பள்ளிக் கல்வி உதவித்தொகைத் திட்டம்</u>

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 10 மற்றும் 12 –ஆம் வகுப்புகளில் தமிழ்வழிக் கல்விப் பயிலும் மாணவ, மாணவியருக்கு சிறப்புக் கட்டணம் அரசால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் 10ஆம் வகுப்பில் தமிழ்வழிக் கல்விப் பயிலும் மாணவ, மாணவியர் செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணமும் அரசால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. ஆங்கில வழிக்கல்வி பயிலும் மாணவர்கள் மட்டுமே சிறப்புக் கட்டணம் செலுத்துகிறார்கள். எனவே அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆங்கிலவழிக் கல்விப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு மட்டும் கீழ்க்கண்டவாறு கல்வி உதவித் தொகைகள் பள்ளிக்கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | வகுப்பு மற்றும் படிப்பு | வழங்கப்படும் சலுகைகள் விவரம் மற்றும் அதற்குரிய நிபந்தனைகள் |
|---|---|---|---|
| 1. | பள்ளிக் கல்வி உதவித்தொகைத் திட்டம் | 6 ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை, ஆங்கில வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படுகிறது. | <u>கற்பிப்புக் கட்டணம்</u><br><u>6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை</u><br>ரூ.200/– (மாதம் ரூபாய் 20/– வீதம் 10 மாதங்களுக்கு )<br><u>9 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பு</u><br>ரூ.250/– (மாதம் ரூபாய் 25/– வீதம் 10 மாதங்களுக்கு)<br><u>**தேர்வுக் கட்டணம்**</u><br>10 ஆம் வகுப்பு மாணவ, மாணவியருக்கு முழுமையாக வழங்கப்படுகிறது.<br>**i) <u>பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ, மாணவியருக்கான நிபந்தனைகள்</u>**<br>1) பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.2,00,000/–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>2) குடும்பத்தில் வேறு பட்டதாரி எவரும் இருக்கக் கூடாது<br>ii) **மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் வகுப்பு மாணவ, மாணவியருக்கு நிபந்தனை ஏதும் இல்லை.** |

## ii) பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகைத் திட்டம்

| | | | |
|---|---|---|---|
| 2. | இத்திட்டத்தின் கீழ் 11 ஆம் வகுப்பு முதல் ஆராய்ச்சி படிப்பு வரையிலான பல்வேறு படிப்புகளுக்கு அரசு நிர்ணயித்தவாறு கல்வி உதவித் தொகைகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன:- | | |
| | **பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகைத் திட்டம்** | 1) 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புகளில் ஆங்கில வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படுகிறது. | <u>கற்பிப்புக் கட்டணம்</u><br>ரூ.500/– (மாதம் ரூபாய் 50/– வீதம் 10 மாதங்களுக்கு)<br><br><u>தேர்வுக் கட்டணம்</u><br>12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியருக்கு முழுமையாக வழங்கப்படுகிறது.<br><br>**i) <u>பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ, மாணவியருக்கான நிபந்தனைகள்</u>**<br>1) பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.2,00,000/–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>2) குடும்பத்தில் வேறு பட்டதாரி எவரும் இருக்கக் கூடாது<br>ii) **மிகப்பிற்படுத்தப்பட்டோர் , சீர்மரபினர் வகுப்பு மாணவ, மாணவியருக்கு நிபந்தனை ஏதும் இல்லை.** |
| | | 2) அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் முழு நேர மற்றும் இரண்டாவது முறை மாற்றம் (Second shift) / மாலை நேர வகுப்புகளில் பட்ட மேற்படிப்பு, பட்டயப் படிப்பு, தொழிற்கல்வி மற்றும் ஆராய்ச்சி படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு வழங்கப்படுகிறது. | 2012–13 ஆம் ஆண்டு முதல் பள்ளிமேற்படிப்பு திட்டத்தின் கீழ் அரசு கல்வி நிலையங்களில் நிர்ணயிக்கும் விகிதத்தில் சிறப்புக்கட்டணம், மற்றும் கற்பிப்புக் கட்டணம் வழங்க அரசு உத்திரவிட்டுள்ளது. தேர்வு கட்டணம் முழுமையாக வழங்கப்படுகிறது. அரசு / அரசு உதவி பெறும் இரண்டாவது முறை மாற்றம் (Second Shift) மாலை நேர வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கும் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.<br><br><u>நிபந்தனை</u><br>பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.2,00,000/–க்கு மிகாமல் இருக்க வேண்டும் |

## <u>iii) இலவசக் கல்வி உதவித்தொகை திட்டம்</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | **மூன்றாண்டு பட்டப்படிப்புகளுக்கான இலவசக் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் (பி.ஏ.,பி.எஸ்.ஸி., பி.காம்., போன்ற படிப்புகள்)** | | |
| | இலவசக் கல்வி உதவித்தொகை ( பட்டப்படிப்பு) | அரசு மற்றும் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மூன்றாண்டு பட்டப்படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ/ மாணவியர் | சிறப்புக் கட்டணம் மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணம் அரசு நிர்ணயித்துள்ள அளவிலும், தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகிறது.<br><u>நிபந்தனை:</u> பிவ, மிபிவ (ம) சீம மாணவர்களுக்கு நிபந்தனை ஏதும் இல்லை |
| 2. | **மூன்றாண்டு பட்டயப்படிப்புகளுக்கான (பாலிடெக்னிக்) இலவசக் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம்** | | |
| | இலவசக் கல்வி (பட்டயப் படிப்பு ) | அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொழில்நுட்ப பயிலகங்களில் மூன்றாண்டு பட்டயப்படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ/ மாணவியர் | கல்விக் கட்டணம், சிறப்புக் கட்டணம் மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணம் ஆகியவை அரசு நிர்ணயித்துள்ள அளவிலும், தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படும்.<br><br>**<u>பிவ, மிபிவ (ம) சீ.ம வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கான நிபந்தனைகள்</u>**<br>1. பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.2,00,000/—க்கு மிகாமல் இருக்க வேண்டும்<br>2. குடும்பத்தில் வேறு பட்டய/பட்டதாரி எவரும் இருக்கக் கூடாது |
| 3. | **<u>தொழிற்படிப்புகளுக்கான இலவசக் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் (பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மற்றும் சட்டம் போன்ற படிப்புகள்)</u>** | | |
| | இலவசக் கல்வி (தொழிற்கல்வி ) | அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொழில் கல்லூரிகள் மற்றும் சுயநிதி தொழில் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டில் தேர்வு செய்யப்படும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ/ மாணவியர் | சிறப்புக் கட்டணம் மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணம் ஆகியவை அரசு நிர்ணயித்துள்ள அளவிலும், தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படும்.<br><br>**<u>பிவ, மிபிவ (ம) சீ.ம வகுப்பைச் சார்ந்த மாணவ,மாணவியருக்கான நிபந்தனைகள்</u>**<br><br>1. பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.2,00,000/—க்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>2.குடும்பத்தில் வேறு பட்டதாரி எவரும் இருக்கக் கூடாது |

## மாணவர் மற்றும் மாணவியருக்கான பரிசுகள் வழங்கும் திட்டங்கள்
## மாநில அளவிலான பரிசுகள்

### 12 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வுகள்

### வழங்கப்படும் பரிசுத்தொகையின் விவரம்

| பரிசுகள் விவரம் | பரிசுத்தொகை | |
|---|---|---|
| | 12 ஆம் வகுப்பு | 10 ஆம் வகுப்பு |
| **முதல் பரிசு**<br>பிற்படுத்தப்பட்ட வகுப்பிலிருந்து ஒரு மாணவர், ஒரு மாணவி மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் வகுப்பிலிருந்து ஒரு மாணவர், ஒரு மாணவி என நான்கு முதல் பரிசுகள் | ரூ.50,000 | ரூ.25,000 |
| **இரண்டாம் பரிசு**<br>பிற்படுத்தப்பட்ட வகுப்பிலிருந்து ஒரு மாணவர், ஒரு மாணவி மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் வகுப்பிலிருந்து ஒரு மாணவர், ஒரு மாணவி என நான்கு இரண்டாம் பரிசுகள் | ரூ.30,000 | ரூ.20,000 |
| **மூன்றாம் பரிசு**<br>பிற்படுத்தப்பட்ட வகுப்பிலிருந்து ஒரு மாணவர், ஒரு மாணவி மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் வகுப்பிலிருந்து ஒரு மாணவர், ஒரு மாணவி என நான்கு மூன்றாம் பரிசுகள் | ரூ.20,000 | ரூ.15,000 |

குறிப்பு

1. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.
2. ஆண்டு வருமான வரம்பு ஏதுமில்லை.
3. அரசு/அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள்
4. தமிழை ஒரு பாடமாக பயின்றிருக்க வேண்டும்.
5. மாநில அளவில் கல்வித்துறை மூலம் பரிசு பெறுபவர்களுக்கு இத்துறை மூலம் பரிசுகள் வழங்கப்படமாட்டாது.
6. ஒன்றுக்கும் மேற்பட்ட மாணவ / மாணவியர் ஒரே மதிப்பெண்கள் பெற்றிருந்தால் அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்படும்.

# மாவட்ட அளவிலான பரிசுகள் (ஒவ்வொரு மாவட்டத்திற்கும்)

## 12 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகள்

மாவட்ட அளவிலான பரிசுகள் வழங்கும் திட்டத்தில் 2011–2012 ஆம் ஆண்டுவரை வழங்கப்பட்டு வந்த பரிசுத் தொகையானது கீழ்க்குறிப்பிட்டவாறு இருமடங்காக உயர்த்தப்பட்டு 2012–13 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

| பரிசுகள் விவரம் | பரிசுத்தொகை | |
|---|---|---|
| | 12 ஆம் வகுப்பு | 10 ஆம் வகுப்பு |
| **முதல் பரிசு**<br>பிற்படுத்தப்பட்ட வகுப்பிலிருந்து ஒரு மாணவர், ஒரு மாணவி மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் வகுப்பிலிருந்து ஒரு மாணவர், ஒரு மாணவி என நான்கு முதல் பரிசுகள் | ரூ.6,000 | ரூ.3,000 |
| **இரண்டாம் பரிசு**<br>பிற்படுத்தப்பட்ட வகுப்பிலிருந்து ஒரு மாணவர், ஒரு மாணவி மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் வகுப்பிலிருந்து ஒரு மாணவர், ஒரு மாணவி என நான்கு இரண்டாம் பரிசுகள் | ரூ.4,000 | ரூ.2,000 |
| **மூன்றாம் பரிசு**<br>பிற்படுத்தப்பட்ட வகுப்பிலிருந்து ஒரு மாணவர், ஒரு மாணவி மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் வகுப்பிலிருந்து ஒரு மாணவர், ஒரு மாணவி என நான்கு மூன்றாம் பரிசுகள் | ரூ.2,000 | ரூ.1,000 |

குறிப்பு :

1. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.
2. ஆண்டு வருமான வரம்பு ஏதுமில்லை.
3. அரசு/அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் பயின்ற மாணவர் / மாணவியர்.
4. தமிழை ஒரு பாடமாக பயின்றிருக்க வேண்டும்.
5. கல்வித்துறை மூலம் பரிசு பெறுபவர்களுக்கு இத்துறை மூலம் பரிசுகள் வழங்கப்படமாட்டாது.
6. ஒன்றுக்கும் மேற்பட்ட மாணவ / மாணவியர் ஒரே மதிப்பெண்கள் பெற்றிருந்தால் அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்படும்.

## பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசுகள்

| பரிசுகள் விவரம் | வகுப்பு | தகுதிகள் மாணவர்கள் | பரிசுத்தொகை |
|---|---|---|---|
| ஒவ்வொரு மாவட்டத்திலும் 12–ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் முதல் மற்றும் இரண்டாம் நிலைகளில் அதிக மதிப்பெண்கள் பெற்று தமிழ்நாட்டிலுள்ள தொழில் கல்லூரிகளில் சேர்ந்து பயிலும் மாணவ, மாணவியருக்கு பேரறிஞர் அண்ணா நினைவுப்பரிசுகள் வழங்கப்படுகின்றன. | **பிவ** (இரண்டு மாணவர்கள் மற்றும் இரண்டு மாணவிகள்) **மிபிவ./சீ.ம.** (இரண்டு மாணவர்கள் மற்றும் இரண்டு மாணவிகள்) | பிவ/மிபிவ /சீம வகுப்பைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும். வருமான வரம்பு இல்லை | ஆண்டுக்கு ரூ.10,000/– வீதம் 4/5 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. |

## தந்தை பெரியார் நினைவுப் பரிசுகள்

| பரிசுகள் விவரம் | வகுப்பு | தகுதிகள் | பரிசுத்தொகை |
|---|---|---|---|
| ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளில் பட்டயப் படிப்பில் சேர்ந்து பயிலும் பிவ/மிபிவ/சீம மாணவ, மாணவியரில் 10–ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவியருக்கு தந்தை பெரியார் நினைவுப்பரிசுகள் வழங்கப்படுகின்றன. | **பிவ** (இரண்டு மாணவர்கள் மற்றும் இரண்டு மாணவிகள்) **மிபிவ./சீ.ம.** (இரண்டு மாணவர்கள் மற்றும் இரண்டு மாணவிகள்) | பிவ/மிபிவ /சீம வகுப்பைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும். வருமான வரம்பு இல்லை | ஆண்டுக்கு ரூ.10,000/– வீதம் 3 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. |

**குறிப்பு:– மேற்படி பரிசுத்திட்டங்களின் கீழ் ஒன்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் / மாணவிகள் ஒரே மதிப்பெண் பெற்றிருப்பின் அவர்கள் அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்படும்.**

## முதலமைச்சரின் தகுதி பரிசுத் திட்டம்.

12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் முதலமைச்சரின் தகுதி பரிசுத் திட்டம் என்ற புதியத் திட்டம் 2012–13ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி 12 ஆம்

வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் 500 இடங்களைப் பெறும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்த 500 மாணவர்கள் மற்றும் 500 மாணவியருக்கு (மொத்தம் 1000 மாணவ, மாணவியர்) அவர்கள் பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பு / தொழிற்படிப்பு முடிக்கும் காலம் வரை ஆண்டொண்டிற்கு ரூ. 3000 வீதம் அதிகப்பட்சம் 5 ஆண்டுகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

குறிப்பு–

1. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்.
2. வருமான வரம்பு ஏதுமில்லை.
3. தமிழை மேல்நிலை வகுப்பில் ஒரு பாடமாக பயின்று இருத்தல் வேண்டும்.
4. இப்பரிசுக்கு தனியாக விண்ணப்பிக்க தேவையில்லை.
5. தேர்வுத்துறை இயக்குநரிடமிருந்து பெறப்படும் பட்டியலில் இருந்து இப்பரிசுத் திட்டத்திற்கு மாணவ/மாணவியர் தேர்ந்தெடுக்கப்படுவர்.
6. இத்துறையின் பேரறிஞர் அண்ணா விருது பெறும் மாணவர்களுக்கு இப்பரிசு வழங்கப்படமாட்டாது.

<u>அரசுப் பள்ளியில் பயின்று 10 ஆம் வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ / மாணவியருக்கு தமிழகத்தின் சிறந்த தனியார் பள்ளிகளில் மேல்நிலைக் கல்வி அளிக்கும் திட்டம்.</u>

| திட்டத்தின் பெயர் | வகுப்பு | தகுதிகள் | சலுகைகள் | | அணுக வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|---|---|
| ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசுப்பள்ளிகளில் பயின்று மாவட்ட அளவில் 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற 10 மாணவ/மாணவியருக்கு அவர்கள் விரும்பும் தனியார் பள்ளியில் மேல்நிலைக் கல்வி பயில நிதியுதவி அளித்தல். | பிவ<br>(மூன்று மாணவர்கள் மற்றும் மூன்று மாணவிகள்)<br><br>மிபிவ./சீ.ம.<br>(இரண்டு மாணவர்கள் மற்றும் இரண்டு மாணவிகள்) | 1.பிவ/மிபிவ/சீம/ வகுப்பைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.<br>2. ஆண்டு வருமான வரம்பு ரூ.1,00,000/க்குள் இருத்தல் வேண்டும். | கல்விக் கட்டணம்<br><br>பராமரிப்புக் கட்டணம்<br><br>விடுதிக் கட்டணம்<br><br>சிறப்பு பயிற்சிக் கட்டணம்<br><br>மொத்தம் | ரூ.8,000/–<br><br>ரூ.3,650/–<br><br>ரூ.15,000/–<br><br>ரூ.1,500/–<br>ரூ.28,150/–<br>(அ)<br>ரூ.28,000/– | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் |
| | | | இத்திட்டத்தின் கீழ் உயர்ந்தபட்சமாக ஆண்டொன்றிற்கு ரூ.28,000/– வீதம் 11 மற்றும் 12–ஆம் வகுப்புகளுக்காக இரு ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. | | |

## உணவு மானியம் வழங்குதல்

**(பிற்படுத்தப்பட்டோர் / மிகப் பிற்படுத்தப்பட்டோர் / சீர் மரபினர்)**

| சலுகைகள் | தகுதி | அணுக வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| இத்துறையால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளில் தங்கிப் பயிலும் பிவ / மிபிவ / சீம மாணவ, மாணவியருக்கு, உணவு மானியத் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ.650/– வீதம் 10 மாதங்களுக்கு மட்டும் வழங்கப்படுகிறது. | பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.50,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். | சம்மந்தப்பட்ட தனியார் விடுதி நிர்வாகத் தலைவர்கள் மூலமாக கேட்புப் பட்டியல்கள் சம்மந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களால் பெறப்பட்டு வழங்கப்படுகிறது.<br>மாணவ, மாணவியர் தனியே விண்ணப்பம் ஏதும் அளிக்கத் தேவையில்லை |

## கிராமப்புற பெண் குழந்தைகளுக்கு கல்வி ஊக்குவிப்புத் தொகை வழங்குதல்

**(மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் பெண்களுக்கு மட்டும்)**

| ஊக்கத்தொகை | தகுதி | அணுக வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 3ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை – ஆண்டுக்கு ரூ.500/–<br><br>6ஆம் வகுப்பு – ஆண்டுக்கு ரூ.1,000/–<br><br>ஊக்கத் தொகையாக வழங்கப்படும். | 1. பெற்றோர்களது ஆண்டு வருமான வரம்பு 25,000/–க்குள் இருக்க வேண்டும்.<br>2. கிராமப்புறங்களில் அமைந்துள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் மாணவியர் பயில வேண்டும்.<br>3. மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் வகுப்பினை சார்ந்த பெண் குழந்தைகளுக்கு மட்டும்.<br>4. ஆதரவற்ற விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டவர்களின் பெண் குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். | சம்மந்தப்பட்ட கிராமப்புற அரசு/அரசு உதவி பெறும் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் |

இத்திட்டம் சென்னை மாவட்டம் தவிர்த்த ஏனைய மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

## விலையில்லா மிதிவண்டிகள் வழங்குதல்

| திட்டத்தின் பெயர் | தகுதி | அணுக வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| மிதிவண்டிகள் வழங்குதல்<br>அரசு / அரசு உதவி (ம) பகுதியாக நிதி உதவி பெறும் பள்ளிகளில் +1 பயிலும் மாணவ / மாணவியருக்கு வருமானம் (ம) ஜாதி பாகுபாட்டை கணக்கில் கொள்ளாமல் மிதிவண்டிகள் வழங்கப்படுகிறது. | 1. அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள், மற்றும் பகுதியாக நிதியுதவி பெறும் பள்ளிகளில் +1 பயிலும் மாணவ, மாணவியராக இருத்தல் வேண்டும்.<br>( இலவச பேருந்து பயண அட்டை பெறும் மாணவ / மாணவியருக்கும் இச்சலுகை பொருந்தும் )<br>2. இச்சலுகை பெற எவ்வித நிபந்தனையும் இல்லை.<br>குறிப்பு: பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள விடுதியில் தங்கியுள்ளோர் மற்றும் உண்டி, உறைவிடப் பள்ளி மாணவ, மாணவியர் மட்டும் மிதிவண்டிகள் பெறுவதற்குத் தகுதியற்றவர் ஆவர். | சம்மந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர் |

## பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் :–

பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பொருளாதார முன்னேற்றத்திற்காக விலையில்லா சலவைப்பெட்டிகள் வழங்குதல், தையல் இயந்திரங்கள் மற்றும் வேலைவாய்ப்பிலான பயிற்சிகள் இத்துறையால் வழங்கப்படுகின்றன. மேலும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் கடன் வழங்கும் திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.

## விலையில்லா சலவைப்பெட்டிகள் வழங்குதல்

| திட்டத்தின் பெயர் | தகுதி | அணுக வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| சலவைப் பெட்டி வழங்குதல் (விலையில்லாமல்) | பிவ , மிபிவ , சீம வகுப்பைச் சார்ந்து, சலவைத் தொழிலை மேற்கொள்பவர்களாக இருக்க வேண்டும்.<br>**குடும்ப ஆண்டு வருமானம்**<br>கிராமப்புறங்களில் ரூ.40,000/–க்கு மிகாமலும்<br>நகர்புறங்களில் ரூ.60,000/–க்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். | சம்மந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர். |

## விலையில்லா தையல் இயந்திரங்கள் வழங்குதல்

| திட்டத்தின் பெயர் | தகுதி | அணுக வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| தையல் இயந்திரங்கள் வழங்குதல் (விலையில்லாமல்) | 1. பிவ/மிபிவ/சீம வகுப்பைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.<br>2. குடும்ப ஆண்டு வருமானம் கிராமப்புறங்களில்ரூ.40,000/—க்கு மிகாமலும், நகர்ப் புறங்களில் ரூ.60,000/—க்கு மிகாமலும் இருத்தல் வேண்டும்.<br>3. துணி தைக்கத் தெரிந்திருக்கவேண்டும்.<br>4. வயது : 20 – 45 வரை. | சம்மந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர். |

## விலையில்லா வீட்டுமனைப்பட்டா வழங்குதல்

| திட்டத்தின் பெயர் | தகுதி | அணுக வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| வீட்டுமனைப்பட்டா வழங்குதல் (விலையில்லாமல்) | 1. நிலமற்ற, வீடற்ற ஏழை, பிவ/ மிபிவ/சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்தவர்களாக இருக்க வேண்டும்.<br>2. குடும்ப ஆண்டு வருமானம் கிராமப்புறங்களில் ரூ.40,000/—க்கு மிகாமலும் மற்றும் நகர்ப் புறங்களில் ரூ.60,000/—க்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். | சம்மந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர். |

## திறன் வளர்ப்பு பயிற்சி திட்டம்

தமிழகத்தில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரை பொருளாதாரா ரீதியாக மேம்படுத்தும் பொருட்டு திறன் வளர்ப்பு பயிற்சி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் மூலம், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு மிக்க பல்வேறு துறைகளில் உள்ள தொழில்நுட்பங்களை கற்றுணர்ந்து வேலை வாய்ப்புகளை பெறுவதற்கும், சுய வேலைவாய்ப்பு பெறுவதற்கும், மத்திய மற்றும் மாநில அரசு சார்ந்த பயிற்சி நிலையங்களின் மூலம் பல்வேறு பயிற்சிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பயிற்சிகளுக்கான கட்டணத் தொகை முழுவதையும் அரசே ஏற்கிறது. இத்திட்டத்தில் பயன்பெற விரும்புபவர்களின் பெற்றோர் ஆண்டு வருமான வரம்பு ரூ.1,00,000/— ஆகும்.

2012–13 ஆம் ஆண்டு முதல் திறன் வளர்ப்பு பயிற்சி திட்டத்தின் மூலம் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு ரூ.400/–(ரூபாய் நானூறு மட்டும்) மாதாந்திர பயிற்சி கால உதவித்தொகை வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது. (அரசாணை (நிலை) எண்.122, பிவ, மிபிவ (ம) சிபா நலத்துறை நாள்: 22.10.2012)

| திட்டத்தின் பெயர் | தகுதி | அணுக வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| திறன் வளர்ப்பு பயிற்சி திட்டம் | 1. தமிழகத்தைச் சார்ந்த பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும். **(சிறுபான்மையினர் நீங்கலாக)** சிறுபான்மையினருக்கென தனியாக வேலைவாய்ப்பு பயிற்சி திட்டங்கள் சிறுபான்மையினர் நல இயக்ககம் மூலம் நடத்தப்படுகின்றன.<br><br>2. பெற்றோர்/பாதுகாவலர் ஆண்டு வருமான வரம்பு ரூ.1,00,000/– ஆகும். | 1. ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலன், 2வது தளம், எழிலக விரிவாக்க கட்டடம், சேப்பாக்கம், சென்னை–5 தொலைப்பேசி:044–28551442<br><br>2. ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், 2வது தளம், எழிலக விரிவாக்க கட்டடம், சேப்பாக்கம், சென்னை–5 தொலைப்பேசி:044–28410042 |

## சீர்மரபினர் நல வாரியம்

சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படுவதைப்போல் கீழ் காணும் பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

### நலத்திட்ட உதவிகள்

| 1. விபத்து ஈட்டுறுதி திட்டத்தின் கீழ்: | | |
|---|---|---|
| | அ) விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித் தொகை | ரூ.1,00,000/– |
| | ஆ) விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | ரூ.10,000/– முதல் ரூ.1,00,000/–வரை |
| 2. | இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை | ரூ. 15,000/– |
| 3. | ஈமச்சடங்கு செலவிற்கான உதவித் தொகை | ரூ.2,000/– |

| | | |
|---|---|---|
| 4. **<u>கல்வி உதவித் தொகை</u>** | | |
| | அ) பத்தாம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ.1,000/– |
| | ஆ) பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | ரூ.1,000/– |
| | இ) 11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ.1,000/– |
| | ஈ) 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ.1,500/– |
| | உ) 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவருக்கு | ரூ.1,500/– |
| | ஊ) (i) முறையான பட்டப் படிப்பிற்கு<br>(ii) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டப்படிப்பிற்கு | ரூ.1,500/–<br>ரூ.1,750/– |
| | எ) (i)முறையான பட்ட மேற்படிப்புக்கு<br>(ii) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.4,000/–<br>ரூ.5,000/– |
| | ஏ) (i) தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு<br>(ii) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்டப்படிப்பிற்கு | ரூ.4,000/–<br>ரூ.6,000/– |
| | ஐ) (i) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு<br>(ii) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு | ரூ.6,000/–<br>ரூ.8,000/– |
| | ஒ) (i) ஐ.டி.ஐ அல்லது தொழிற்பயிற்சி படிப்பிற்கு<br>(ii) மாணவர் இல்ல வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது தொழிற்பயிற்சி படிப்பிற்கு | ரூ.1,000/–<br>ரூ.1,200/– |
| 5. | திருமண உதவித் தொகை | ரூ.2,000/– |
| 6. **<u>மகப்பேறு உதவித் தொகை</u>** | | |
| | அ) மகப்பேறு : மாதம் ஒன்றுக்கு ரூ.1000/– வீதம் 6 மாதங்களுக்கு<br>ஆ) கருச்சிதைவு/ கருக்கலைப்பு | ரூ.6,000/–<br>ரூ.3,000/– |
| 7. | மூக்குக் கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | ரூ. 500/–வரை |
| 8. | முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும் | ரூ.1,000/– |

- மேற்படி நலத்திட்ட உதவிகளைப் பெற, இவ்வாரியத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளவர்கள் அந்தந்த மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை அணுகி, உரிய படிவத்தில் பூர்த்தி செய்து, உரிய அத்தாட்சிகளுடன் விண்ணப்பம் செய்யவேண்டும்.

## தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்

தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு அமைப்புச் சாரா தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படுவதைப்போல் கீழ்க்காணும் பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. இவைத் தவிர இவர்கள் சுயதொழில் புரிய மானியம் வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது.

**நலத்திட்ட உதவிகள்**

| | | |
|---|---|---|
| 1. விபத்து ஈட்டுறுதி திட்டத்தின் கீழ்: | | |
| | அ) விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித் தொகை | ரூ.1,00,000/– |
| | ஆ) விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | ரூ.10,000/– முதல் ரூ.1,00,000/– வரை |
| 2. | இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை | ரூ. 15,000/– |
| 3. | ஈமச்சடங்கு செலவிற்கான உதவித் தொகை | ரூ.2,000/– |
| 4. கல்வி உதவித் தொகை | | |
| | அ) 1 முதல் 5ஆம் வகுப்பு வரை படித்து வரும் மாணவ, மாணவியருக்கு | ரூ.500/– (மாதம் ஒன்றுக்கு ரூபாய் 50/– வீதம் 10 மாதங்களுக்கு) |
| | ஆ) 6 முதல் 9ஆம் வகுப்பு வரை படித்து வரும் மாணவ, மாணவியருக்கு | ரூ.1000/– (மாதம் ஒன்றுக்கு ரூபாய் 100/– வீதம் 10 மாதங்களுக்கு). |
| | இ) பத்தாம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ.1000/– |
| | ஈ) பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | ரூ.1000/– |
| | உ) 11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ.1000/– |
| | ஊ) 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ.1500/– |
| | எ) 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவருக்கு | ரூ.1500/– |

| | | |
|---|---|---|
| | ஏ) முறையான பட்டப் படிப்பிற்கு<br>மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டப்படிப்பிற்கு | ரூ.1500/–<br>ரூ.1750/– |
| | ஐ) (i) முறையான பட்ட மேற்படிப்புக்கு<br>(ii) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.4000/–<br>ரூ.5000/– |
| | ஒ) (i) தொழிற்கல்வி பட்டப் படிப்புக்கு<br>(ii) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்டப்படிப்பிற்கு | ரூ.4000/–<br>ரூ.6000/– |
| | ஓ) (i) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு<br>(ii) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு | ரூ.6000/–<br>ரூ.8000/– |
| | ஔ) (i) ஐ.டி.ஐ அல்லது தொழிற்பயிற்சிப் படிப்பிற்கு<br>(ii) மாணவர் இல்ல வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது பல்தொழில் பயிற்சி படிப்பிற்கு | ரூ.1000/–<br>ரூ.1200/– |
| 5. | திருமண உதவித் தொகை | ரூ.2000/– |
| 6. <u>மகப்பேறு உதவித் தொகை</u> | | |
| | அ) மகப்பேறு: மாதம் ஒன்றுக்கு ரூ.1000/– வீதம் 6 மாதங்களுக்கு<br>ஆ) கருச்சிதைவு/ கருக்கலைப்பு | ரூ.6000/–<br>ரூ.3000/– |
| 7. | மூக்குக் கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | ரூ.500/– வரை |
| 8. | முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும் | ரூ.1000/– |
| 9. | **சுய தொழில் தொடங்க மானியம்**<br>அ) தனிநபர் மானியம்<br>ஆ) குழுக்களாக சேர்ந்து தொழில் தொடங்க தனிநபர் மானியம் (அல்லது)<br>குழுவிற்கு | <br>ரூ.7,500/–<br>ரூ.10,000/–<br>ரூ.1,25,000/– |

- மேற்படி நலத்திட்ட உதவிகளை பெற தமிழ்நாடு நரிக்குறவர் வாரிய உறுப்பினர்கள் அந்தந்த மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை அணுகி உரிய படிவத்தில் பூர்த்தி செய்து உரிய அத்தாட்சிகளுடன் விண்ணப்பம் செய்ய வேண்டும்.

## வன்னியர் பொதுச் சொத்து நலவாரியம்

தமிழகத்தில், வன்னியர் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக, பல வன்னியர் வள்ளல்களால் உயிலாக எழுதி வைக்கப்பட்ட அறக்கட்டளைகளை அடையாளம் கண்டு, அவைகளை ஒருங்கிணைத்து, அவை உருவாக்கப்பட்ட நோக்கத்தின் பலன்கள் முழுவதும் உரியவர்களுக்குச் செல்வதற்கான வழிவகைகளைக் காண்பதற்காக, தமிழக அரசு ஆணையிட்டதன் பேரில் 02.03.2009 அன்று வன்னியர் பொதுச் சொத்து நலவாரியம் தோற்றுவிக்கப்பட்டது.

இவ்வாரியத்திற்கென, 5 பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுவரையில் 79 வன்னியர் பொதுச் சொத்துக்கள்/அறக்கட்டளைகள் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

### மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய அலுவலர் மற்றும் முகவரி:

சட்ட ஆலோசகர்,
வன்னியர் பொது சொத்து நலவாரியம்,
நான்காவது தளம், எல்.எல்.ஏ. கட்டடம்,
735, அண்ணா சாலை, சென்னை – 600 002.
தொலைபேசி எண்: 044 – 28414383.

## புகார்கள் மற்றும் மேல் முறையீடுகளுக்கான வழிமுறைகள்

### பொது

பொது மக்கள் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகளைப் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டாலும், துறை அலுவலர்களின் செயல்பாடுகளில் குறையிருந்தாலும் அது குறித்து, முறையீடுகள் ஏதேனும் தெரிவிப்பதாக இருப்பின், கீழ்க்காணும் அலுவலர்களை நேரடியாகவோ அல்லது கடிதத் தொடர்புகள் மூலமாகவோ அணுகி அக்குறைகளைக் களைந்து கொள்ளலாம்:–

| அலுவலர் பணியிடம் | மேல் முறையீட்டுக்கு அணுக வேண்டிய அலுவலர் விவரம் |
|---|---|
| (i) மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் | i) சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர்.<br>ii) ஆணையர் / இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் நலம், சென்னை – 600 005.<br>iii) ஆணையர் / இயக்குநர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம், சென்னை – 600 005.<br>iv) ஆணையர் / இயக்குநர், சிறுபான்மையினர் நலம். சென்னை–600002. |
| (ii) இணை இயக்குநர் (கள்ளர் சீரமைப்பு), மதுரை | i) மாவட்ட ஆட்சித்தலைவர், மதுரை.<br>ii) ஆணையர் , மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம், சென்னை – 600 005. |

| | |
|---|---|
| (iii) ஆணையர்<br>பிற்படுத்தப்பட்டோர் நலம்,<br>சென்னை – 600 005. | அரசு முதன்மைச் செயலாளர்,<br>பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும்<br>சிறுபான்மையினர் நலத்துறை,<br>தலைமைச் செயலகம், சென்னை – 600 009. |
| (iv) ஆணையர்<br>மிகப்பிற்படுத்தப்பட்டோர்<br>மற்றும் சீர்மரபினர் நலம்,<br>சென்னை – 600 005. | அரசு முதன்மைச் செயலாளர்,<br>பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும்<br>சிறுபான்மையினர் நலத்துறை,<br>தலைமைச் செயலகம்,சென்னை – 600 009. |
| (V) ஆணையர்<br>சிறுபான்மையினர் நலம்,<br>சென்னை – 600 002 | அரசு முதன்மைச் செயலாளர்,<br>பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும்<br>சிறுபான்மையினர் நலத்துறை,<br>தலைமைச் செயலகம், சென்னை – 600 009. |

## தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

| மாநில அளவில் | பொது தகவல் அலுவலர் | மேல்முறையீட்டு அதிகாரி |
|---|---|---|
| பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, தலைமைச் செயலகம் | தொடர்புடைய சார்புச் செயலாளர்கள் (கோரப்படும் தகவலுக்கு ஏற்ப) | தொடர்புடைய துணைச் செயலாளர் / இணைச் செயலாளர். |
| பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம் | பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் நேர்முக உதவியாளர் / சிறப்பு அலுவலர் (திட்டம்) / கணக்கு அலுவலர் (கோரப்படும் தகவலுக்கு ஏற்ப) | பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் / ஆணையர் |
| மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர்மரபினர் நல இயக்ககம் | மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் நேர்முக உதவியாளர் / கணக்கு அலுவலர் (கோரப்படும் தகவலுக்கு ஏற்ப) | மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர்மரபினர் நல இயக்குநர் / ஆணையர் |
| சிறுபான்மையினர் நல ஆணையர் அலுவலகம் | சிறுபான்மையினர் நல ஆணையரின் நேர்முக உதவியாளர் | சிறுபான்மையினர் நல இயக்குநர் / ஆணையர் |
| <u>மாவட்ட அளவில்</u><br>மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் | மாவட்ட வருவாய் அலுவலர் |
| கள்ளர் சீரமைப்பு பள்ளிகள் | இணை இயக்குநர் (க.சீ) மதுரை | மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர்மரபினர் நல இயக்குநர்/ஆணையர் |

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் மற்றும் முகவரி</u>

ஆணையர்,
பிற்படுத்தப்பட்டோர் நலன்,
எழிலகம் இணைப்புக்கட்டிடம், (2–ம் தளம்)
சேப்பாக்கம், சென்னை–600 005. தொலைபேசி 044–28551442 நிகரி 044–28552642
மின் அஞ்சல் dir-bcmw@tn.nic.in

ஆணையர்,
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்,
எழிலகம் இணைப்புக்கட்டிடம், (2–ம் தளம்)
சேப்பாக்கம்,
சென்னை–600 005. தொலைபேசி : 044 – 28410042 நிகரி : 044–28592993
மின் அஞ்சல் dir-mbc@tn.nic.in

## அட்டவணை

## பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு முஸ்லீம்கள்

## மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினர் பட்டியல்

1. **அரசாணை (நிலை) எண் 85, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை (பிநசிபி), நாள் 29.07.2008**
2. **அரசாணை (நிலை) எண் 96, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை (பிநசிபி) , நாள் 08.09.2008**
3. **அரசாணை (நிலை) எண் 97, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை (பிநசிபி) , நாள் 11.09.2008,**
4. **அரசாணை (நிலை) எண் 37, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை (பிநசிபி) , நாள் 21.05.2009.**
5. **அரசாணை (நிலை) எண் 98, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை (பிநசிபி) , நாள் 05.11.2009.**
6. **அரசாணை (நிலை) எண் 6, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை (பிநசிபி) , நாள் 11.01.2011.**
7. **அரசாணை (நிலை) எண் 28, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை (பிநசிபி) , நாள் 06.04.2015.**

### <u>பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்</u>

| வ. எண் | சாதியின் பெயர் |
|---|---|
| 1 | அகமுடையார், தொழு அல்லது துளுவ வெள்ளாளர் உட்பட |
| 2 | அகரம் வெள்ளாஞ் செட்டியார் |
| 3 | ஆழ்வார், ஆழுவார், அலவர்(கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டத்தில்) |
| 4 | சேர்வை (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் நீங்கலாக) |
| 5 | நுலயர் (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்தில்) |

| | |
|---|---|
| 6 | அர்ச்சகரை வெள்ளாளர் |
| 7 | ஆர்யவதி (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்தில்) |
| 8 | ஆயிரவைசியர் |
| 9 | படகர் |
| 10 | பில்லவா |
| 11 | பொண்டில் |
| 12 | போயாஸ் (திருச்சிராப்பள்ளி , கரூர், பெரம்பலூார், புதுக்கோட்டை, நீலகிரி, சேலம், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் நீங்கலாக)<br>பெத்த போயர் (திருச்சிராப்பள்ளி, கரூர்,பெரம்பலூார் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் நீங்கலாக)<br>ஒட்டர்கள் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர்,பெரம்பலூார், புதுக்கோட்டை, மதுரை,தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள் நீங்கலாக)<br>கல் ஒட்டர்கள் (காஞ்சிபுரம், திருவள்ளூர், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், மதுரை,தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூார், திருநெல்வேலி, தூாத்துக்குடி, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள் நீங்கலாக)<br>நெல்லூார் பேட்டை ஒட்டர்கள் (வேலூார் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள் நீங்கலாக) சூரமாரி ஒட்டர்கள் (சேலம் மற்றும்  நாமக்கல் மாவட்டங்கள் நீங்கலாக) |
| 13 | சக்காலா (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூார், மதுரை, தேனி, திண்டுக்கல்,மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக). |
| 14 | சவலக்காரர் (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்தில்) |
| 15 | செட்டு அல்லது செட்டி (கோட்டார் செட்டி, ஏழுர்செட்டி, பாத்திரசெட்டி, வளையல்செட்டி, புதுக்கடை செட்டி உட்பட) (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்தில்) |
| 16 | சௌத்திரி |
| 16(A) | ஆதிதிராவிடர் வகுப்புகளிலிருந்து கிறித்தவ மதத்திற்கு மாறியவர்கள் எந்தத் தலைமுறையில் மதம் மாறியிருந்த போதிலும் –கல்வி நிலையங்களில் இடங்கள் மற்றும் பொதுப்பணிகளில் இடங்கள் ஒதுக்கீடு செய்யும் நோக்கத்திற்காக. (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்தில் கிறித்தவ மதத்திற்கு  மாறிய பரவர் வகுப்பினர் நீங்கலாக) |
| 16(B) | சி.எஸ்.ஐ. முன்னாள் எஸ்.ஐ.யு.சி (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும்  திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டத்தில்). |
| 17 | தொங்கதாசரிகள் (காஞ்சிபுரம், திருவள்ளூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூார், புதுக்கோட்டை, சென்னை, சேலம், மற்றும் நாமக்கல் மாவட்டங்கள் நீங்கலாக) |
| 18 | தேவாங்கர், சேடர் |
| 19 | டோம்ஸ் (புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் பெரம்பலூார் மாவட்டங்கள் நீங்கலாக)<br>டொம்மார்ஸ் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, வேலூார் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள் நீங்கலாக) |
| 20 | ஏனாதி |
| 21 | எழுவத்தி (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்தில்) |

| | |
|---|---|
| 22 | எழுத்தச்சர் (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்தில் ) |
| 23 | ஈழுவா (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்தில் ) |
| 24 | கங்கவார் |
| 25 | கவரா, கவரை மற்றும் வடுகர் (வடுவர்) (கம்மா, காப்பு, பலிஜா மற்றும் ரெட்டி நீங்கலாக) |
| 26 | கவுண்டர் |
| 27 | கௌடா (கம்மாளா, கலாளி மற்றும் அனுப்ப கவுண்டர் உட்பட ) |
| 28 | ஹெக்டே |
| 29 | இடிகா |
| 30 | இல்லத்துப் பிள்ளைமார், இல்லுவர், ஈழுவர் மற்றும் இல்லத்தார் |
| 31 | ஜெட்டி |
| 32 | ஜோகிஸ் (காஞ்சிபுரம், திருவள்ளூர், மதுரை, தேனி, திண்டுக்கல், கடலூர், விழுப்புரம், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள் நீங்கலாக) |
| 33 | கப்பேரா |
| 34 | கைக்கோளர், செங்குந்தர் |
| 35 | காலாடி (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, தேனி, திண்டுக்கல், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள் நீங்கலாக) |
| 36 | கலாரி குரூப், கலாரி பணிக்கர் உட்பட (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்தில்) |
| 37 | கலிங்கி |
| 38 | கள்ளர்<br>ஈசநாட்டு கள்ளர்<br>கந்தர்வகோட்டை கள்ளர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் நீங்கலாக)<br>கூட்டப்பால் கள்ளர் (புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள் நீங்கலாக)<br>பிரமலைக்கள்ளர் (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள் நீங்கலாக)<br>பெரிய சூரியூர் கள்ளர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் நீங்கலாக) |
| 39 | கள்ளர் குல தொண்டமான் |
| 40 | கல்வேலி கவுண்டர் |
| 41 | கம்பர் |
| 42 | கம்மாளர் அல்லது விஸ்வகர்மா, விஸ்வகர்மாளா (தட்டார், பொற்கொல்லர், கண்ணார், கருமார், கொல்லர், தச்சர், கல்தச்சர், கம்சலா மற்றும் விஸ்வபிராமின் உட்பட) |
| 43 | கனி, கனிசு, கனியர் பணிக்கர் |

| | |
|---|---|
| 44 | கணியாள வெள்ளாளர் |
| 45 | கன்னட சைனீகர், கன்னடியர் (மாநிலம் முழுவதும்) மற்றும் தாசபளஞ்சிகா (கோயம்புத்தூர், ஈரோடு, மற்றும் நீலகிரி மாவட்டங்கள்) |
| 46 | கன்னடிய நாயுடு |
| 47 | கற்பூர செட்டியார் |
| 48 | கருணீகர் (சீர்கருணீகர், ஸ்ரீ கருணீகர், சரட்டு கருணீகர், கைக்கட்டி கருணீகர், மதுவழி கணக்கர், சோழி கணக்கர் மற்றும் சுண்ணாம்பு கருணீகர்) |
| 49 | காசுக்கார செட்டியார் |
| 50 | கடேசர், பட்டம்கட்டி |
| 51 | கவுத்தியார் |
| 52 | கேரள முதலி |
| 53 | கார்வி |
| 54 | கத்ரி |
| 55 | கொங்கு வைஷ்ணவா |
| 56 | கொங்கு வெள்ளாளர் (வெள்ளாள கவுண்டர், நாட்டு கவுண்டர், நரம்பு கட்டி கவுண்டர், திருமுடி வெள்ளாளர், தொண்டு வெள்ளாளர், பாலகவுண்டர், பூசாரி கவுண்டர், அனுப்ப வெள்ளாள கவுண்டர், படைத்தலை கவுண்டர், செந்தலை கவுண்டர், பவளம் கட்டி வெள்ளாள கவுண்டர், பால வெள்ளாள கவுண்டர், சங்கு வெள்ளாள கவுண்டர் மற்றும் ரத்தினகிரி கவுண்டர் உட்பட) |
| 57 | கொப்பல வேலமா |
| 58 | கொட்டேயர் |
| 59 | கிருஷ்ணவாகா (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்தில்) |
| 60 | குடிகார வெள்ளாளர் |
| 61 | குடும்பி (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்தில் ) |
| 62 | குக வெள்ளாளர் |
| 63 | குஞ்சிடிகர் |
| 63(A) | கன்னியாகுமரி மாவட்டத்தில் இலத்தீன் கத்தோலிக்க வண்ணார் நீங்கலாக உள்ள இலத்தீன் கத்தோலிக்கர்கள். |
| 63(B) | திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்தில் உள்ள இலத்தீன் கத்தோலிக்கர்கள் |
| 64 | லம்பாடி |
| 65 | லிங்காயத் (ஜங்கமா) |
| 66 | மராட்டா (பிராமணர் அல்லாதார்) (நாம்தேவ் மராட்டா உட்பட) |
| 67 | மலயர் |
| 68 | மாலே |
| 69 | மணியக்கார் |

| | |
|---|---|
| 70 | மறவர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள் நீங்கலாக)<br>கருமறவர்<br>அப்பநாடு கொண்டயம்கோட்டை மறவர் (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள் நீங்கலாக)<br>செம்பநாடு மறவர் (சிவகங்கை, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள் நீங்கலாக) |
| 71 | மூன்று மண்டை எண்பத்து நாலு (84) ஊர் சோழிய வெள்ளாளர் |
| 72 | மூப்பன் |
| 73 | முத்துராஜா, முத்துராச்சா, முட்டிரியர், முத்தரையர் |
| 74 | நாடார், சாணார், கிராமணி (கிறித்துவர் நாடார், கிறித்துவ சாணார் மற்றும் கிறித்துவ கிராமணி உட்பட) |
| 75 | நகரம் |
| 76 | நாயக்கர் (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்தில்) |
| 77 | நன்குடி வெள்ளாளர் |
| 78 | நாஞ்சில் முதலி (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்தில்) |
| 79 | ஓடர் (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்தில்) |
| 80 | ஒடியா |
| 81 | ஊற்றுவள நாட்டு வெள்ளாளர் |
| 82 | ஓ.பி.எஸ். வெள்ளாளர் |
| 83 | ஒவச்சர் |
| 84 | பையூர் கோட்ட வெள்ளாளர் |
| 85 | பாமுலு |
| 86 | பாணர் (இவ்வகுப்பு தாழ்த்தப்பட்ட வகுப்பாக அறிவிக்கப்பட்டுள்ள கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டம் நீங்கலாக) |
| 86 A | பாண்டிய வெள்ளாளர் |
| 87 | –விடுபட்டது– |
| 88 | கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கத்திக்காரர் |
| 89 | பன்னிரெண்டாம் செட்டியார் அல்லது உத்தம செட்டியார் |
| 90 | பார்கவகுலம் (சுருதிமார், நத்தமார், மலையமார், மூப்பனார் மற்றும் நயினார் உட்பட ) |
| 91 | பெருக்கி (பெருக்கி பலிஜா உட்பட) |
| 92 | பெரும் கொல்லர் (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்தில்) |
| 93 | பொடிகார வெள்ளாளர் |
| 94 | பூலுவ கவுண்டர் |
| 95 | பொரயா |
| 96 | புலவர் (கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில்) |

| | |
|---|---|
| 97 | புல்லுவர் அல்லது பூலுவர் |
| 98 | பூசாலா |
| 99 | ரெட்டி (கஞ்சம்) |
| 100 | சாது செட்டி (தெலுகு செட்டி, **24** மனை தெலுகு செட்டி உட்பட) |
| 101 | சக்கரவர் அல்லது கவதி (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்தில்) |
| 102 | சாலி வாகனா |
| 103 | சாலியர், பத்ம சாலியர், பட்டு சாலியர், பட்டரியர் மற்றும் அதவியர் |
| 104 | சவலக்காரர் |
| 105 | சேனைத் தலைவர், சேனைக்குடியர், இலை வாணியர் |
| 105 A | சேரகுல வெள்ளாளர் |
| 106 | சௌராஷ்டிரா (பட்டு நூல்காரர்) |
| 107 | சோழிய வெள்ளாளர் (சோழ வெள்ளாளர், வெற்றிலைக்காரர், கொடிக்கால்காரர் மற்றும் கீரைக்காரர் உட்பட) |
| 108 | ஸ்ரீ சாயர் |
| 109 | சுந்தரம் செட்டி |
| 110 | தொகட்ட வீர ஷத்திரியா |
| 111 | தொல் கொல்லர் (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்தில்) |
| 112 | தொளுவ நாயக்கர் மற்றும் வெத்தலைக்கார நாயக்கர் |
| 113 | --விடுபட்டது-- |
| 114 | தோரியர் |
| 115 | உக்கிரக்குல ஷத்திரிய நாயக்கர் |
| 116 | உப்பரா, உப்பிலியா மற்றும் சகரா |
| 117 | ஊராளி கவுண்டர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் நீங்கலாக) மற்றும் ஒருடைய கவுண்டர் அல்லது ஊருடைய கவுண்டர் (மதுரை, தேனி, திண்டுக்கல், கோயம்புத்தூர், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில்) |
| 118 | உரிக்கார நாயக்கர் |
| 118 A | வீரகொடி வெள்ளாளர் |
| 119 | வல்லம்பர் |
| 119 A | வல்லநாட்டு செட்டியார் |
| 120 | வால்மீகி |
| 121 | வாணியர், வாணிய செட்டியார் (கண்டலா, கணிகா, தெளிகுலா மற்றும் செக்காலர் உட்பட) |
| 122 | வேடுவர் மற்றும் வேடர் (இவ்வகுப்பு ஆதிதிராவிடர் வகுப்பாக அறிவிக்கப்பட்டுள்ள கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டம் நீங்கலாக) |
| 123 | வீர சைவர் (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்தில்) |
| 124 | வேளர் |
| 125 | வெள்ளான்செட்டியார் |
| 126 | வெளுத்தோடத்து நாயர் (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்தில்) |

| | |
|---|---|
| 127 | வொக்கலிகர் (வக்கலிகர், ஒக்கலிகர், கப்பிலியர், கப்பிலியா, ஒக்கலிக கவுடா, ஒக்கலிய கௌடா, ஒக்கலிய கவுடர், ஒக்கலியா கவுடா உட்பட) |
| 128 | வயநாடு செட்டி (நீலகிரி மாவட்டம்) |
| 129 | யாதவர் (இடையர், வடுக ஆயர் அல்லது வடுக இடையர் அல்லது கொல்லா என்ற அறியப்படும் தெலுங்கு மொழி பேசும் இடையர் மற்றும் அஸ்தாந்திர கொல்லா உட்பட) |
| 130 | யவனா |
| 131 | எருகுலா |
| 131(A) | எந்தவொரு இந்து பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் அல்லது மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் (மீனவர், பர்வதராஜகுலம், பட்டனவர், செம்படவர், முக்குவர் அல்லது முகையர் மற்றும் பரவர் வகுப்புகளிலிருந்து கிறித்துவ மதத்திற்கு மாறியவர்கள் நீங்கலாக) அல்லது சீர்மரபினர் வகுப்புகளிலிருந்து கிறித்துவ மதத்திற்கு மாறியவர்கள். |
| 132 | பத்து வயது அடையும் முன்னரே பெற்றோரை இழந்த அனாதை மற்றும் ஆதரவற்ற சிறுவர்கள் அவர்களை கவனித்து கொள்ள சட்டப்படியோ அல்லது மரபுப்படியோ எவரும் இல்லாதவர், அரசு அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகள் அல்லது அனாதை இல்லங்களில் அனுமதிக்கப்பட்டவர். |

## II. <u>பிற்படுத்தப்பட்டோர் **வகுப்பு கிறித்தவர்கள்**</u>

**நீக்கப்பட்டது**

## III. <u>பிற்படுத்தப்பட்டோர் **வகுப்பு முஸ்லீம்கள்**</u>

| | |
|---|---|
| 1 | அன்சர் |
| 2 | தெக்கனி முஸ்லீம்கள் |
| 3 | துடிகுலா |
| 4 | லப்பை (ராவுத்தர் மற்றும் மரைக்காயர் உட்பட (பேசும் மொழி தமிழ் அல்லது உருது எதுவாக இருந்தாலும்) |
| 5 | மாப்பிள்ளா |
| 6 | ஷேக் |
| 7 | சையத் |

## IV. <u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் **வகுப்பு**</u>

| | |
|---|---|
| 1 | அம்பலக்காரர் |
| 2 | ஆண்டிப்பண்டாரம் |
| 2A | அரயர் ( கன்னியாகுமரி மாவட்டம் ) |
| 3 | பெஸ்தா, சிவியர் |
| 4 | பட்ராஜு (சத்திரிய ராஜுக்கள் நீங்கலாக) |
| 5 | போயர், ஒட்டர் |
| 6 | தாசரி |
| 7 | டொம்மாரா |
| 8 | எரவல்லர் (இவ்வகுப்பு பழங்குடியின வகுப்பாக அறிவிக்கப்பட்டுள்ள கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டம் நீங்கலாக) |
| 9 | இசை வெள்ளாளர் |
| 10 | ஜாம்புவனோடை |
| 11 | ஜங்கம் |
| 12 | ஜோகி |

| | |
|---|---|
| 13 | கொங்கு செட்டியார் (கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் மட்டும்) |
| 14 | கொரச்சா |
| 15 | குலாலா (குயவர் மற்றும் கும்பரர் உட்பட) |
| 16 | குன்னுவர் மண்ணாடி |
| 17 | குரும்பா, குரும்பா கவுண்டர் |
| 18 | குருகினி செட்டி |
| 18A | இலத்தின் கத்தோலிக்க கிறித்துவ வண்ணார் ( கன்னியாகுமரி மாவட்டம் ) |
| 19 | மருத்துவர், நாவிதர், மங்களா, வேலக்கட்டளவர், வேலக்கட்டள நாயர் மற்றும் பிரனோபகாரி |
| 20 | மோண்ட கொல்லா |
| 21 | மவுண்டாடன் செட்டி |
| 22 | மகேந்திரா மேதரா |
| 23 | முட்லகம்பட்டி |
| 24 | நரிக்குறவர் ( குருவிக்காரர்) |
| 25 | நோக்கர் |
| 25A | பணிசெய்வான் / பணிசிவன் |
| 26 | வன்னியகுல ஷத்திரியா (வன்னியர், வன்னியா, வன்னியகவுண்டர், கவுண்டர் அல்லது கண்டர், படையாச்சி, பள்ளி மற்றும் அக்னிகுல ஷத்திரியா உட்பட) |
| 27 | பரவர் (இவ்வகுப்பு ஆதிதிராவிடர் வகுப்பாக அறிவிக்கப்பட்டுள்ள கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டம் நீங்கலாக) |
| 27A | பரவர் வகுப்பில் இருந்து கிருத்துவ மதத்திற்கு மாறியவர்கள் – கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டத்தை சார்ந்த பரவர் வகுப்பில் இருந்து கிருத்துவ மதத்திற்கு மாறியவர்கள் உட்பட. |
| 28 | மீனவர் (பர்வதராஜகுலம், பட்டணவர், செம்படவர் ) (கிருத்துவ மதத்திற்கு மாறியவர்கள் உட்பட) |
| 29 | முக்குவர் அல்லது முகையர் (கிருத்துவ மதத்திற்கு மாறியவர்கள் உட்பட) |
| 30 | புண்ணான் வேட்டுவ கவுண்டர் |
| 31 | பண்ணயார் (கன்னியாகுமரி மாவட்டத்தில் கத்திகாரர் நீங்கலாக) |
| 32 | சாத்தாத ஸ்ரீ வைஷ்ணவா (சாத்தானி, சட்டாடி மற்றும் சட்டாட ஸ்ரீ வைஷ்ணவா உட்பட) |
| 33 | சோழிய செட்டி |
| 34 | தெலுகுபட்டி செட்டி |
| 35 | தொட்டிய நாய்க்கர் (ராஜகம்பளம், கொல்லவார், சில்லவார், தொக்கலவார் தொழுவநாய்க்கர் மற்றும் எர்ரகொல்லர் உட்பட) |
| 36 | தொண்டமான் |
| 36A | தொரயர் ( நீலகிரி ) |
| 36B | தொரயர் (சமவெளி) |
| 36C | திருநங்கைகள் அல்லது அரவாணி |
| 37 | வலையர் (செட்டிநாடு வலையர்கள் உட்பட) |
| 38 | வண்ணார் (சலவைத் தொழிலாளர்) ( அகஸா, மடிவலா, ஏகாலி, ராஜகுலா, வெலுத்தாடர் மற்றும் ராஜாகா உட்பட) (இவ்வகுப்பு ஆதிதிராவிடர் வகுப்பாக அறிவிக்கப்பட்டுள்ள கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டம் நீங்கலாக) |
| 39 | வேட்டைக்காரர் |
| 40 | வேட்டுவகவுண்டர் |
| 41 | யோகீஸ்வரர் |

## V. சீர்மரபினர் வகுப்பினர்

| | |
|---|---|
| 1 | ஆத்தூர் கீழ்நாடு கொறவர் (சேலம், நாமக்கல், கடலூர், விழுப்புரம், இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்கள்) |
| 2 | ஆத்தூர் மேல்நாடு கொறவர் (சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்) |
| 3 | அப்பநாடு கொண்டையம் கோட்டை மறவர் (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள்) |
| 4 | அம்பலக்காரர் (தஞ்சாவூர், நாகப்பட்டிணம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 5 | அம்பலக்காரர் (சூரியனூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்) |
| 6 | போயாஸ் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, நீலகிரி, சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள்) |
| 7 | பட்டு துர்கா |
| 8 | சி.கே. கொறவர் (கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள்) |
| 9 | சக்காளர் (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் நீலகிரி மாவட்டங்கள்) |
| 10 | செங்கையம்புடி கொறவர் (வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்) |
| 11 | செட்டிநாடு வலையர் (சிவகங்கை, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள்) |
| 12 | டோம்ஸ் (புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள்) |
| 13 | தொப்ப கொறவர் (சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்) |
| 14 | டொம்மார்ஸ் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, வேலூர், மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்) |
| 15 | தொங்க போயா |
| 16 | தொங்க ஊர் கொரச்சாஸ் |
| 17 | தேவகுடி தலையாரி |
| 18 | தொப்பை கொரச்சாஸ் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 19 | தாபி கொறவர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்) |
| 20 | தொங்க தாசரி (காஞ்சிபுரம், திருவள்ளூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் , புதுக்கோட்டை, சென்னை, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்) |
| 21 | கொரல்ல தொட்ட போயா |
| 22 | குடு தாசரி |
| 23 | கந்தர்வ கோட்டை கொறவர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள்) |
| 24 | கந்தவர் கோட்டை கள்ளர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 25 | இஞ்சி கொறவர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 26 | ஜோகி (காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை, கடலூர், விழுப்புரம், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்) |

| | |
|---|---|
| 27 | ஜாம்பவனோடை |
| 28 | காலாடி (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, தேனி, திண்டுக்கல், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள்) |
| 29 | கல்லோட்டர் (காஞ்சிபுரம், திருவள்ளூர், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், மதுரை, தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்) |
| 30 | கொறவர் (காஞ்சிபுரம், திருவள்ளூர், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, சென்னை , மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் நீலகிரி மாவட்டங்கள்) |
| 31 | களிஞ்சி தாபி கொறவர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 32 | கூட்டப்பால் கள்ளர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 33 | காலா கொறவர் (தஞ்சாவூர், நாகப்பட்டிணம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 34 | கலவதிலபோயாஸ் |
| 35 | கேப்மாறி (காஞ்சிபுரம், திருவள்ளூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள்) |
| 36 | மறவர்கள் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள்) |
| 37 | மொண்ட கொறவர் |
| 38 | மொண்டகொல்லா (சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்) |
| 39 | முட்லகம்பட்டி (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 40 | நோக்கர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 41 | நெல்லூரபேட்டை ஒட்டர் (வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள் ) |
| 42 | ஒட்டர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள்) |
| 43 | பெத்தபோயர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 44 | பொன்னை கொறவர் (வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்) |
| 45 | பிரமலைக்கள்ளர் (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள்) |
| 46 | பெரியசூரியூர் கள்ளர் (திருச்சிராப்பள்ளி, கருர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் ) |
| 47 | படையாச்சி (கடலூர் மாவட்டத்தில் வெள்ளையன் குப்பம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தென்னூர்) |
| 48 | புண்ணாண்வேட்டுவக்கவுண்டர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 49 | சேர்வை (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |

| | |
|---|---|
| 50 | சேலம் மேல்நாடுகொறவர் (மதுரை, தேனி, திண்டுக்கல், கோயம்புத்தூர், ஈரோடு, புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், சேலம், நாமக்கல், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்) |
| 51 | சேலம் உப்பு கொறவர் ( சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்) |
| 52 | சக்கரதாமடை கொறவர் (வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்) |
| 53 | சாரங்கபள்ளி கொறவர் |
| 54 | சூரமாறி ஒட்டர் (சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்) |
| 55 | செம்பநாடு மறவர் ( சிவகங்கை, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள்) |
| 56 | தள்ளிகொறவர் (சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்) |
| 57 | தெலுங்கப்பட்டி செட்டி (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 58 | தொட்டியநாய்க்கர் (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், காஞ்சிபுரம், திருவள்ளூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, திருநெல்வேலி, தூத்துக்குடி, சேலம், நாமக்கல், வேலூர், திருவண்ணாமலை, கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்கள்) |
| 59 | தோகமலைகொறவர்கள் அல்லது கேப்மாறி (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 60 | உப்புகொறவர் அல்லது செட்டிபல்லிகொறவர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, மதுரை, தேனி, திண்டுக்கல், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்) |
| 61 | ஊராளிகவுண்டர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 62 | வயல்பாடு அல்லது நாவல்பேட்டா கொரச்சாஸ் |
| 63 | வடுவார்பட்டி கொறவர் (மதுரை, தேனி, திண்டுக்கல், இராமநாதபுரம், சிவங்கை, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் |
| 64 | வலையர் (மதுரை, தேனி, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்கள்) |
| 65 | வேட்டைக்காரர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 66 | வேட்டக்கொறவர் (சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்) |
| 67 | வரகனேரி கொறவர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 68 | வேட்டுவ கவுண்டர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |

# தமிழ்நாடு வக்ஃப் வாரியம்

வக்ஃப் சட்டம் 1954 தமிழகத்தில் 15.01.1955ல் அமல்படுத்தப்பட்டது. முதல் வாரியம் 18.01.1958ல் அமைக்கப்பட்டது. 1995–ம் ஆண்டு வக்ஃப் சட்டம் (மைய அரசு சட்டம் 43/1995) 01.01.1996 முதல் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது. அதன்படி தமிழ்நாடு வக்ஃப் வாரியம் அரசாணை (நிலை) எண்.221, வணிகவரி மற்றும் சமய அறநிலையத் துறை நாள்.10.06.1997ன்படி 13 உறுப்பினர்களைக் கொண்டு வாரியம் திருத்தி அமைக்கப்பட்டது. வாரியம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படுகிறது. புதிய வாரியம் அரசாணை (நிலை) எண்.22, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தபப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (ட்டி1) துறை நாள். 03.07.2013 மூலம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

## 1. பணியமைப்பு

முதன்மை செயல் அலுவலர் தலைமை நிர்வாகியாவார். சிறந்த நிர்வாக வசதிக்காக மாநிலத்தில் சென்னை, பூவிருந்தவல்லி, வேலூர், பண்ருட்டி, சேலம், கோயமுத்தூர், தஞ்சாவூர், திருச்சி, மதுரை, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் 11 சரக அலுவலகங்கள் வக்ஃப் கண்காணிப்பாளர்கள் தலைமையில் செயல்படுகிறது. மேலும் 32 மாவட்டங்களிலும் வக்ஃப் ஆய்வாளர்கள் பணிபுரிகின்றனர்.

## 2. தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் பணிகள்

வக்ஃப் வாரியத்தின் பலவகைப்பட்ட பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. ஒவ்வொரு வக்ஃபின் தோற்றம், வருவாய், நோக்கம் பயனாளிகள் சம்பந்தப்பட்ட தகவல்கள் அடங்கிய பதிவுரு (ரிகார்ட்) பேணுதல்.
2. வக்ஃப் சொத்துக்களும் அதன் வருமானமும் எந்த நோக்கத்திற்காக வக்ஃப் உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காக செயல்படுத்தப்படுகிறதா என்று உறுதி செய்தல்
3. வக்ஃப் நிர்வாகத்திற்காக கட்டளையிடுதல்.
4. வக்ஃப்களின் நிர்வாகத்திற்காக திட்டம் தீட்டிக்கொடுத்தல்.
5. வக்ஃப்களின் கணக்கை தணிக்கை செய்வதற்கு ஏற்பாடு செய்தல் மற்றும் முத்தவல்லிகள் சமர்ப்பிக்கும் வரவு செலவு (பட்ஜெட்) கணக்கினை ஆய்வு செய்து அங்கீகரித்தல்.
6. வக்ஃப் சட்டப்படி முத்தவல்லிகளை நியமனம் செய்தல் மற்றும் நீக்குதல்.
7. இழந்த வக்ஃப் சொத்துக்களை மீட்க நடவடிக்கை எடுத்தல்.
8. வக்ஃப் மற்றும் வக்ஃப் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை நடத்துதல்.
9. வக்ஃப் சட்டம் 1995 (திருத்திய சட்டம் 27/2013) மற்றும் வக்ஃப் சொத்துக்கள் குத்தகை விதிகள் 2014–ன்படி குத்தகை விடுவதற்கு அனுமதி வழங்குதல்.
10. வக்ஃப் நிதியை நிர்மானித்தல்.
11. வக்ஃப் சொத்துக்கள் சம்பந்தமாக வாரியத்திற்கு அவ்வப்போது தேவைப்படும் தகவல்களை முத்தவல்லிகளிடம் கேட்டல்.

12. வக்ஃப் சொத்துக்களை ஆய்வு செய்தல், கணக்குகள், ஆவணங்கள், வக்ஃப் நாமாக்கள் மற்றும் பத்திரங்களை ஆய்வு செய்தல்.
13. வக்ஃப் சொத்தின் தன்மை பரப்பளவு ஆகியவற்றை ஆராய்ந்து முடிவு செய்தல் மற்றும் தேவைப்படும் போது வக்ஃபு சொத்துக்களை அளவை செய்தல்.
14. வக்ஃப்களைக் கட்டுப்படுத்துதல், பராமரித்தல் மற்றும் நிர்வாகம் செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் எல்லா நடவடிக்கைகளிலும் ஈடுபடுதல்.

இது நீங்கலாக அரசு வழங்கும் மானியத் தொகை மூலம் நலிவுற்ற வக்ஃப் நிறுவனங்களில் பெரிய அளவிலான பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகளை மேற்கொள்ள பள்ளிவாசல் மற்றும் தர்காக்களுக்கு நிதி வழங்குதல், உலமாக்கள் ஓய்வூதியம் வழங்குதல் மற்றும் **1986**ம் ஆண்டு முஸ்லிம் பெண்கள் (மணவிலக்கில் உரிமை பாதுகாப்பு) சட்டத்தின்படி விவாகரத்து செய்யப்பட்ட முஸ்லிம் பெண்களுக்கு வாழ்க்கைச் செலவுத் தொகை வழங்குதல் போன்ற பணிகளில் வாரியம் ஈடுபட்டு வருகிறது.

## 3. <u>கணக்கீட்டிற்குள் வரும் வக்ஃப்கள் மற்றும் கணக்கீட்டிற்குள் வராத வக்ஃப்கள்</u>

வக்ஃப் சட்டம் 1995 (திருத்திய சட்டம் 27/2013)ன் பிரிவு 72 (1) ன்படி, ரூ.5000/–க்கு அதிகமான ஆண்டு நிகர வருமானம் கொண்ட வக்ஃபுகளுக்கு சகாயத் தொகை விதிக்கப்படுகிறது. இவை கணக்கீட்டிற்குள் வரும் வக்ஃப்கள் ஆகும். ரூ.5000/–க்கு குறைவாக நிகர வருமானம் கொண்ட வக்ஃப்கள் கணக்கீட்டிற்குள் வராத வக்ஃப்கள் ஆகும்.

| | | |
|---|---|---|
| கணக்கீட்டிற்குள் வரும் வக்ஃப்கள் | – | 2218 |
| கணக்கீட்டிற்குள் வராத வக்ஃப்கள் | – | 4511 |
| மொத்த வக்ஃப்கள் | | 6729 |

## 4. <u>பதிவு செய்யப்பட்ட / பதிவு செய்யப்படாத வக்ஃப்கள்</u>

வக்ஃப் சட்டம் 1995 (திருத்திய சட்டம் 27/2013) பிரிவு 36–ன்படி ஒவ்வொரு வக்ஃபும் வாரியத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட வக்ஃப்கள் | – | 3520 |
| வாரியத்தில் பதிவு செய்யப்படாத (ஆனால்அரசிதழில் வெளியிடப்பட்ட) வக்ஃப்கள் | – | 3209 |
| மொத்த வக்ஃப்கள் | | 6729 |

## 5. வாரியத்தின் வருவாய்

வக்ஃப் சட்டம் **1995** (திருத்திய சட்டம் **27/2013**) பிரிவு **72**–ன்படி வக்ஃப் நிறுவனங்களிலிருந்து வசூலிக்கப்படும் 7% சகாயத் தொகையே வாரியத்தின் பிரதான வருவாய் ஆகும். கடந்த இரண்டு ஆண்டுகளில் பின்வருமாறு சகாயத் தொகை வசூல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| **2013–14** | – | ரூ.**4.14** கோடி |
| **2014–15** | – | ரூ.**4.00** கோடி |

## 6. மத்திய வக்ஃப் கவுன்சிலுக்கு சகாயத்தொகை( 1%) செலுத்துதல்

வக்ஃப் சட்டம்**1995** (திருத்திய சட்டம் **27/2013**) பிரிவு **10(1)** ன்படி, வாரியம் தனது வக்ஃப் நிதியிலிருந்து மத்திய வக்ஃப் கவுன்சிலுக்கு வக்ஃப்களிடமிருந்து பெறப்பட்ட சகாயத் தொகையில் 7–ல் **1** பங்கை செலுத்த வேண்டும். அதன்படி செலுத்தப்பட்ட தொகை

| | | |
|---|---|---|
| **2013–14** | – | ரூபாய்.**30.00** இலட்சம் |
| **2014–15** | – | ரூபாய்.**40.00** இலட்சம் |

## 7. வக்ஃப் சொத்துக்களை அபிவிருத்தி செய்ய மத்திய வக்ஃப் கழகத்தால் வழங்கப்படும் கடன் தொகை

வக்ஃப் சொத்துக்களின் மேம்பாட்டுக்கு நிதி உதவி தேவைப்படும் வக்ஃப் நிறுவனங்களுக்கு மத்திய வக்ஃப் கழகம் மேம்பாட்டுக் கடன் வழங்குகிறது. திட்ட மதிப்பீட்டில் **75** % வரை கடன் வழங்கப்படுகிறது. கடன் தொகைக்கு **6** % நன்கொடை (வட்டி) விதிக்கப்படுகிறது.

## 8. வக்ஃப் தீர்ப்பாயங்களை அமைத்தல்

வக்ஃப் சட்டம் **1995** (திருத்திய சட்டம் **27/2013**) பிரிவு **83**ன்படி தமிழ் நாடு அரசு தமிழ்நாட்டில் **25** வக்ஃப் தீர்ப்பாயங்களை அமைத்துள்ளது. வக்ஃபுகள் மற்றும் வக்ஃப் சொத்துக்கள் தொடர்பான பிரச்சினைகளை வக்ஃப் சட்டம் **1995**ன்படி விசாரணை செய்து முடிவெடுத்தல் அதன் பணியாகும்.

<u>கீழ்க்கண்டுள்ள இடங்களில் வக்ஃப் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டுள்ளது</u>

| வ. எண் | தீர்பாயத்தின் பெயர் மற்றும் இடம் | அதிகார வரம்பு மாவட்டத்தின் பெயர் |
|---|---|---|
| 1. | மாநகர் உரிமையியல் நீதிமன்றம், சென்னை | சென்னை |
| 2. | முதன்மை சார்பு நீதிமன்றம், செங்கல்பட்டு | காஞ்சிபுரம் |
| 3. | முதன்மை சார்பு நீதிமன்றம், திருவள்ளூர் | திருவள்ளூர் |
| 4. | சார்பு நீதிமன்றம், தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 5. | சார்பு நீதிமன்றம், வேலூார் | வேலூார் |
| 6. | சார்பு நீதிமன்றம், உதகமண்டலம் | நீலகிரி |
| 7. | சார்பு நீதிமன்றம், சிவகங்கை | சிவகங்கை |
| 8. | சார்பு நீதிமன்றம், ஈரோடு | ஈரோடு |
| 9. | சார்பு நீதிமன்றம், புதுக்கோட்டை | புதுக்கோட்டை |
| 10. | சார்பு நீதின்றம், இராமநாதபுரம் | இராமநாதபுரம் |
| 11. | முதன்மை சார்பு நீதிமன்றம், கோயமுத்துார் | கோயமுத்தூர் மற்றும் திருப்பூர் |
| 12. | சார்புநீதிமன்றம், கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி |
| 13. | சார்பு நீதிமன்றம், திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 14. | முதன்மை சார்பு நீதிமன்றம், ஸ்ரீவில்லிபுத்துார் | விருதுநகர் |
| 15. | முதன்மை சார்பு நீதிமன்றம், நாகர்கோவில் | கன்னியாகுமரி |
| 16. | முதன்மை சார்பு நீதிமன்றம், மதுரை | மதுரை மற்றும் தேனி |
| 17. | முதன்மை சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம் | நாகை மற்றும் திருவாரூர் |
| 18. | முதன்மை சார்பு நீதிமன்றம், சேலம் | சேலம் மற்றும் நாமக்கல் |
| 19. | சார்பு நீதிமன்றம், கடலுார் | கடலுார் |
| 20. | சார்பு நீதிமன்றம், தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 21. | முதன்மை சார்பு நீதிமன்றம், திருநெல்வேலி | திருநெல்வேலி |
| 22. | முதன்மை சார்பு நீதிமன்றம், திருச்சி | திருச்சி, கரூர் மற்றும் பெரம்பலுார் / அரியலுார் |
| 23. | சார்பு நீதிமன்றம், திருவண்ணாமலை | திருவண்ணாமலை |
| 24. | சார்பு நீதிமன்றம், விழுப்புரம் | விழுப்புரம் |
| 25. | சார்பு நீதிமன்றம், தருமபுரி | தருமபுரி |

## 9. நிர்வாக மானியம்

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு வக்ஃப் நிறுவனங்களால் செலுத்தப்படும் சகாயத் தொகை வாரியத்தின் மொத்த செலவிற்கு போதுமானதாக இல்லாததால், தமிழ்நாடு அரசு நிர்வாக மானியம் வழங்குகிறது. தமிழ் நாடு அரசு தமிழ் நாடு வக்ஃப் வாரியத்திற்கு நிர்வாக மானியமாக ஆண்டுதோறும் ரூ.45.00 இலட்சம் ஒதுக்கி வந்தது. தற்போது அரசு நிர்வாக மானியத்தை 2011—2012 முதல் ரூ.45.00 இலட்சத்திலிருந்து ரூ. 1.00 கோடியாக உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளது. தற்போது நிர்வாக மானியமாக 2014—15ம் ஆண்டிற்கு ரூ.1.00 கோடி அரசு வழங்கி உள்ளது.

## 10. முஸ்லிம் பெண்கள் (மண விலக்கில் உரிமை பாதுகாப்பு ) சட்டம், 1986—ஐ, நடைமுறைப்படுத்துதல்

முஸ்லிம் பெண்கள் (மணவிலக்கில் உரிமைப் பாதுகாப்பு) சட்டம் 1986 பிரிவு 4 (2)ன்படி தகுதிவாய்ந்த நீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையில் விவாகரத்து செய்யப்பட்ட முஸ்லிம் பெண்களுக்கு வாழ்க்கைச் செலவுத் தொகை தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தால் வழங்கப்படுகிறது. இவ்வகைக்கு தமிழ்நாடு அரசு வக்ஃபு வாரியத்திற்கு ஆண்டுதோறும் மானியம் வழங்குகிறது. 2014—15 ஆம் ஆண்டில் அரசால் ரூ.58,200/— மானியம் வழங்கப்பட்டுள்ளது.

## 11. வக்ஃப் வாரியத்தால் அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்கள்.

### (i). உலமா ஓய்வூதிய (தமிழ் நாடு) திட்டம் 1981

| | |
|---|---|
| 1. திட்டத்தின் பெயர் | உலமா ஓய்வூதிய (தமிழ் நாடு) திட்டம் 1981 |
| 2. திட்டத்தின்படி ஒதுக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை | 2,600 |
| 3. பயன்பெறுவோர் எண்ணிக்கை | 2,600 |
| 4. ஓய்வூதியமாக வழங்கப்படும் தொகை | ரூ.1,000/—மாதம் ஒன்றுக்கு |
| 5. ஓய்வூதியம் வழங்கப்படுவதற்கான தகுதிகள் | விண்ணப்பதாரர்<br>(அ) உலமாவாக இருக்கவேண்டும்.<br>(ஆ) வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட, அல்லது அளவை செய்யப்பட்டு தமிழ் நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்ட வக்ஃப் நிறுவனத்தில் குறைந்தபட்சம் 20 ஆண்டுகள் பேஷ் இமாமாக அல்லது முஅஜ்ஜினாக அல்லது அரபி ஆசிரியராக அல்லது முஜாவர் ஆக பணி புரிந்திருக்க வேண்டும். |
| | (இ) 60 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.<br>(ஈ) மாத வருமானம் ரூ.1000/—க்குள் இருக்க வேண்டும். |

| | |
|---|---|
| | (உ) ஊனமுற்றோருக்கு 60 வயதுக்கு பதிலாக 50 வயது மற்றும் 20 ஆண்டுப் பணிக்கு பதிலாக 10 ஆண்டுப் பணி என விதிகளில் தளர்வு. |
| 6. யாருக்கு விண்ணப்பிக்க வேண்டும் | முதன்மை செயல் அலுவலர்,<br>தமிழ்நாடு வக்ஃப் வாரியம், சென்னை – 600 001<br>அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர்கள். |

(ii) பள்ளிவாசல் மற்றும் தர்காக்களை பெரிய அளவில் புனரமைக்க நிதி உதவி வழங்கும் திட்டம்

| | |
|---|---|
| (1) வழங்கப்படும் அதிகபட்சத் தொகை | ரூ.1,00,000/– முதல் 3,00,000/– வரை ஒரு வக்ஃப் நிறுவனத்திற்கு. |
| (2) நிதி ஒதுக்கீடு | ரூ.60 இலட்சங்கள் |
| (3) பயன்பெறும் வக்ஃப்களின் எண்ணிக்கை | 36 வக்ஃப் நிறுவனங்கள் |
| (4) யாருக்கு மனுச்செய்ய வேண்டும் | முதன்மை செயல் அலுவலர்,<br>தமிழ் நாடு வக்ஃப் வாரியம்,<br>சென்னை–600 001. |

## 12. நகர்ப்புற வக்ஃப்ச் சொத்துக்களை அபிவிருத்தி செய்ய கடன் வழங்கும் திட்டம்.

| | |
|---|---|
| (1) கடன் வழங்கும் நிறுவனம் | மத்திய வக்ஃப் கழகம், புதுடெல்லி. |
| (2) வழங்கப்படும் அதிகபட்ச கடன் தொகை | மதிப்பீட்டுத் தொகையில் 75 % தொகை |
| (3) யாருக்கு மனுச் செய்ய வேண்டும் | முதன்மை செயல் அலுவலர்,<br>தமிழ் நாடு வக்ஃப் வாரியம்,<br>சென்னை–600 001. |

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் மற்றும் முகவரி

முதன்மை செயல் அலுவலர்,
தமிழ் நாடு வக்ஃப் வாரியம்,
எண்.1, ஜாபர் சிராங் தெரு,
வள்ளல் சீதக்காதி நகர்,
சென்னை– 600 001.

**தொலைபேசி: 044–2523 2222, 2523 2255**
நிகரி : 044–2524 8888
இணைய தள முகவரி : WWW. tnwakfboard.org
மின் அஞ்சல்: tnwakfboard @ gmail.com.

## தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், சென்னை – 2 (தமிழ்நாடு அரசு நிறுவனம்)

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் சமூக – பொருளாதார நிலையினை மேம்படுத்தும் வகையில், பல்வேறு கடன் திட்டங்களின் கீழ் நிதியுதவி வழங்கி வருகிறது.

### 1. நிதியுதவி அளிக்கப்படும் பல்வேறு தொழில்கள்

1) சில்லரை வியாபாரம் மற்றும் சிறுதொழில்கள்

2) விவசாயம்

3) போக்குவரத்து

4) கைவினைஞர் மற்றும் மரபுவழிச் சார்ந்த தொழில்கள்

5) இளம் தொழிற் பட்டதாரிகள் சுயதொழில்

6) தொழிற்கல்வி பயிலுதல்

### 2. தகுதிகள்

i) பயனாளி பிற்படுத்தப்பட்டோர் / மிகப் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் வகுப்பினராக இருக்க வேண்டும்.

ii) குடும்ப வருமானம் ஆண்டொன்றுக்கு கிராமப்புறங்களில் ரூ.98,000/–க்கும், நகர்ப்புறங்களில் ரூ.1,20,000/–க்கும், மிகாமல் இருக்க வேண்டும்.

ii) பயனடைவோரின் வயது வரம்பு 18 ஆண்டுகளுக்கு மேல் 60 வயதிற்குள் இருக்க வேண்டும்.

iii) ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மட்டுமே கடனுதவி வழங்கப்படும்.

### 3. விண்ணப்பிக்கும் முறை

கடன் விண்ணப்ப படிவங்கள் பின்வரும் அலுவலகங்களில் இலவசமாக வழங்கப்படும்.

i) சென்னையில் உள்ள தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைமை அலுவலகம்

ii) மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் அலுவலகங்கள்

iii) கூட்டுறவுச்சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் அலுவலகங்கள்.

iv) கூட்டுறவு கடன் சங்கங்கள் / வங்கிகள்.

**4. <u>அளிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:</u>**

விண்ணப்பதாரர்கள் கடன் விண்ணப்ப படிவங்களை பூர்த்தி செய்து கீழ்க்காணும் ஆவண நகல்களுடன் சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலகம்/ கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் அலுவலகம் / கூட்டுறவு வங்கிகளில் ஒப்படைக்கவேண்டும்.

i) சாதி, வருமான மற்றும் பிறப்பிடச் சான்றிதழ்.
ii) முன்னணியில் உள்ள நிறுவனமொன்றிலிருந்து விலைப்புள்ளி.
iii) திட்ட அறிக்கை (பெரிய திட்டமாக இருந்தால் மட்டும் )
iv) குடும்ப அட்டை (Ration Card)
v) ஓட்டுநர் உரிமம் (போக்குவரத்து வாகனங்களுக்கு கடன் பெறுவதற்காக இருந்தால் மட்டும்)
vi) வங்கி கோரும் அடமானத்திற்குரிய ஆவணங்கள்.

**5. <u>கடன் வழங்கும் முறை</u>**

(1) பயனாளிகளுக்கு கடன் தொகைகளை வழங்குவதற்கும், வசூல் செய்வதற்கும், கீழ்க்காணும் நிறுவனங்கள் இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட துணை முகவர்களாக செயல்படுகின்றன .

1) தாய்கோ வங்கி.
2) தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி கழகம்.
3) கூட்டுறவு வங்கிகள்/தொ.வே.கூ.க.சங்கம்/நகர கூட்டுறவு வங்கிகள்.
4) தனியார் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்
5) ஆவின்.

(2) கூட்டுறவு வங்கிகளில் கடன் தொகை கோரி பெறப்படும் விண்ணப்பங்கள், சம்மந்தப்பட்ட கூட்டுறவு வங்கிகளில் பரிசீலனை செய்யப்படும். பயனாளியின் திட்டத்தின் செயல்பாடு, தன்மை மற்றும் கடனை திருப்பி செலுத்தும் திறன் குறித்து ஆய்வு செய்து பின்னர் அதனை மாவட்ட அளவில் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் தலைமையிலான கூர்ந்தாய்வுக் குழுவின் முன் பரிந்துரைக்க சமர்ப்பிக்கும்.

(3) கறவை மாடுகளுக்கான கடன் திட்டத்தின் கீழ் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம், தனது ஆளுகைக்குட்பட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களின் சங்க உறுப்பினர்களில் தகுதியான பயனாளிகளைத் தெரிவு செய்து ஒரு உயர்ரக கறவை மாடு ரூ.30,000/– வீதம் தலா 2 கறவை மாடுகள் வாங்குவதற்கு கடன் வழங்க பரிந்துரைக்கும்.

**6. <u>கடன் தொகைக்கான பிணையம்</u>**

வங்கி விதிகளின்படி.

## 7. <u>கடன் திட்டங்களின் விவரங்கள்:</u>

### i) <u>பொதுக் கால கடன் திட்டம்</u>

❖ சிறு தொழில் / வியாபாரம் செய்ய தனி நபர்களுக்கு கடனுதவி வழங்கப்படுகிறது.

- அதிகபட்ச கடன் தொகை : ரூ.10.00 இலட்சம்

<u>நிதியளிப்பு விகிதம்</u>

- பயனாளியின் பங்கு : 5%
- தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பங்கு : 10%
- தேசிய கழகத்தின் பங்கு : 85%
- ஆண்டு வட்டி விகிதம் : ரூ.5.00 இலட்சம் வரை – 6%
  ரூ.5.00 இலட்சத்திற்கு மேல் – 8%
- திரும்ப செலுத்தும் காலம் : 3/5 ஆண்டுகள்

### ii) <u>பெண்களுக்கான கடன் வழங்கும் திட்டங்கள்</u>

அ). <u>சிறு கடன் வழங்கும் திட்டம்</u>
(மகிளா சம்ரிதி யோஜனா)

- இத்திட்டத்தின் கீழ் சுய உதவிக் குழுவில் உறுப்பினர்களாக உள்ள மகளிருக்கு கடனுதவி வழங்கப்படுகிறது. ஒரு குழுவில் அதிகபட்சம் 20 உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுவர்.
- அதிகபட்ச கடன் தொகை : ரூ.50,000/–

நிதியளிப்பு விகிதம்

- தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பங்கு : 5%
- தேசிய கழகத்தின் பங்கு : 95%
- வட்டி வீதம் : 4% (ஆண்டிற்கு)
- திரும்ப செலுத்துவதற்கான அதிகபட்ச கால வரம்பு : 3 ஆண்டுகள்

ஆ) <u>புதிய பொற்காலத் திட்டம்</u>

(மகளிருக்கான காலக் கடன் திட்டம்)
அதிக பட்ச கடன் தொகை : ரூ.1,00,000/–

**நிதியளிப்பு விகிதம்**

- தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பங்கு : **5**%
- தேசிய கழகத்தின் பங்கு : **95**%

**ஆண்டு வட்டி விகிதம்** : **5**%

- திரும்ப செலுத்துவதற்கான அதிகபட்ச கால வரம்பு : 5 ஆண்டுகள்

**iii)** <u>ஆடவருக்கான சிறு கடன் திட்டம்</u>

சிறுகடன் வழங்கும் திட்டத்தின் கீழ் சுய உதவிக் குழுவில் உறுப்பினர்களாக உள்ள ஆடவருக்கு கடனுதவி வழங்கப்படுகிறது. ஒரு குழுவில் அதிகபட்சம் 20 உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுவர்.

- அதிகபட்ச கடன் தொகை : ரூ.50,000/–
- நிதியளிப்பு விகிதம்
  - பயனாளியின் பங்கு : **5**%
  - தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பங்கு : **5**%
  - தேசிய கழகத்தின் பங்கு : **90**%
  - ஆண்டு வட்டி வீதம் : 5%
  - அதிகபட்ச திரும்பச் செலுத்தும் காலம் : **3** ஆண்டுகள்

**iv)** <u>கறவை மாட்டுக் கடன்</u>

பொதுக் காலக் கடன் திட்ட விதிமுறைகளின்படி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் தனது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக உள்ளவர்களை தேர்வு செய்து ஒரு கறவை மாட்டிற்கு ரூ.30,000/– வரையிலான திட்ட மதிப்பீட்டில் கடன் வழங்க பரிந்துரை செய்யும். இத்திட்டத்தின் கீழ் ஒரு பயனாளிக்கு 2 கறவை மாடுகள் வாங்குவதற்காக ஒரு கறவை மாட்டிற்கு ரூ.30,000/– கடன் வழங்கப்படும்.

**v) டாப்செட்கோ கடன் திட்டம்**

| | | |
|---|---|---|
| கடன் வழங்கப்படும் நோக்கம் | : | கார் / வேன் மற்றும் மினி வேன்போன்ற சீருந்து வாகனங்கள் மற்றும் விவசாயத்திற்கான டிராக்டர் / டிரெய்லர் வாங்குவதற்கு. |
| அதிகபட்ச கடன் தொகை | : | ரூ. 3.13 இலட்சங்கள் |
| தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் நிதியளிப்பு விகிதம் | : | 100% |
| ஆண்டு வட்டி வீதம் | : | 10% |
| திரும்ப செலுத்தும் காலம் | : | 5 ஆண்டுகள் |

**8. புதிய கடன் திட்டங்கள்**

தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் கீழ்க்கண்ட புதிய கடன் திட்டங்கள், 2012–13 முதல் செயல்படுத்த அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**I) இளம் தொழிற்கல்வி பட்டதாரிகளுக்கு, சுய தொழில் துவங்க கடன் திட்டம் (Saksham)**

| | | |
|---|---|---|
| அதிக பட்ச கடன் தொகை | : | ரூ.10,00,000/– |
| **நிதியளிப்பு விகிதம்** | | |
| பயனாளியின் பங்கு | : | 5% |
| தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பங்கு | : | 10% |
| தேசிய கழகத்தின் பங்கு | : | 85% |
| ஆண்டு வட்டி விகிதம் | : | ரூ.5,00,000 வரை 6%<br>ரூ.5,00,000 மேல் 8% |
| திரும்ப செலுத்தும் காலம் | : | அதிக பட்சம் 10 ஆண்டுகள் |

**II) மரபு சார்ந்த கலைஞர்கள் மற்றும் கைவினைஞர்களின் தொழில் திறனை மேம்படுத்தவும், சுய தொழில் துவங்க கடன் திட்டம் (Shilp Sampada)**

| | | |
|---|---|---|
| அதிக பட்ச கடன் தொகை | : | ரூ.10,00,000/–. |
| **நிதியளிப்பு விகிதம்** | | |
| பயனாளியின் பங்கு | : | 5% |
| தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பங்கு | : | 10% |
| தேசிய கழகத்தின் பங்கு | : | 85% |
| ஆண்டு வட்டி விகிதம் | : | ரூ.5,00,000 வரை 6%<br>ரூ.5,00,000 மேல் 8% |
| திரும்ப செலுத்தும் காலம் | : | அதிக பட்சம் 10 ஆண்டுகள் |

**III) <u>சிறு விவசாயிகள் மற்றும் காய்கறி பயரிடுவோருக்கான சிறு கடன் திட்டம்</u>**
**<u>(Kirishi Sampada)</u>**

| | |
|---|---|
| அதிகபட்ச கடன் தொகை | : ரூ.50,000/– |
| வட்டி விகிதம் ஆண்டிற்கு | : 4%, |
| இக்கழகத்தின் பங்கு | : 5%, |
| தேசிய கழகத்தின் பங்கு | : 95%. |
| திரும்ப செலுத்தும் காலம் | : அதிக பட்சம் 4 ஆண்டுகள் |

**9. <u>சிறு, குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதிகளை அமைக்க மானியத்துடன் கூடிய கடன் அளிக்கும் திட்டம்</u>**

பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் வகுப்புகளைச் சேர்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதிகள் அமைப்பதற்காக, அதிகபட்சம் ரூபாய் ஒரு இலட்சம் வரை மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டம் 2007–08ம் ஆண்டு முதல் இக்கழகம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதிய ஆழ்துளை கிணறு அமைத்து பாசன வசதி ஏற்படுத்திக்கொள்ள வங்கிக்கடன் மற்றும் அதற்கு இணையான 50 விழுக்காடு அரசு மானியம் அதிகபட்சம் தலா ரூபாய் 50,000/– வரை அரசு வழங்கும்.

**10. <u>கடன் தொகையினைத் திரும்பச் செலுத்துதல்</u>**

கடன் திட்டங்களின் கீழ் இரண்டு மாதங்கள் கடனைத் திரும்பச் செலுத்துவதற்குரிய தவணையுரிமை காலமாக அனுமதிக்கப்படும். கடன் தொகையினை, திட்டத்தினை பொறுத்து, மாதந்திரம்/காலாண்டு அடிப்படையில் ஒப்பளிப்பு ஆணையில் குறித்தவாறு சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு திரும்பச் செலுத்திட வேண்டும்.

**11. <u>அபராத வட்டி</u>**

கடன் தொகையினை தவணை தேதியில் திரும்பச் செலுத்தாதவர்களிடமிருந்து 5% அபராத வட்டி வசூலிக்கப்படும்.

**12. <u>கடன் தொகை அட்டை பராமரிப்பு</u>**

கடன் வழங்கப்பட்டவுடன் ஒவ்வொருவருக்கும் ஒரு கடன் தொகை அட்டை வழங்கப்படும். கடன் பெற்றவர் ‘கடன் அட்டையை’ ஒவ்வொரு தவணை கடன் தொகை திரும்பச் செலுத்தும்போதும், தேவையான குறிப்புகள் செய்யும் பொருட்டு வங்கிகளுக்கு காண்பிக்க வேண்டும்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் மற்றும் முகவரி</u>

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்,
எல்.எல்.ஏ. கட்டிடம் (3வது தளம்), 735, அண்ணா சாலை,
சென்னை – 600 002.
தொலைபேசி : 044 – 28520144
நிகரி : 044 – 28520422
**மின் அஞ்சல்: tabcedco@gmail.com**

## <u>தமிழ் நாடு மாநில ஹஜ் குழு</u>

ஹஜ் குழுச் சட்டம், 2002–ன்படி, பயணிகள் ஹஜ் பயணத்தினை மேற்கொள்வதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்வதற்கு தமிழ் நாடு மாநில ஹஜ் குழு, மாநில அரசால் அமைக்கப்பட்டது. இந்திய ஹஜ் குழு, மத்திய அரசின் வெளிவிவகாரத்துறை அமைச்சகம் மற்றும் தமிழக அரசு ஆகியோரால் வழங்கப்படும் வழிமுறைகளுக்குட்பட்டு தமிழ் நாடு மாநில ஹஜ் குழு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது:–

### 1. <u>ஹஜ் பயணத்திற்காக விண்ணப்பிக்கும் செயல்முறை:</u>

ஹஜ் காலம் தொடங்குவதற்கு முன்னர், வரவிருக்கின்ற ஹஜ் குறித்த பல்வேறு நேர்வுகளை விவாதித்து, மும்பை, இந்திய ஹஜ் குழு வழிமுறைகளை இறுதி செய்கிறது. மும்பை, இந்திய ஹஜ் குழுவின் முடிவின் படி, மாநில ஹஜ் குழு செய்திக் குறிப்பை வெளியிட்டு, ஹஜ் பயணத்திற்கான விண்ணப்பங்களை ஒவ்வோராண்டும் புனிதப் பயணிகளிடமிருந்து பெறுகிறது. ஹஜ் 2015–ற்காக தமிழ் நாட்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒதுக்கீடு 2486 ஆகும். ஆனால் ஒதுக்கீட்டிற்குமேல் அதிகமாக தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவால் விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இதைத்தொடர்ந்து இந்திய ஹஜ் குழு மேலும் 99 இருக்கைகளை கூடுதல் ஒதுக்கீடாக ஹஜ் 2015–க்கு வழங்கியுள்ளது.

<u>ஹஜ் புனிதப் பயணத்திற்கான தகுதியுடைய விண்ணப்பங்கள்.</u>

ஒரு நபர் ஹஜ் பயணத்தை இந்திய ஹஜ் குழு மூலமாக வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே மேற்கொள்ளலாம். மற்ற ஆண் வழித்துணை/துணைப் பயணி இல்லாதிருந்தால் (இந்திய ஹஜ் குழு மூலமாக ஹஜ் பயணத்தை மேற்கொள்ளாதவர்) விமான போக்குவரத்துத் துறை அமைச்சகம் நிர்ணயிக்கும் முழு விமானக் கட்டணத்தை அப்பயணிகள் செலுத்துவதற்குட்பட்டு, பெண் பயணிக்கான ஆண் வழித்துணை மற்றும் 70+ வயதினருக்கான துணைப் பயணி ஆகியோருக்கு மட்டும் இந்நிபந்தனை தளர்த்தப்பட்டுள்ளது. ஆயினும் பெண் பயணி அல்லது 70+ வயதுடைய பயணி ஹஜ் பயணத்தை இரத்து செய்தால், தொடர்ந்து விண்ணப்பித்த பயணியின் இருக்கை தானாகவே இரத்து செய்யப்படும். இப்பயணிகள் இந்திய ஹஜ் குழுவால் வடிவமைக்கப்பட்ட படிவத்தில் உள்ளவாறு உறுதிமொழியை சமர்ப்பிக்கவேண்டும்.

<u>(அ) சிறப்பு வகை.</u>

(i) இந்திய ஹஜ் குழுவின் வழிமுறைகளின்படி 70 வயதுக்கு மேற்பட்ட வயதுடைய விண்ணப்பதாரர்களுடன் ஒரு துணைப் பயணி சிறப்பு வகையின் கீழ் விண்ணப்பிக்கலாம். இவ்வகையில் பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை தமிழ் நாட்டிற்கு அளிக்கப்பட்ட

ஒதுக்கீட்டிற்கும் குறைவாக இருக்கும் பட்சத்தில், இவ்வாறான பயணிகள் குலுக்கலில் சேர்க்காமல் நேரிடையாக தெரிவு செய்யப்பட்டனர்.

(ii) மேலே (i)–ல் குறிப்பிட்டுள்ள விண்ணப்பதாரர்கள் தேர்வு செய்யப்பட்டபின், மீதம் இருப்பிலுள்ள ஒதுக்கீட்டைவிட இவ்வகையில் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தால், ஹஜ் **2012** முதல் **2014** வரை கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ச்சியாக தெரிவு செய்யப்படாமல், ஹஜ் **2015**–ற்கும் விண்ணப்பித்த பயணிகளின் விண்ணப்பங்களை நேரடியாக தெரிவு செய்ய இந்திய ஹஜ் குழு வழிவகை செய்துள்ளது.

(iii) ஹஜ் **2015**–ல் மேற்கூறப்பட்ட இனங்களில் **1699** நபர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

**(ஆ) ஒவ்வொரு மாநிலத்திற்கான ஒதுக்கீடு:**

சவூதி அரேபிய அரசால் இந்தியாவிற்காக ஒதுக்கப்பட்ட மொத்த ஒதுக்கீட்டிலிருந்து ஒவ்வொரு மாநிலத்திலுள்ள முஸ்லிம் மக்கள் தொகையின் அடிப்படையில், ஒவ்வொரு மாநிலத்திற்கான ஒதுக்கீட்டை மத்திய அரசு நிர்ணயிக்கிறது. மாநிலத்திற்கான ஒதுக்கீடு, முஸ்லிம் மக்கள் தொகை அடிப்படையில் மாவட்ட வாரியாக பகிர்ந்து அளிக்கப்படுகிறது. விண்ணப்பங்களை மாவட்டவாரியாக கணினியில் பதிவு செய்து, இதற்கென உருவாக்கப்பட்ட மென்பொருளைப் பயன்படுத்தி கணினி மூலம் குலுக்கல் (குறா) நடத்தப்படுகிறது. உரிய வகையில் தெரியப்படுத்தப்பட்ட பின்னர் விண்ணப்பதாரர்களின் முன்னிலையில் குலுக்கல் நடத்தப்படுவதால் தேர்வு செய்யப்பட்டவர்களின் பட்டியல் உடனுக்குடன் வெளியிடப்படுகிறது. ஹஜ் **2015**–ற்காக நடத்தப்பட்ட குலுக்கலில் **787** புனிதப் பயணிகள் தெரிவு செய்யப்பட்டனர். மீதமுள்ள விண்ணப்பதாரர்கள் கணினி மூலம் குலுக்கலை நடத்தி வெளியிடப்பட்ட பட்டியலின் படி பொது காத்திருப்போர் பட்டியலில் சேர்க்கப்பட்டனர்.

**(இ) பன்னாட்டு கடவுச்சீட்டு:**

முன்பு பயணிகளுக்கான தற்காலிக அனுமதிச் சீட்டுகளின் மூலம் பயணிகள் ஹஜ் பயணத்தை மேற்கொண்டனர். ஆனால் சவூதி அரசின் வலியுறுத்தல் காரணமாக ஹஜ் பயணிகள் பன்னாட்டு கடவுச் சீட்டுகளின் மூலம் ஹஜ் பயணத்தை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர்.

## 2. கட்டிடத் தேர்வுக் குழு

மாநில ஹஜ் குழுக்களால் அனுப்பப்படும் பிரதிநிதிகளைக் கொண்டு, பயணிகளுக்கான தங்குமிடங்கள் தெரிவு செய்யப்படுகின்றன. ஹஜ் பயணிகள் தங்குவதற்காக கட்டடங்களைத் தேர்வு செய்ய சவூதி அரேபியாவிலுள்ள, இந்திய உதவித் தூதரகத்திற்கு உதவிடும் பொருட்டு, கட்டடத் தேர்வுக் குழுவில் பிரதிநிதியாக ஒரு அலுவலரை தமிழ் நாடு மாநில ஹஜ் குழு அனுப்புகிறது. மாநில

அரசுகளிடமிருந்து பெறும் நியமனங்களை மத்திய அரசு ஒப்புதல் அளிக்கப்படும் பட்சத்தில் இவ்வகையில் பிரதிநிதிகள் அனுப்பப்படுகின்றனர்.

### 3. <u>பயிற்சியாளர்களுக்கான பயிற்சி முகாம்</u>

ஒவ்வொரு மாநில ஹஜ் குழுவிலிருந்து தலைமைப் பயிற்சியாளர்கள் மற்றும் களப் பயிற்சியாளர்களுக்கு மும்பையில் இந்திய ஹஜ் குழு பயிற்சி அளிக்கிறது. இப்பயிற்சியாளர்களை, களப் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்க மாநில ஹஜ் குழு பயன்படுத்துகிறது. அரசு ஊழியர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களிலிருந்து சில நபர்கள், 200 ஹஜ் பயணிகளுக்கு தலா ஒரு பயிற்சியாளர் வீதம் களப் பயிற்சியாளர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

### 4. <u>புத்தறிவு பயிற்சி முகாம்கள்</u>

ஹஜ் பயணம் மேற்கொள்ளவிருக்கின்ற பயணிகளுக்கு, ஹஜ்/உம்ரா நிறைவேற்றுகையில் கடைப்பிடிக்க வேண்டிய பல்வேறு பயண நடைமுறைகள் மற்றும் கிரியைகள், புனிதப் பயணத்தின்போது எதிர்கொள்ள நேரிடும் பிரச்சினைகள் மற்றும் ஜித்தாவிலுள்ள இந்திய உதவித் தூதரகம் மற்றும் முஅல்லிம் ஆகியோரால் வழங்கப்படும் சேவைகள் முதலியன தொடர்பாக விரிவான புத்தறிவு/பயிற்சி நிகழ்ச்சி மாவட்ட அளவில் நடத்தப்படுகின்றன. தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவால் மாவட்டந்தோறும் நடத்தப்படும் புத்தறிவுப் பயிற்சியால் புனிதப் பயணிகள் பெரிதும் பயனடைகின்றனர். மும்பை, இந்திய ஹஜ் குழு மற்றும் மாநில ஹஜ் குழுவினால் பயிற்சியளிக்கப்பட்ட தலைமைப் பயிற்சியாளர்கள் மற்றும் களப் பயிற்சியாளர்களை பயிற்சி முகாம்கள் நடத்தப்படும் பல்வேறு மையங்களுக்கு அனுப்பி அவர்களின் துணையுடன் பயணிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இம்முகாம்கள் உள்ளூர் தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஹஜ் குழு உறுப்பினர்கள் உதவியுடன் நடத்தப்படுகின்றன. இம்முகாம்களில் பயணிகள் ஹஜ் பயணத்தின்போது இன்னல்களைத் தவிர்க்கவும் சிறந்த முறையில் விளக்கம் பெறவும் ஒளிக்காட்சிகளும் காண்பிக்கப்படுகின்றன.

### 5. <u>தடுப்பூசி மையங்கள்:</u>

#### <u>(அ) மூளைக் காய்ச்சலுக்கு எதிரான தடுப்பூசி.</u>

புனிதப் பயணிகளின் எண்ணிக்கைக்கேற்ப பல்வேறு மாவட்டங்களில் மூளைக் காய்ச்சல் மற்றும் சளிக்காய்ச்சல் தடுப்பூசி மையங்களை தமிழ் நாடு மாநில ஹஜ் குழு நடத்துகிறது. ஒவ்வொரு ஹஜ் பயணத்திற்கு முன்பும் புனிதப் பயணிகளுக்கு மேற்படி தடுப்பூசிகள் போடப்படுகின்றன. இவற்றிற்கான தடுப்பு மருந்தினை அனைத்து மாநில ஹஜ் குழுக்களுக்கு புது தில்லியைச் சேர்ந்த தேசிய தொற்றுநோய் தடுப்பு நிறுவனம் கட்டணம் ஏதுமின்றி வழங்குகிறது. மூளைக் காய்ச்சல் மற்றும் சளிக்காய்ச்சல் ஆகியவற்றிற்காக தேவைப்படும் மருந்தினை பல்வேறு மாவட்ட மக்கள் நல வாழ்வு

துணை இயக்குநர்களுக்கு, சென்னை கிங் நிலையம் மூலமாக அளிக்கப்படுகிறது. குழுவின் பணியாளர்கள் பல்வேறு மையங்களுக்கு மாநில ஹஜ் குழு நிர்ணயித்த தேதிகளில் தடுப்பூசி மையங்களை நடத்திட அனுப்பப்படுகின்றனர். இத்தடுப்பூசி கட்டணம் ஏதுமின்றி போடப்படுகிறது.

<u>(ஆ) போலியோ சொட்டு மருந்து அளித்தல்.</u>

ஹஜ் பயணம் மேற்கொள்வதற்கு 6 வாரங்களுக்கு முன்னர் ஹஜ் பயணிகள் அனைவருக்கும் கட்டாயமாக போலியோ சொட்டு மருந்து அளித்திருக்கவேண்டும். அதன்படி, இக்குழு, மக்கள் நல்வாழ்வு அதிகாரிகள் மற்றும் சென்னை மாநகராட்சி ஆகியோர் மூலமாக பயணிகளுக்கு போலியோ சொட்டு மருந்து அளிக்க ஏற்பாடு செய்கிறது. அதற்கான சான்றிதழ்களும் புனிதப் பயணிகளுக்கு அளிக்கப்படுகின்றன.

## 6. <u>ஹஜ் தொண்டர்கள்</u>

தமிழ் நாட்டைச் சேர்ந்த ஹஜ் பயணிகளின் நலன்களைக் கவனிக்கும் பொருட்டு, 300 பயணிகளுக்கு ஒரு ஹஜ் தொண்டர் வீதம் சவூதி அரேபியாவிற்கு ஹஜ் தொண்டர்களை மாநில ஹஜ் குழு அனுப்புகிறது. 50 விழுக்காடு செலவினத்தை மும்பை, இந்திய ஹஜ் குழு மேற்கொள்கிறது. மீதமுள்ள 50 விழுக்காடு செலவை மாநில அரசால் வழங்கப்படும் மானியத்திலிருந்து மேற்கொள்ளப்படும். ஹஜ் தொண்டர்கள் சவூதி அரேபியாவில் பயணிகளுடன் தொடர்ந்து தொடர்பு கொண்டு, ஹஜ் பயணத்தின்போது, பயணிகளுக்குத் தேவையான உதவிகளை செய்வார்கள்.

## 7. <u>மக்காவில் தங்குமிடம்</u>

சவூதி அரேபியா விதிமுறைகளின்படி, ஜித்தாவிலுள்ள இந்திய உதவித் தூதரகம் மூலம் மக்காவில் பயணிகளுக்கான தங்குமிடங்களுக்கான ஏற்பாடுகளை முன்கூட்டியே செய்யப்பட வேண்டும். அக்கட்டடங்களில் பயணி ஒவ்வொருவருக்கும் வழங்கவேண்டிய இருப்பிட வசதி 4 சதுரமீட்டர் ஆகும். ஹஜ் 2015–ற்காக பின்வரும் வகைகள் முறைப்படுத்தப்பட்டுள்ளன:–

**(அ) <u>பச்சை வகை</u>:** இக்கட்டடங்கள் ஹரம் ஷெரிபின் (காபா) வெளி எல்லையிலிருந்து 1500 மீட்டர் தூரத்திற்குள் அமைந்திருக்கும். அதற்கான வாடகை கட்டணம் நபர் ஒருவருக்கு 4500 சவூதி ரியால் வசூலிக்கப்படும். இக்கட்டணம் ஒவ்வொரு வருடமும் மாற்றி அமைக்கப்படும்.

**(ஆ) <u>அஸிஸியா வகை</u>** : இக்கட்டடங்கள் அஸிஸியா பகுதியில் அமைந்திருக்கும். அதற்கான வாடகைக் கட்டணம் நபர் ஒருவருக்கு 2630 சவூதி ரியால் வசூலிக்கப்படும். அஸிஸியாவிலிருந்து மக்கா மற்றும் திரும்பி வருவதற்கு போக்குவரத்து வசதி அளிக்கப்படும்.

**<u>மதீனாவில் தங்குமிடம்.</u>**

மதீனாவில் புனிதப் பயணிகளுக்கு ஒரே விதமான தங்குமிடங்கள் அளிக்கப்படும். 9–லிருந்து 10 நாட்கள் தங்கும் காலத்திற்காக வாடகைக் கட்டணம் பயணி ஒருவருக்கு 500 சவூதி ரியால் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 8. சென்னை– ஜித்தா–சென்னை வழியாக ஹஜ் பயணம் மேற்கொள்ளும் பயணிகளின் நடமாட்டத்தின்போது அரசு நிறுவனங்களின் பணிகள் மற்றும் பொறுப்புகள்:

**<u>(அ) இந்திய விமான ஆணைக்குழுமம்:</u>**

1. விமான நிலையத்தில் ஷாமியானா, தண்ணீர் விநியோகம், ஒலிபெருக்கி அமைப்பு, தொழுகை விரிப்புகள் முதலிய பல்வேறு வசதிகளை அளித்தல்.
2. விமான நிலையத்தில் கட்டணம் ஏதுமின்றி புனிதப் பயணிகளை ஏற்றிச் செல்லும் பேருந்துகள் நிறுத்துவதற்கு வசதிகளை அளித்தல்.
3. விமான புறப்பாடு மற்றும் வருகை நேரங்களில், புனிதப் பயணிகளுக்கு அவசரக்கால மருத்துவ உதவிகளை விமான நிலையத்தில் செய்து தருதல்.

**<u>(ஆ) சவூதி அரேபிய விமான நிறுவனம்:</u>**

1. தங்குமிட மையங்களில் சோதனைக்கூடங்களை இயக்குதல் மற்றும் விமான நிலையத்திற்கு பயணிகளின் உடமைகளை அனுப்பி வைத்தல்.
2. விமான நிலையத்திலுள்ள ஏற்பாடுகள் மற்றும் தலைமை அலுவலகம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து காலதாமதமின்றி/கால தாமதத்தைத் குறைத்து விமானங்களை இயக்குதல்.
3. ஹஜ் பயணிகளுக்கு பயணம் புறப்படுதல்/திரும்பி வருதலுக்கு முன்னதாக சிற்றுண்டி அளித்தல்.
4. ஜித்தாவிலிருந்து வரும் விமானங்களின் காலதாமத தகவல்களை தெரிவித்தல்.

**<u>(இ) சுங்கம் மற்றும் குடியேற்றம்:</u>**

1. தனிப்பட்ட முகப்புகளை இயக்குதல் மற்றும் புனிதப் பயணிகளை அனுப்ப சிறப்பு ஏற்பாடுகளைச் செய்தல்.
2. திரும்பும் விமான காலங்களில் பயண உடமைகளுக்கான சுங்க நடைமுறைகளை விரைந்து மேற்கொள்ளல்.

**<u>(ஈ) விமான நிலைய பாதுகாப்புக்குழுமம் மற்றும் மத்திய தொழில் பாதுகாப்புப் படை:</u>**

1. குழுவின் உறுப்பினர்கள், பிற அலுவலர்கள் மற்றும் தொண்டர்களுக்கு அனுமதிச் சீட்டு வழங்குதல்.
2. விமான நிலையத்தில் புனிதப் பயணிகளுக்காக போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்தல்.

**3.** புறப்பாடு/வருகை–க்கு முன்னதாக குடியேற்ற முகப்புகளில் ஹஜ் பயணிகளுக்கு ஹஜ் குழுப் பணியாளர்கள்/தொண்டர்களின் உதவியுடன் ஒத்துழைப்பு வழங்குதல்.

**(உ) மாநகரக் காவல் மற்றும் புறநகர் காவல்துறை:**

1. சென்னை, டிமெல்லோஸ் சாலையிலுள்ள ஹஜ் இல்லத்திற்கு பாதுகாப்பு அளித்தல்.
2. விமான நிலையத்தில் பாதுகாப்பு அளித்தல் மற்றும் போக்குவரத்தினை சீரமைத்தல்.

## 9. தொண்டு நிறுவனங்களின் சேவைகள் மற்றும் இதர நடவடிக்கைகள்:

**(i) தமிழ் நாடு ஹஜ் சர்வீஸ் சொஸைட்டி:**

புறப்படும் மற்றும் திரும்பும் விமான காலங்களில், வெளிமாவட்ட ஹஜ் பயணிகளுக்கு, இத்தொண்டு நிறுவனம் மூலமாக தற்காலிக தங்குமிடம், கட்டணம் ஏதுமின்றி சென்னையில் வழங்கப்படுகிறது. சென்னை மாநகர மையப்பகுதியில் இதற்கென தமிழ் நாடு பைத்துல் ஹுஜ்ஜாஜ் என்னும் பெயர் கொண்ட பல மாடிக் கட்டிடம் ஒன்றும், இணைப்புக் கட்டிடம் ஒன்றையும் தமிழ் நாடு ஹஜ் சர்வீஸ் சொசைட்டி கட்டியுள்ளது. இக்கட்டடங்களில் ஒரே சமயத்தில் 750 பயணிகள் தங்க வைக்கப்படுகின்றனர்.

**(ii) புனிதப் பயணிகளை அனுப்புதல்:**

ஹஜ் பயணிகளை தங்குமிட மையங்களிலிருந்து விமான நிலையத்திற்கும் மற்றும் திரும்பி வருவதற்கும் எரிபொருள் செலவினத்திற்காக பெயரளவிலான கட்டணத்தைப் பெற்று சென்னையைச் சேர்ந்த பர்வீன் டிராவல்ஸ் என்னும் நிறுவனம் போக்குவரத்து ஏற்பாடுகளை மேற்கொள்கிறது.

**10.** ஹஜ் மற்றும் உம்ரா கிரியைகளுக்கான வழிகாட்டி/புத்தகம் தமிழ் மொழியில் அச்சிட்டு புனிதப் பயணிகளுக்கு இலவசமாக அளிக்கப்படுகிறது. இவை ஹஜ் பயணிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளன.

**11.** இக்குழுவின் அலுவலகத்தில் வரவேற்பு முகப்பு ஒன்றை அமைத்து, அதில் மனுதாரர்களுக்குத் தேவையான படிவங்கள், வழிகாட்டி நெறிமுறைகள், தகவல்கள் மற்றும் தேவையான அனைத்து உதவிகளை அளிக்கும் பொருட்டு இரு பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இக்குழு, ஹஜ் சம்மந்தமான அனைத்து தகவல்கள் அடங்கிய இணையதளம் (www.hajjtn.in) ஒன்றை அமைத்துள்ளது. அலுவலகத்தின் முன்புறத்தில் அறிவிப்புப் பலகை ஒன்று நிரந்தரமாக

அமைக்கப்பட்டுள்ளது. இதில் அனைத்து முக்கிய சுற்றறிக்கைகளும் பார்வைக்கு வைக்கப்படுகின்றன. மக்கள் சாசனத்தின் அங்கமாக இவையும் உள்ளன.

**<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் மற்றும் முகவரி</u>**

செயலர் மற்றும் செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஹஜ் குழு,
மூன்றாவது மாடி, 'ரோஸி டவர்',
எண்.13 (பழைய எண்.7), மகாத்மா காந்தி ரோடு,
(நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை),
சென்னை–600 034.

தொலைபேசி எண். 044–28252519 / 28227617
மின் அஞ்சல்: tnhajj786@vsnl.com
**இணையதளம்** : www.hajjtn.in
**நிகரி** : 044-28276980

# தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம்

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் கடந்த **1989** ஆம் ஆண்டு தமிழக அரசால் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் சட்டபூர்வ அதிகாரம் பெற்ற ஆணையமாக தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் (ACT 21 of 2010 ) ன்படி **1.8.2010** முதல் இயங்கிவருகிறது.

## தற்போதுள்ள ஆணையத்தின் அமைப்பு

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம், அரசாணை (நிலை) எண் **148**, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்னையினர் நலத்துறை, நாள் **28.12.2012**–ன்படி மாற்றியமைக்கப்பட்டது. தற்போது தலைவர் மற்றும் ஏழு நபர்கள் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

| | | | |
|---|---|---|---|
| **1.** | **பேராயர் டாக்டர் எம். பிரகாஷ்** | **–** | **தலைவர்** |
| **2.** | **திரு. அல் ஹஜ் S. சையத் காமில் சாஹிப்** | **–** | **உறுப்பினர்** |
| **3.** | **திரு. ஜஸ்டின் செல்வராஜ்** | **–** | **உறுப்பினர்** |
| **4.** | **பேராசிரியர் A.M. ஜேம்ஸ்** | **–** | **உறுப்பினர்** |
| **5.** | **திரு. U.சுதிர் லோதா** | **–** | **உறுப்பினர்** |
| **6.** | **திரு. க. கலாமணி** | **–** | **உறுப்பினர்** |
| **7.** | **திரு. சர்தார் மஞ்ஜித் சிங் நயார்** | **–** | **உறுப்பினர்** |
| **8.** | **சிறுபான்மையினர் நல ஆணையர்** | **–** | **உறுப்பினர் – செயலர்** |

## தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் பணிகள் பின்வருமாறு:

1. சிறுபான்மை இனத்தவரை பாதுகாத்திட இந்திய அரசியலமைப்புச் சட்டம் மற்றும் தமிழ்நாடு சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்களில் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்புகள் மற்றும் நெறிமுறைகள் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன என்பது குறித்து ஆராய்ந்து மறு மதிப்பீடு செய்தல்.

2 இது போன்ற நடைமுறையிலுள்ள சட்ட திட்டங்களில் சிறுபான்மையினருக்கு அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்புகள் செவ்வனே செயல்படுத்தப்பட்டு நடைமுறைக்கு கொண்டு வரும் பொருட்டு, சம்பந்தப்பட்ட துறைகள் அல்லது அமைப்புகளுக்கு தேவையான பரிந்துரைகளை அனுப்பி வைத்தல்.

3. தமிழ்நாட்டிலுள்ள சிறுபான்மையினரின் நலனுக்கென எடுக்கப்பட்டுள்ள அரசின் கொள்கை முடிவுகள் மற்றும் திட்டங்கள் ஆகியவற்றின் செயல்பாடு குறித்த ஆய்வு மேற்கொள்ளுதல்.

4. சிறுபான்மையினருக்கெதிராக பாதகமான செயல்பாடுகள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு ஆராய்ச்சிகள், ஆய்வுகள் மற்றும் பகுப்பாய்வுகளை மேற்கொண்டு தேவைப்படும் ஆலோசனைகளை அரசுக்கு தெரிவித்தல்

5. சிறுபான்மையினர் தொடர்பாக அரசு மேற்கொள்ள உத்தேசிக்கும் சட்டம் மற்றும் நல திட்டங்கள் குறித்து அரசுக்கு உரிய கருத்துக்களைத் தெரிவித்தல்.

6. மாநிலத்தில் மத நல்லிணக்கத்தை தொடர்ந்து நிலைநாட்டுவதற்கும், மேம்படுத்துவதற்கும் தக்க வழிவகைகளை அரசுக்குப் பரிந்துரைத்தல்.

**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் மற்றும் முகவரி**

உறுப்பினர்–செயலர்,
தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம்,
735, அண்ணா சாலை,
எல்.எல்.ஏ கட்டிடம், 3–வது தளம்,
சென்னை– 600 002.
தொலைபேசி – 044– 28510303

# தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்

## 1. முகவுரை

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பணிகள் மற்றும் அதன் சேவைகளைத் துய்க்கும் வழிமுறைகள் பற்றிய விவரங்களை பொது மக்களுக்குத் தெரிவித்திடும் பொருட்டு இந்த மக்கள் சாசனம் வெளியிடப்படுகிறது. இவ்வாணையத்தின் செயல்–உறுப்பினர்கள் (functionaries) மற்றும் 2005ஆம் ஆண்டு தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பொது தகவல் அலுவலராகவும் மேல்முறையீட்டு அலுவலராகவும் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்கள் விவரமும் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் தோற்றம்

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கூறு 16(4)ன் கீழ், கூறு 340 உடன் படிக்கப்பட்டு, ஒரு நிலையான அமைப்பாக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்கப்பட்டு, 15.3.1993 அன்று முதல் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது.

## 3. ஆணையத்தின் பணிகள்

<u>தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பணிகளாவன:–</u>

(1) பிற்படுத்தப்பட்டோர் / மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோருதல் தொடர்பான மனுக்கள் மற்றும் பட்டியல்களில் மிகுதியாக அல்லது குறைவாக சேர்த்திருப்பது குறித்தான முறையீடுகள் ஆகியவற்றைப் பெறுதல், ஆய்வு செய்தல் மற்றும் அதன்மீது பரிந்துரைகளை வழங்குதல்;

(2) அவ்வப்போது எடுக்கப்படும் முடிவுகளின்படி, பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்களை காலமுறைப்படி சீராய்வு செய்தல்;

(3) அவ்வப்போது அரசால் பரிந்துரை கோரப்படும் பிற்படுத்தப்பட்டோர் தொடர்பான பொருள்கள் பிறவற்றையும் ஆய்வுசெய்து பரிந்துரை வழங்குதல்.

ஆணையத்தின் மேற்கூறப்பட்ட பணிகள், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கூறு 16(4) மற்றும் இதர பிற தொடர்புடைய கூறுகளின் அடிப்படையிலும், இப்பொருள் தொடர்பாக உச்சநீதிமன்றம் எடுத்துள்ள பல்வேறு முடிவுகளையொட்டியும் அமையும். இவ்வாணையத்தின் பணிகள் நீதிமுறை–சார்புடைய (quasi-judicial) தன்மை வாய்ந்தது.

## 4. தற்போதுள்ள ஆணையத்தின் அமைப்பு

28.12.2012 அன்று முதல் மறுசீரமைக்கப்பட்ட ஆணையத்தின் பதவிக்காலம் 3(மூன்று) ஆண்டுகள் ஆகும். கடைசியாக மறுசீரமைக்கப்பட்ட ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்:—

| | | | |
|---|---|---|---|
| 1) | நீதியரசர் திரு. எம்.எஸ்.ஜனார்தனம்,<br>ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் | : | தலைவர் |
| 2) | முனைவர் ஆர். தாண்டவன் | : | உறுப்பினர் |
| 3) | முனைவர் சி. முருகதாஸ் | : | உறுப்பினர் |
| 4) | முனைவர் வி.ஆர்.திருநாராயணன் | : | உறுப்பினர் |
| 5) | முனைவர் எம்.ஆர்.சீனிவாசன் | : | உறுப்பினர் |
| 6) | முனைவர் வி.எம். முத்துக்குமார் | : | உறுப்பினர் |
| 7) | முனைவர் கே. ஜெயராமன் | : | உறுப்பினர் |
| | அலுவல்சார் உறுப்பினர்கள் | | |
| 8) | பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் | : | உறுப்பினர் |
| 9) | மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும்<br>சீர்மரபினர் நல ஆணையர் | : | உறுப்பினர்—செயலர் |

## 5. ஆணையத்திற்கு மனு அல்லது முறையீடு அனுப்புதல்

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு அனுப்பப்படும் மனு அல்லது முறையீடு, இவ்வாணைய உறுப்பினர்—செயலருக்கு கீழ்காணும் முகவரிக்கு எழுத்துப்பூர்வமாக அனுப்பப்படவேண்டும்.

உறுப்பினர்—செயலர்,
தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்,
212, ராமகிருஷ்ணா மடம் சாலை,
மயிலாப்பூர், சென்னை 600 004.

## 6. 2005ஆம் ஆண்டு தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொது தகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்

| அலுவலர் | பதவி | முகவரி | தொலைபேசி எண். | நிகரி எண். |
|---|---|---|---|---|
| பொது தகவல் அலுவலர் | சார்புச் செயலர் | தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம், 212, ராமகிருஷ்ணா மடம் சாலை, மயிலாப்பூர், சென்னை 600 004 | 044—24643935 | 044—24643935 |
| மேல்முறையீட்டு அலுவலர் | உறுப்பினர்—செயலர் & மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் | தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம், 212, ராமகிருஷ்ணா மடம் சாலை, மயிலாப்பூர், சென்னை 600 004 | 044—24643935 / 28546193 | 044—24643935 |

# சிறுபான்மையினர் நலத்துறை

இவ்வரசு சிறுபான்மையின மக்களின் கல்வி, சமூக மற்றும் பொருளாதார நிலைகளை மேம்படுத்திடவும், பாரத பிரதமரின் புதிய 15 அம்ச திட்டத்தின் செயலாக்கத்தை கண்காணித்திடவும் இச்சமூக மக்களின் முன்னேற்றத்திற்காகவும் பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்திடவும் தனியே ஒரு சிறுபான்மையினர் நல இயக்ககத்தை மாநில மற்றும் மாவட்ட அளவில் பணியாளர்களைக் கொண்டு ஏற்படுத்தியுள்ளது.

## 2. இடஒதுக்கீடு

தமிழ்நாட்டைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோர் இனத்தவருக்கென்று ஏற்கனவே உள்ள 30 சதவீத இடஒதுக்கீட்டில் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெற்றுள்ள இஸ்லாமியர்களுக்கு கல்வி நிறுவனங்களில் சேர்க்கை மற்றும் அரசு / அரசு சார்ந்த நிறுவனங்களில் வேலைவாய்ப்புக்கென 3.5 சதவீத உள் இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

## 3. கல்வி உதவித் தொகைகள்

அரசு / அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கல்வி நிறுவனங்களில் பயிலும் கிருத்துவர், இஸ்லாமியர், சீக்கியர், புத்தமதத்தினர், பார்சி மற்றும் ஜெயின் மதங்களைச் சார்ந்த சிறுபான்மையின மாணவ / மாணவியருக்கு மைய மற்றும் மாநில அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் கல்வி உதவித் தொகை திட்டங்கள் பின்வருமாறு:-

| வ.எண் | திட்டத்தின் பெயர் | வகுப்பு / பாடப்பிரிவு | நிதி பங்கீடு |
|---|---|---|---|
| 1. | பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகை | 1ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை | 100% (மைய அரசு) |
| 2. | பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை | XIஆம் வகுப்பு முதல் ஆராய்ச்சி படிப்பு வரை | 100% (மைய அரசு) |
| 3. | தகுதி (ம) வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகை | தொழிற்கல்வி/தொழிற் நுட்ப கல்வி | 100% (மைய அரசு |

**பொதுவான விவரங்கள்**

அ. சிறுபான்மையின நலத்துறை மூலம் மைய அரசின் கல்வி உதவித் தொகையை பெற இயலாத சிறுபான்மையின மாணவ / மாணவியர்கள், அவர்களது பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பின் கல்வி உதவித் தொகைக்காக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையில் துறையின் நிபந்தனைகளுக்குட்பட்டு விண்ணப்பிக்கலாம்.

ஆ.அஞ்சல் வழி மூலம் பயில்பவர்களுக்கு இக்கல்வி உதவித் தொகை ஒப்பளிக்கப்படமாட்டாது.

இ. ஒரு குடும்பத்தில் இரண்டு மாணவ / மாணவியருக்கு மட்டுமே கல்வி உதவித் தொகை ஒப்பளிக்கப்படும்.

ஈ. மொத்த பயனாளிகளில் 30% மாணவியருக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

**விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:**

1. மதிப்பெண் பட்டியல்.
2. பெற்றோர்களால் சுய சான்றளிக்கப்பட்ட சாதி மற்றும் வருமான சான்றிதழ்.
3. நிரந்தர (அ) தற்போதைய முகவரிக்கான அத்தாட்சி.
4. கல்விக் கட்டணம் செலுத்திய ரசீது, வங்கிக் கணக்கு எண் மற்றும் IFS Code அடங்கிய வங்கி பாஸ் புத்தகத்தின் நகல்.

## 3.1. பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகை

ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவ–மாணவியருக்கு கற்பிப்புக்கட்டணம் மற்றும் பராமரிப்புக் கட்டணம் நேரடியாக மாணவ/ மாணவிகளின் வங்கிக் கணக்கிலேயே பற்று வைக்கப்படும்.

**அ. தகுதிக்கான நிபந்தனைகள்**

| | |
|---|---|
| **மதிப்பெண்** | முந்தைய ஆண்டு இறுதி தேர்வில் (ஒன்றாம் வகுப்பு நீங்கலாக) 50 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும். |
| **வருமானம்** | பெற்றோர் (அ) பாதுகாவலர் ஆண்டு வருமானம் (அனைத்து வழிகளிலும்) ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |

**ஆ. வழங்கப்படும் கல்விக் கட்டண விவரம்:**

| வகுப்பு | * சேர்க்கை கட்டணம் ரூ. | * கற்பிப்புக் கட்டணம் ரூ. | பராமரிப்பு படி (கல்வியாண்டில் 10 மாதங்களுக்கு மட்டும்) | |
|---|---|---|---|---|
| | | | விடுதியில் தங்கி பயில்பவர்கள் ரூ. | விடுதி வசதியின்றி பயில்பவர்கள் ரூ. |
| **1 –5** | **–** | **–** | **–** | **1,000** |
| 6-10 | **500** | **3,500** | **6,000** | **1,000** |

**குறிப்பு :** மாணவ / மாணவியர்கள் செலுத்திய தொகை (அ) மேலே குறிப்பிடப்பட்ட தொகை, இதில் குறைவானது வழங்கப்படும்.

**இ. இக்கல்வி உதவித் தொகை பெற விண்ணப்பது எப்படி**

- **1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரையிலான மாணவ / மாணவியர்கள்–** எளிமையாக்கப்பட்ட புதியது / புதுப்பித்தல் விண்ணப்பப்படிவங்களை www.bcmbcmw.tn.gov.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்யலாம். அனைத்து விவரங்களையும் பூர்த்தி செய்து, மதிப்பெண் பட்டியல், சாதி சான்றிதழ், வருமான சான்றிதழ், நிரந்தர மற்றும் தற்போதைய முகவரிக்கான விவரம், வங்கிக் கணக்கு எண் மற்றும் IFS Code அடங்கிய வங்கி பாஸ் புத்தகம் ஆகியவற்றின் நகல்களுடன் கல்வி நிலையங்களிலேயே இத்துறையால் வெளியிடப்படும் விளம்பரங்களில் குறிப்பிட்டுள்ள காலக்கெடுவிற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.
- **9ஆம் வகுப்பு மற்றும் 10ஆம் வகுப்பு வரையிலான மாணவ / மாணவியர்கள்–** மாணவ / மாணவியர்கள் புதியது / புதுப்பித்தல் கல்வி உதவித் தொகை விண்ணப்பங்களை ஆன்லைன் (Online) மூலம் www.scholarships.gov.in என்ற இணையதள முகவரியில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். பதிவு செய்த கல்வி உதவித் தொகை படிவத்தை பதிவிறக்கம் செய்து அத்துடன் மதிப்பெண் சான்றிதழ்கள், சாதி சான்றிதழ் , வருமானம் சான்றிதழ் நிரந்தர மற்றும் தற்போதைய முகவரிக்கான ஆதாரம், கல்விக் கட்டணம் செலுத்திய ரசீது, வங்கிக் கணக்கு எண் (CBS A/c No) மற்றும் IFS Code அடங்கிய வங்கி பாஸ் புத்தகம் ஆகியவற்றின் நகல்களுடன் கல்வி நிலையங்களிலேயே உரிய காலக்கெடுவிற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

**ஈ. கல்வி நிலையங்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை**

- பள்ளி முதல்வர்கள் / தலைமையாசிரியர்கள், மாணவ / மாணவியர் பூர்த்தி செய்து இணைப்புகளுடன் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களை தணிக்கைக்காக கல்வி நிலையத்தில் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.
- பள்ளி முதல்வர்கள் / தலைமையாசிரியர்கள், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கூர்ந்தாய்வு செய்து மேற்கண்ட நிபந்தனைகளின்படி சரியாக உள்ளதென திருப்தியடைந்த பின்னர் (புதுப்பித்தல் மற்றும் புதிய விண்ணப்பங்களை தனித்தனியே) பெறுதல் வேண்டும்.
- 1 ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களின் புதியது மற்றும் புதுப்பித்தல் இனங்களுக்கான கேட்பு பட்டியல்களை குறிப்பிட்ட படிவத்தில் தயார் செய்து அதற்கான குறுந்தகட்டுடன் (CD) தங்கள் மாவட்ட எல்லைக்குட்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரிடம் உரிய காலக்கெடுவிற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

- 9 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவ / மாணவியர் ஆன்லைன் வழியே பூர்த்தி செய்யப்பட்ட (புதியது / புதுப்பித்தல்) விண்ணப்பப்படிவங்களை நெறிமுறைகளின்படி கூர்ந்தாய்வு செய்து ஆன்லைனில் அனுப்புவதுடன் ஆன்லைனில் உள்ள கேட்பு பட்டியலை பிரதி எடுத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின நல அலுவலர்களுக்கு தவறாது அளிக்க வேண்டும்.

## 3.2. பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை

இக்கல்வி உதவித் தொகை 11 மற்றும் 12 ஆம் வகுப்பில் வாழ்க்கை தொழிற்கல்வி (Vocational Courses) 11 மற்றும் 12 ஆம் வகுப்பு நிலைகளில், ஐடிஐ / ஐடிசி, என்.சி.வி.டி பயிற்சி (NCVT), இளங்கலை பட்டப்படிப்பு, முதுகலை பட்டப்படிப்பு, ஆராய்ச்சி படிப்பு, பாலிடெக்னிக், ஆசிரியர் பட்டயப்பயிற்சி, செவிலியர்பயிற்சி மற்றும் தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகை திட்டத்தில் இடம் பெறாத பாடப்பிரிவுகள் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு வழங்கப்படுகிறது.

### அ. தகுதிக்கான நிபந்தனைகள்

| | |
|---|---|
| **மதிப்பெண்** | முந்தைய ஆண்டு இறுதி தேர்வுகளில் 50 விழுக்காடு மதிப்பெண்களுக்கு குறையாமல் பெற்றிருத்தல் வேண்டும். |
| **வருமானம்** | பெற்றோர் (அ) பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |

### ஆ. வழங்கப்படும் கல்விக் கட்டண விவரம்:

| படிப்பு விவரங்கள் | (*)சேர்க்கை (ம) கற்பிப்புக் கட்டணம் (அதிக பட்சமாக) ரூ. | பாரமரிப்புக் கட்டணம் (கல்வி ஆண்டில் 10 மாதங்களுக்கு மட்டும்) | |
|---|---|---|---|
| | | விடுதியில் தங்கி பயில்பவர்கள் ரூ. | விடுதி வசதியின்றி பயில்பவர்கள் ரூ. |
| +1 (ம) +2 வகுப்புகள் | **7,000** | **3,800** | **2,300** |
| +1, +2, வாழ்க்கை தொழிற்கல்வி, ஐடிஐ, ஐடிசி (என்.சி.வி.டி உட்பட), பாலிடெக்னிக், நர்சிங்/ ஆசிரியர் பட்டயப் பயிற்சி ஆகியவை | **10,000** | **3,800** | **2,300** |
| இளங்கலை மற்றும் முதுகலை படிப்பு | **3.000** | **5,700** | **3,000** |
| ஆராய்ச்சி படிப்பு | **–** | **12,000** | **5,500** |

**குறிப்பு :** மாணவ / மாணவியர்கள் செலுத்திய தொகை (அ) மேலே குறிப்பிடப்பட்ட தொகை, இதில் குறைவானது வழங்கப்படும்.

**இ. இக்கல்வி உதவித் தொகை பெற விண்ணப்பிப்பது எப்படி**

- மாணவ / மாணவியர்கள் புதியது / புதுப்பித்தல் கல்வி உதவித் தொகை விண்ணப்பங்களை ஆன்லைன் (Online) மூலம் www.scholarships.gov.in என்ற இணையதள முகவரியில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.
- பதிவு செய்த கல்வி உதவித் தொகை படிவத்தை பதிவிறக்கம் செய்து அத்துடன் மதிப்பெண் சான்றிதழ்கள், சாதி சான்றிதழ், வருமானச் சான்றிதழ், நிரந்தர மற்றும் தற்போதைய முகவரிக்கான ஆதாரம், கல்விக் கட்டணம் செலுத்திய ரசீது, வங்கிக் கணக்கு எண் (CBS A/c No) மற்றும் IFS Code அடங்கிய வங்கி பாஸ் புத்தகம் ஆகியவற்றின் நகல்களுடன் கல்வி நிலையங்களிலேயே உரிய காலக்கெடுவிற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

**ஈ. கல்வி நிலையங்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை**

- தலைமை ஆசிரியர்கள்/ முதல்வர்கள் தத்தம் நிலையத்தின் பெயர் www.scholarships.gov.in இணைய தளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்யவேண்டும். இல்லையெனில், தொடர்புடைய மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின நல அலுவலர்களை அணுக வேண்டும்.

- தலைமை ஆசிரியர்கள்/முதல்வர்கள் மாணவ / மாணவியர்கள் ஆன்லைன் மூலம் பதிவு செய்து, அனைத்து இணைப்புகளுடன் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களை தணிக்கைக்காக கல்வி நிலையத்தின் பாதுகாப்பில் வைத்திருத்தல் வேண்டும்.

- தலைமை ஆசிரியர்கள்/முதல்வர்கள் ஆன்லைன் வழியே பூர்த்தி செய்யப்பட்ட புதியது / புதுப்பித்தல் விண்ணப்பப்படிவங்களை நெறிமுறைகளின்படி கூர்ந்தாய்வு செய்து, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின நல அலுவலர்களுக்கு ஆன்லைன் வழியே தவறாது அனுப்புதல் வேண்டும்.

- தலைமை ஆசிரியர்கள்/முதல்வர்கள் கேட்புப் பட்டியலுடன் விண்ணப்பப்படிவம் மற்றும் மதிப்பெண் சான்றிதழ்கள், சாதி சான்றிதழ் ,வருமானச் சான்றிதழ், நிரந்தர மற்றும் தற்போதைய முகவரிக்கான ஆதாரம், கல்விக் கட்டணம் செலுத்திய ரசீது, வங்கிக் கணக்கு எண் (CBS A/c No) மற்றும் IFS Code அடங்கிய வங்கி பாஸ் புத்தகத்தின் நகல்களுடன் சம்மந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின நல அலுவலரிடம் உரிய காலக்கெடுவிற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

## 3.3. தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகை

இக்கல்வி உதவித் தொகை இளங்கலை / முதுகலை தொழில் மற்றும் தொழில் நுட்ப கல்வியில் கீழ்க்காணும் பாடப்பிரிவு பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு வழங்கப்படும்.

**Engineering & Technology Courses (B.Tech/B.E./M.Tech.)**

| SL.NO. | ENGINEERING & TECHNOLOGY STREAM | DURATION OF COURSES |
|---|---|---|
| 1 | B.Tech in Aerospace Engineering | 4 Years |
| 2 | M.Tech in Aerospace & Applied Mechanics | 2 Years |
| 3 | B.Tech in Aircraft Maintenance Engineering | 4 Years |
| 4 | B.Tech in Radio Physics & Electronics | 3 years |
| 5 | M.Tech in Radio Physics & Electronics | 2 Years |
| 6 | B. Tech in Pharmaceuticals & Fine Chemicals | 4 Years |
| 7 | M.Tech in Pharmaceuticals & Fine Chemicals | 2 Years |
| 8 | B.Tech in Optics & Opto Electronics | 4 Years |
| 9 | M.Tech in Optics & Opto Electronics | 2 Years |
| 10 | B.Tech Jute & Fibre Technology | 4 Years |
| 11 | M.Tech Jute & Fibre Technology | 2 Years |
| 12 | M.Tech in VLSI Design | 2 Years |
| 13 | M.Tech in Nano Technology | 2 Years |
| 14 | B.Tech in Bio-Chemical Engineering | 4 Years |
| 15 | M.Tech in Communication Engineering | 2 Years |
| 16 | M.Tech in Manufacturing Engineering | 2 Years |
| 17 | M.Tech in Mechatronics | 2 Years |
| 18 | M.Tech in Control & Instrumentation Engineering | 2 Years |
| 19 | BE in Information Science | 4 Years |
| 20 | BE in Bio informatics Eng. | 4 Years |
| 21 | BE in Manufacturing Eng. | 4 Years |
| 22 | BE in Fire & Safety Eng. | 4 Years |
| 23 | BE in Mechatronics | 4 Years |
| 24 | BE in Instrumentation Technology | 4 Years |
| 25 | B. Tech in Nano Technology | 4 Years |
| 26 | B. Tech in Carpet Technology | 4 Years |
| 27 | B. Tech in Silk Technology | 4 Years |
| 28 | B. Tech in Avionics-IIST | 4 Years |
| 29 | B. Tech in Power Electronics | 4 Years |
| 30 | ME in Thermal Eng. | 2 Years |
| 31 | M.Tech in Seismology | 2 Years |
| 32 | M.Tech in Structural Eng. | 2 Years |
| 33 | B.Tech (Architecture) | 3 to 5 years |
| 34 | IPG-IT Duo M.Tech | 5 years |

| | | |
|---|---|---|
| 35 | ME (Communication System Eng.) | 2 Years |
| 36 | ME (Networking Eng.) | 2 Years |
| 37 | ME (Software Eng.) | 2 Years |
| 38 | ME (Applied Eng.) | 2 Years |
| 39 | ME (Embedded Systems Tech) | 2 Years |
| 40 | ME (Power System Eng.) | 2 Years |
| 41 | ME (Power Electronics & Drives) | 2 Years |
| 42 | ME (Electrical Drive & Embedded Control) | 2 Years |
| 43 | M.Tech (Mainframe Tech) | 2 Years |
| 44 | M.Tech (Multimedia Tech) | 2 Years |
| 45 | ME (Eng. Design) | 2 Years |
| 46 | ME (CAD/CAM) | 2 Years |
| 47 | BE (Metallurgical and Material Eng.) | 4 Years |
| 48 | ME (Energy Eng.) | 2 Years |
| 49 | ME (Process Control and Instrumentation) | 2 Years |
| 50 | ME (Transportation Eng. and Management) | 2 Years |
| 51 | ME (Very-large-scale integration) SYSTEM | 2 Years |
| 52 | ME (Industrial Safety Eng.) | 2 Years |
| 53 | ME (Thermal Power Eng.) | 2 Years |
| 54 | ME (Materials Science and Eng.) | 2 Years |
| 55 | ME (Industrial Metallurgy) | 2 Years |
| 56 | ME (Welding Eng.) | 2 Years |
| 57 | ME (Industrial Eng.) | 2 Years |
| 58 | ME (Manufacturing Tech.) | 2 Years |
| 59 | ME (NCN-destructive Eng.) | 2 Years |
| 60 | ME (Computer and Communication Eng.) | 2 Years |
| 61 | ME (Construction Eng. & Management) | 2 Years |
| 62 | BE (Petrochemical Eng.) | 4 Years |
| 63 | ME (Comminucation Eng.) | 2 Years |
| 64 | ME (Digital Communication and Network Eng.) | 2 Years |
| 65 | BE (Metallurgical Engineering) | 4 Years |
| 66 | BE (Robotic and Automation) | 4 Years |
| 67 | BE Electrical and Electronics Engineering (Sandwich) | 5 years |
| 68 | BE Production Engineering (Sandwich) | 5 years |
| 69 | ME (Communication System Programme) | 2 Years |
| 70 | M.Tech (Measurement & Control) | 2 Years |
| 71 | M.Tech (Process Control & Instrumentation) | 2 Years |
| 72 | B.Tech (Packing Tech.) | 3 years |
| 73 | B.Tech (Printing Tech.) | 3 years |
| 74 | B.Tech (Bio Informatics) | 3 years |
| 75 | M.Tech (Automotive Electronics and Eng.) | 2 Years |
| 76 | M.Tech (Automotive Material & Manufacturing) | 2 Years |

| | | |
|---|---|---|
| 77 | M.Tech (Welding Tech.) | 2 Years |
| 78 | M.Tech (Networking) | 2 Years |
| 79 | M.Tech (Financial Computing) | 2 Years |
| 80 | M.Tech (Subsurface Construction Eng.) | 2 Years |
| 81 | M.Tech (Construction Eng.) | 2 Years |
| 82 | BE (Medical Electronics Eng.) | 4 Years |
| 83 | B.E (Electronics and Instrumentation Engineering) | 4 Years |
| 84 | M.E (Power System) | 2 Years |
| 85 | M.E (Manufacturing Engineering) | 2 Years |
| 86 | B.Tech (Bio Information) | 4 Years |
| 87 | B.Tech (Food Processing and Engineering) | 4 Years |
| 88 | M.Tech (Renewable Energy Technology) | 2 Years |
| 89 | M.Tech (Multimedia Tech.) | 2 Years |
| 90 | M.Tech (Integrated Water Resources Management) | 2 Years |
| 91 | M.Tech (Embedded Systems) | 2 Years |
| 92 | M.Tech in Cyber Security | 2 Years |
| | **MEDICAL AND PARA MEDICAL** | |
| 1 | MD (Doctor of Medicine) | 3 years |
| 2 | BNYS (Bachelor of Naturopathy and Yogic Sciences) | 5 years |
| 3 | D. Pharmacy | 4 Years |
| 4 | BSMS (Bachelor of Siddha Medicine and Surgery) | 4 Years |
| 5 | M.VSc. & A.H (Master of Vaterinary Science & Animal Husbandry) | 3 years |
| 6 | Post basic B.Sc. Nursing | 2 Years |
| | **FASHION & TECHNOLOGY** | |
| 1 | B.Tech (Fashion Tech.) Textile Tech | 3 years |
| 2 | Master of Fashion Management (MFM) | 2 Years |
| | **HOTEL MANAGEMENT & CATERING TECHNOLOGY (UNDER GRADUATE AND POST GRADUATE LEVEL COURSES ONLLY** | |
| 1 | Hostel Management & Catering Technology (HMCT-4 Years) | 4 Years |
| | **LAW** | |
| 1 | B.A. B.L | 5 years |
| 2 | B.A (L.L.B) | 5 years |
| | **MCA** | |
| 1 | MCA (5 year Dual Degree course in MCA | 5 years |

<u>**ஆ. இக்கல்வி உதவித் தொகை பெறுவதற்கான தகுதிகள்**</u>

| | |
|---|---|
| **மதிப்பெண்** | **புதியது :** தொழிற்கல்வி/தொழில் நுட்பக் கல்வியில் நுழைவுத்தேர்வின்றி சேர்க்கை பெற்றுள்ள மாணவ/மாணவியர்கள் பன்னிரண்டாம் வகுப்பு பொது தேர்வு/பட்டப்படிப்பு/பாலிடெக்னிக் இறுதி தேர்வில் (Lateral Entry) 50 விழுக்காடு மதிப்பெண்களுக்கு குறையாமல் பெற்றிருத்தல் வேண்டும்.<br>**புதுப்பித்தல் :** முந்தைய ஆண்டின் தேர்வு/பருவமுறை தேர்வுகளில் 50 விழுக்காடு மதிப்பெண்களுக்கு குறையாமல் பெற்று தேர்ச்சி பெற்றிருத்தல்வேண்டும் |
| **வருமானம்** | பெற்றோர் (அ) பாதுகாவலர் ஆண்டு வருமானம் (அனைத்து வழிகளிலும்) ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |

<u>**இ வழங்கப்படும் கல்விக் கட்டணம்**</u>

| **விவரம்** | **விடுதியில் தங்கி பயில்பவர்கள்** | **விடுதி வசதியின்றி பயில்பவர்கள்** | **குறிப்பு** |
|---|---|---|---|
| கல்விக் கட்டணம் (சேர்க்கை, கற்பிப்பு, நூலகம், தேர்வு (ம) இதர திரும்ப செலுத்தும் கட்டாயக் கட்டணங்கள்) | ரூ. 20,000/– | ரூ. 20,000/– | உண்மையில் மாணவ / மாணவியர் செலுத்திய தொகை / அல்லது ரூ.20000/– (அ) இதில் எது குறைவோ அந்த தொகை |
| பராமரிப்பு படி | மாதமொன்றுக்கு ரூ. 1000/– வீதம் | மாதமொன்றுக்கு ரூ.500/– வீதம் | கல்வியாண்டில் அதிக பட்சம் பத்து மாதங்களுக்கு மட்டும் |

**குறிப்பு :** மைய அரசால் அறிவிக்கப்பட்ட பட்டியலில் இடம் பெற்றுள்ள கல்வி நிறுவனங்களில், தமிழ்நாட்டில் உள்ள (Listed Institutions in Tamil Nadu notified by Govt. of India) IIT சென்னை, NIFT சென்னை, NIT திருச்சி, IIM திருச்சி மற்றும் IIT & Design Management காஞ்சிபுரம் ஆகியவற்றில் பயிலும் மாணவ / மாணவியர்கள் செலுத்தும் கல்விக் கட்டணம் (திரும்பப் பெறும் கட்டணங்கள் நீங்கலாக) அனைத்தும் முழுமையாக வழங்கப்படும்.

**ஈ. இக்கல்வி உதவித் தொகை பெற விண்ணப்பது எப்படி**

தொழிற் கல்வி, தொழிற்நுட்ப கல்வியில் முதல் பட்டதாரி சலுகை (கற்பிப்புக் கட்டணம்) பெற்றுள்ள மாணவ / மாணவியர் இக்கல்வி உதவித் தொகைக்கு விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.

- தொழிற்கல்வி பயிலும் மாணவ / மாணவியர் புதியது / புதுப்பித்தலுக்கான கல்வி உதவித் தொகை விண்ணப்பங்களை ஆன்லைன் (Online) மூலம் www.scholarships.gov.in என்ற இணையதள முகவரியில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.
- பதிவு செய்த கல்வி உதவித் தொகை படிவத்தை பதிவிறக்கம் செய்து அத்துடன் மதிப்பெண் சான்றிதழ்கள், கல்வி கட்டணம் செலுத்திய ரசீது, சாதி சான்றிதழ், வருமானச் சான்றிதழ் நிரந்தர மற்றும் தற்போதைய முகவரிக்கான விவரம் ஆகியவற்றை சான்றொப்பம் செய்து அதனுடன் வங்கிக் கணக்கு எண் (CBS A/c No) மற்றும் IFS Code அடங்கிய வங்கி பாஸ் புத்தகம் ஆகியவற்றின் நகல்களுடன் குறிப்பிட்ட கல்வி நிலையங்களிலேயே உரிய காலக்கெடுவிற்குள் சமர்ப்பிக்க வேண்டும். கல்விக் கட்டணம் செலுத்திய ரசீது கட்டாயமாக இணைக்கப்படவேண்டும்.
- புதுப்பித்தலுக்கான கல்வி உதவித் தொகை விண்ணப்பங்களை மாணவ / மாணவியர்கள் ஆன்லைன் (Online) மூலம் அதற்கான இணைப்புகளுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

**உ. கல்வி நிலையங்கள்மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கை**

- கல்வி நிலையத்தின் முதல்வர்கள், தத்தம் கல்வி நிலையத்தின் பெயர் www.scholarships.gov.in என்ற இணைய தளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்யவேண்டும். இல்லையெனில், சென்னை–2, சிறுபான்மையினர் நல ஆணையரகத்தை தொடர்பு கொள்ள வேண்டும்.
- கல்வி நிலையத்தின் முதல்வர்கள், மாணவ / மாணவியரால் ஆன்லைன் மூலம் பதிவு செய்த விண்ணப்பங்களை அனைத்து இணைப்புகளுடன் பெற்று விண்ணப்பங்கள் தகுதிகளின்படி திருப்தியாக உள்ளதை கூர்ந்தாய்வு செய்து, ஆன்லைன் வழியாக சிறுபான்மையின நல ஆணையருக்கு (Next Level) அனுப்புதல் வேண்டும்.
- மேலும் புதியது மற்றும் புதுப்பித்தல் கல்வி உதவித் தொகை அசல் விண்ணப்பங்களை மதிப்பெண் சான்றிதழ்கள், சாதி சான்றிதழ், வருமானச் சான்றிதழ், நிரந்தர மற்றும் தற்போதைய முகவரிக்கான ஆதாரம், கல்விக் கட்டணம் செலுத்திய ரசீது, வங்கிக் கணக்கு எண் ஆகியவற்றுடன் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் சென்னை–2, சிறுபான்மையினர் நல ஆணையருக்கு அனுப்ப வேண்டும்.

## 4 . பொதுப்பரிசுகள்

### மாநில மற்றும் மாவட்ட அளவிலான பரிசுகள் வழங்குதல்

சிறுபான்மையினத்தைச் சார்ந்த மாணவ / மாணவியர்களை ஊக்குவிக்கும் வகையில் அரசு பொதுத் தேர்வுகளில் பத்தாம் மற்றும் பன்னிரண்டாம் வகுப்பில் தமிழை முதன்மை பாடமாக பயின்று அதிக மதிப்பெண்கள் பெறும் முதல், இரண்டு மற்றும் மூன்றாவது நிலைகளில் தலா ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு மாநில மற்றும் மாவட்ட அளவிலான பரிசுகள் கீழ்கண்டவாறு வழங்கப்படுகிறது. ஒரே மதிப்பெண்கள் பெற்ற அனைத்து மாணவ / மாணவியர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படும்.

| பரிசுகள் | வகுப்பு | முதல் பரிசு ரூ. | இரண்டாம் பரிசு ரூ. | மூன்றாம் பரிசு ரூ. | சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் மற்றும் அணுக வேண்டிய மாவட்ட அலுவலர் |
|---|---|---|---|---|---|
| மாநில அளவில் | 12 | 50,000 | 30,000 | 20,000 | **சான்றொப்பமிட்ட நகல்கள்**<br>**அ.** 10/12ஆம் வகுப்பு பொதுத் தேர்வு மதிப்பெண் சான்று.<br>**ஆ.** சாதிச்சான்று. |
| | 10 | 25,000 | 20,000 | 15,000 | |
| மாவட்ட அளவில் | 12 | 6,000 | 4,000 | 2,000 | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம். |
| | 10 | 3,000 | 2,000 | 1,000 | |

இத்திட்டம் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் பயில்பவர்களுக்கும் பொருந்தும். மதம் மாறிய கிறித்துவ ஆதி–திராவிடர்களுக்கு மேற்படி பரிசுத் தொகை ஆதி–திராவிடர் நலத்துறையில் வழங்கப்படும்.

## 5. உருது மொழி பயிலும் மாணவ / மாணவியருக்கு மாநில அளவிலான பரிசுகள்

பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் உருதுமொழியை முதல் அல்லது இரண்டாவது மொழியாக பயின்று மாநில அளவில் முதல் இரண்டு மற்றும் மூன்றாம் நிலைகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் ஒரு மாணவர் மற்றும் மாணவியருக்கு கீழ்கண்டவாறு பரிசுகள் வழங்கப்படுகிறது.

| பரிசு | 10–ஆம் வகுப்பு | 12–ஆம் வகுப்பு | சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் மற்றும் அணுக வேண்டிய மாவட்ட அலுவலர் |
|---|---|---|---|
| முதல் | ரூ.10,000 | ரூ.15,000 | **சான்றொப்பமிட்ட நகல்கள்**<br>**அ.** 10/12ஆம் வகுப்பு பொதுத் தேர்வு மதிப்பெண் சான்று.<br>**ஆ.** சாதிச்சான்று.<br>மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம். |
| இரண்டாம் | ரூ.5,000 | ரூ.10,000 | |
| மூன்றாம் | ரூ.3,000 | ரூ.5,000 | |

## 6. சிறுபான்மையினர் விடுதிகள்

- சிறுபான்மையினர் விடுதிகளில் தங்கி தொடர்ந்து கல்வி பயில ஏதுவாக எவ்விதக் கட்டணமும் இன்றி உணவு மற்றும் உறைவிட வசதிகளுடன் 14 சிறுபான்மையின மாணவ / மாணவியர் விடுதிகள் சென்னை (1), வேலூர் (3), திருச்சி (1), தஞ்சாவூர் (1), மதுரை (1), திண்டுக்கல் (1), தேனி (1), கிருஷ்ணகிரி (1), கோயம்புத்தூர் (1), திருநெல்வேலி (2) மற்றும் கன்னியாகுமரி (1) ஆகிய மாவட்டங்களில் இயங்கி வருகின்றன.

விவரங்கள் பின்வருமாறு :

| வ.எண் | மாவட்டம் | விடுதி இருப்பிடம் | ஒப்பளிக்கப்பட்ட மாணவியர்/மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| **பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகள்** | | | |
| 1 | வேலூர் | வாணியம்பாடி | 50 |
| 2 | திருச்சி | வைகுண்டகோஷ்புரம் | 50 |
| 3 | திண்டுக்கல் | பேகம்பூர் | 50 |
| 4 | கோயம்புத்தூர் | சுந்தராபுரம் | 50 |
| 5 | திருநெல்வேலி | பாளையங்கோட்டை | 50 |
| **பள்ளி விடுதிகள்** | | | |
| 6 | திருநெல்வேலி | கடையநல்லூர் | 50 |
| 7 | மதுரை | மதுரை கிழக்கு | 100 |
| 8 | கிருஷ்ணகிரி | தேன்கனிக்கோட்டை | 100 |
| 9 | தேனி | தேனிநகரம் | 100 |
| | | **கல்லூரி விடுதிகள்** | |
| 10 | வேலூர் | மேல்விஷாரம் | 100 |
| 11 | தஞ்சாவூர் | கும்பகோணம் | 100 |
| 12 | கன்னியாகுமரி | நாகர்கோவில் | 100 |
| 13 | சென்னை | ராயப்பேட்டை | 100 |
| 14 | வேலூர் | ஆம்பூர் (ஆண்கள்) | 100 |

- நான்காம் வகுப்பு முதல் முதுகலை பட்டப்படிப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவியர்கள் விடுதியில் சேர அனுமதிக்கப்படுவர். மாணவ / மாணவியரது பெற்றோர்/பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூபாய் ஒரு லட்சத்திற்கு மிகாமல் இருத்தல்வேண்டும்.
- மாற்றுத் திறனாளிகளுக்கு விடுதியில் சேர 3% இட ஒதுக்கீடு வழங்கப்படும்.
- விண்ணப்ப படிவங்களை விடுதி காப்பாளினியிடமிருந்து இலவசமாக பெற்று பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய காலக்கெடுவிற்குள் சம்மந்தப்பட்ட விடுதி காப்பாளினியிடம் சமர்ப்பிக்கவேண்டும்.

- நான்காம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவிகளுக்கு இரண்டு செட் சீருடைகள் வழங்கப்படும்.
- கணினி, நூலகப் புத்தகங்கள், பாடக்குறிப்பு புத்தகங்கள் மற்றும் சிறப்பு வழிகாட்டிகள் ஆகியவை விடுதி மாணவிகளுக்கு அவர்களது அறிவுத்திறனை மேம்படுத்திட வழங்கப்படுகிறது.
- விடுதிகளில் முகாம்வாழ் இலங்கைத்தமிழர்களின் குழந்தைகளுக்கு கூடுதலாக 5 இடங்கள் ஒதுக்கப்படுகின்றன.
- சொந்தக் கட்டிடங்களில் இயங்கி வரும் கல்லூரி விடுதி மாணவியர்களுக்கு இரண்டடுக்கு கட்டில்கள் வழங்கப்படுகிறது
- பள்ளி விடுதி மாணவியர்களுக்கு ஆங்கில பேசும் திறனை வளர்ப்பதற்காக ஆங்கில பேச்சாற்றல் பயிற்சி வழங்கப்படுகிறது.

## 7. முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம்

- தமிழ்நாட்டிலுள்ள இஸ்லாமிய மதத்தைச் சார்ந்த வயது முதிர்ந்த ஆதரவற்ற, கணவரால் கைவிடப்பட்ட, முஸ்லீம் மகளிர் நலனுக்காக மாவட்ட ஆட்சியர் தலைமையில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது.
- வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும்வகையில் உதவிகள் மற்றும் தேவைக்கேற்ப பயிற்சிகள் வழங்கப்படும்.
- சங்கங்கள் திரட்டும் நன்கொடை நிதி ஆதாரத்திற்கு இணையாக ஒவ்வொரு சங்கத்திற்கும் அதிகபட்சமாக 1:2 என்ற விகிதாச்சாரத்தில் **01.04.2012** முதல் ஆண்டிற்கு ரூ.**20.00** இலட்சம் வரை அரசால் இணை மானியம் வழங்கப்படுகிறது.

## 8. மறுவாழ்வு நிதியுதவி வழங்குதல்

- இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்ட மற்றும் சிறு குற்றங்களுக்காக தண்டனை பெற்று சிறையிலிருந்து வெளிவரும் சிறுபான்மையின மக்களுக்கு மறுவாழ்வு நிதியுதவி அளிக்கப்படுகிறது.
- இனக்கலவரங்களால் உடல் உழைப்பு செய்ய இயலாதவகையில் ஊனமுற்றிருப்பவராக/ பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டவராக அல்லது இந்திய தண்டனைச் சட்டத்தின்கீழ் பெருங்குற்றங்களாக கருதப்படும் எந்தவொரு செயலிலும் ஈடுபடாதவராகவும், முதன்முறையாக சிறு குற்றத்திற்காக சிறை தண்டனை அனுபவித்து மீண்டவராக இருத்தல்வேண்டும்.

- ❖ விண்ணப்பதாரர் உடல்ரீதியாக பாதிக்கப்பட்டவராய் இருப்பின் மாவட்ட அரசு மருத்துவரிடம் பரிசோதித்து அதற்கான சான்று சமர்ப்பிக்க வேண்டும்.
- ❖ விண்ணப்பதாரர் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டிருப்பின் அது தொடர்பாக வட்டாட்சியரிடமிருந்து பொருள் இழப்பீட்டுச் சான்று சமர்ப்பிக்க வேண்டும்.
- ❖ இந்திய தண்டனைச்சட்டம் (Indian Penal Code) விதிகளின் பல்வேறு பிரிவுகளின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ள சிறு குற்றங்கள் மற்றும் தண்டனைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும்.
- ❖ விண்ணப்பதாரர் ஆண்டு வருமானம், கிராமபுறங்களில் வசிப்போருக்கு ரூபாய் 40000க்கு மிகாமலும், நகர்புறங்களில் வசிப்போருக்கு ரூபாய் 60000க்கு மிகாமலும் இருத்தல்வேண்டும்.

## 9. உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்

- ❖ உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் சமூக, பொருளாதார மற்றும் கல்வி ஆகிய நிலைகளில் முன்னேற்றத்தை அடைவதற்கென உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.
- ❖ தமிழ்நாட்டில் உள்ள பள்ளிவாசல்கள் மற்றும் மதரஸாக்களில் பணிபுரியும் ஆலிம்கள், பேஷ் இமாம்கள், அரபி ஆசிரியர்கள் / ஆசிரியைகள், மோதினார்கள், பிலால்கள் மற்றும் இதர பணியாளர்கள், தர்காக்கள், அடக்கஸ்தலங்கள், தைக்காக்கள், ஆஷுர்கானாக்கள் மற்றும் முஸ்லிம் அனாதை இல்லங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்கள் உறுப்பினராகவும் நலத்திட்ட உதவிகள் பெறவும் தகுதியுடையவராவர்.
- ❖ பதிவு பெற்றவுடன் உறுப்பினர் அமரராகிவிட்டால், அவரைச் சார்ந்த (i) அவரது மனைவி (அ) கணவன் (ii) பிள்ளைகள் (iii) விதவை மகள் மற்றும் அவரது பிள்ளைகள் ஆகியோர் வாரிசுதாரர் (Legal heirs) பட்டியலில்அடங்குவர் .
- ❖ குடும்பம் என்பதில், ஆண் உறுப்பினராக இருப்பின், அவரது மனைவி, திருமணமான அல்லது திருமணமாகாத அவரது பிள்ளைகள், சார்ந்துள்ள பெற்றோர், விதவை மருமகள், உறுப்பினரின் இறந்த மகனின் பிள்ளைகள் ஆகியோர் அடங்குவர். பெண் உறுப்பினராக இருப்பின், அவரது கணவர், பிள்ளைகள் ஆகியோர் குடும்பம் என்ற வரைமுறையில் அடங்குவர்.
- ❖ உறுப்பினர் 18 வயது நிறைவு செய்து 60 வயதுக்குள் இருத்தல்வேண்டும்.
- ❖ பதிவு பெற்ற உறுப்பினருக்கு ஓர் அடையாள அட்டை இலவசமாக வாரியத்தால் வழங்கப்படும்.

- ❖ உறுப்பினர் பதிவு செய்து 3 ஆண்டுகள் முடியும் தருவாயில் மீண்டும் பதிவை புதுப்பிக்க வேண்டும்.

## 9.1 உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியத்தில் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள் விவரம்

| வ. எண் | நல உதவிகள் விவரம் | உதவித்தொகை ரூபாய் |
|---|---|---|
| 1. | விபத்து ஈட்டுறுதித்திட்டத்தின் கீழ் | |
| | அ . விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித்தொகை | 1,00,000 |
| | ஆ. விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | 10,000 முதல் 1,00,000 வரை |
| 2. | இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை | 15,000 |
| 3. | ஈமச்சடங்கு செலவிற்கான உதவித்தொகை | 2,000 |
| 4. | **கல்வி உதவித்தொகை** | |
| | அ. 10 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | 1,000 |
| | ஆ. 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,000 |
| | இ. 11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | 1,000 |
| | ஈ. 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | 1,500 |
| | உ. 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவருக்கு | 1,500 |
| | ஊ. முறையான பட்டப்படிப்பு | 1,500 |
| | மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டப்படிப்பு | 1,750 |
| | எ. முறையான பட்ட மேற்படிப்புக்கு | 4,000 |
| | மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்புக்கு | 5,000 |
| | ஏ. தொழிற்கல்வி பட்ட படிப்புக்கு (Professional Courses in Under Graduate level) | 4,000 |
| | மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட படிப்பு (Professional Courses in Under Graduate level) | 6,000 |
| | ஐ. தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு (Professional Courses in Post Graduate level) | 6,000 |
| | மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு (Professional Courses in Post Graduate level) | 8,000 |
| | ஒ. ஐ.டி.ஐ அல்லது பாலிடெக்னிக் படிப்பு | 1,000 |
| | மாணவர் இல்ல வசதியுடன் ஐடிஐ அல்லது பாலிடெக்னிக் படிப்பு | 1,200 |
| 5. | திருமண உதவித்தொகை | 2,000 |
| 6. | மகப்பேறு உதவித்தொகை | |
| | அ. மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1000 வீதம் (6 மாதங்களுக்கு) | 6,000 |
| | ஆ. கருச்சிதைவு/கருக்கலைப்பு | 3,000 |
| 7. | கண் கண்ணாடி செலவுத்தொகையை ஈடு செய்தல் | 500 (அதிகபட்சம்) |
| 8. | முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும் | 1,000 ஒரு மாதத்திற்கு |

குறிப்பு: – வேறு நல வாரியங்கள் மூலம் நலத்திட்ட உதவிகள் பெறுபவர்கள் இவ்வாரியம் மூலம் நல உதவித் திட்டங்களை பெறத் தகுதியற்றவராவர்.

## 10. திறன் வளர்ப்பு பயிற்சி திட்டம்

தமிழ்நாட்டில் படித்த வேலைவாய்ப்பற்ற சிறுபான்மையினத்தைச் சார்ந்த இளைஞர்களுக்கு அவர்களின் திறனை மேம்படுத்தி வேலைவாய்ப்பினை பெறும் பொருட்டு, தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் (டாம்கோ) கணினி தொடர்பான பயிற்சிகள், ஆயத்த ஆடை உற்பத்தி தொழிற்நுட்ப பயிற்சி, தோல்பொருட்கள் வடிவமைப்பு, ஒளித்தோற்ற நிழற்பட கருவிப் பயிற்சி, அழகுக்கலை தொழில்நுட்பம், முன்னோடி தானியங்கி தொழில்நுட்பம், காற்று பதனம் மற்றும் குளிர்சாதன வசதி, காலணி உற்பத்தியில் பயிற்சி, இலகுரக மற்றும் கனரக வாகன பயிற்சி ஆகியவை இலவசமாக அளிக்கப்படுகின்றன.

**பயிற்சிகள் பெறுவதற்கான தகுதிகள்**

1. விண்ணப்பதாரர் 18 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும்.
2. பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ. ஒரு இலட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

**சமர்ப்பிக்க வேண்டிய சான்றிதழ்கள்**

1. சாதிச் சான்றிதழ்
2. வருமானச் சான்றிதழ்
3. கல்விச் சான்றிதழ்
4. பள்ளி / கல்லூரி மாற்றுச் சான்றிதழ்

## 11. ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொள்ள அரசு நிதி உதவி

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிறித்துவ பிரிவினரும் புனிதப் பயணமாக ஜெருசலேம் செல்வதற்கு நிதியுதவி வழங்கும் புதிய திட்டத்திற்கு அரசால் ஆணைகள் வழங்கப்பட்டு 2011–12 முதல் ஆண்டிற்கு 500 பயனாளிகளுக்கு தலா ரூ.20,000/– வீதம் ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூ. 1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான வழி முறைகள் வகுக்கப்பட்டு ஜெருசலேம் பயணக் குழுவினையும் நியமித்து அரசு உத்தரவிட்டுள்ளது.

**இத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் மேற்கண்ட திட்டங்கள் தொடர்பாக மேலும் விவரங்கள் தேவைப்படின் கீழ்க்காணும் அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்.**

| அலுவலர் மற்றும் முகவரி | தொலைபேசி மற்றும் நிகரி எண் | மின்அஞ்சல் |
|---|---|---|
| ஆணையர்<br>சிறுபான்மையினர் நலத்துறை<br>எண். 807 – 5வது தளம் , அண்ணாசாலை<br>சென்னை–600002. | அலுவலகம் 044- 28520033<br>**(நிகரி)** 044-28544545 | tnminoritieswelfare@yahoo.com |
| மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்,<br>(மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்) | | |
| **இணையதளம்** www.bcmbcmw.tn.gov.in | | |

**2005ஆம் ஆண்டு தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொது தகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்.**

| அலுவலர் | பதவி | முகவரி | தொலைபேசி எண் | நிகரி எண். |
|---|---|---|---|---|
| பொது தகவல் அலுவலர் | சிறுபான்மையினர் நல ஆணையரின் நேர்முக உதவியாளர் | சிறுபான்மையினர் நல ஆணையரகம்,<br>807, 5வது தளம்,<br>அண்ணாசாலை,<br>சென்னை–600 002. | 044–28543117 | 044–28544545 |
| மேல் முறையீட்டு அலுவலர் | சிறுபான்மையினர் நல ஆணையர் | சிறுபான்மையினர் நல ஆணையரகம்,<br>807, 5வது தளம்,<br>அண்ணாசாலை,<br>சென்னை–600 002. | 044–28515050 | 044–28544545 |

## தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் கடனுதவி வழங்குதல்

சமுதாயத்தில் பொருளாதாரம் மற்றும் கல்வியில் பின்தங்கிய சிறுபான்மையின மக்களை மேம்படுத்துவதற்காக தனிநபர் கடன், சிறுகடன், கல்விக் கடன் மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சிகள், தொழில் சார்ந்த பயிற்சிகள் ஆகியவற்றை வழங்குவதற்காக தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (அரசு ஆணை (நிலை) எண். 61, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள்: 1.7.99) கடந்த 31.08.1999ல் துவங்கப்பட்டது. இக்கழகம் கம்பெனிகள் சட்டம் 1956ன்படி பதிவு செய்யப்பட்டுள்ளது.

தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்தின் முகவராக இக்கழகம் செயல்பட்டு வருகின்றது.

| திட்டங்களின் பெயர் | தகுதிகள் | விண்ணப்பிக்க /அணுக வேண்டிய அலுவலர்கள் |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| **I. தனி நபர் கடனுதவி**:<br>அ) தனி நபர் கடன்<br><br>சிறுபான்மையினர் சுய தொழில் புரிவதற்காக விவசாயம் (ம) அவை சார்ந்த தொழில், கைத்திறன், போக்குவரத்து, கறவை மாடுகள், ஆட்டோ ஆகியவற்றிற்காக கடனுதவிகள் வழங்கப்படுகிறது.<br><br>**திட்டம் I**<br>இத்திட்டத்தின் கீழ் ஒரு நபருக்கு ரூ.20.00 இலட்சம் வரை கடனுதவி வழங்கப்படுகிறது. ஆண்டு வருமானம் கிராமப் புறங்களில் ரூ.81,000/–க்கும், நகர்ப் புறங்களில் ரூ.1,03,000/–க்கும் மிகாது இருத்தல் வேண்டும்.<br><br>ரூ.50,000/– வரை வட்டி விகிதம் – 5%<br>ரூ.50,000/–க்கு மேல் வட்டி விகிதம் – 6%<br><br>**திட்டம் I I**<br>ஆண்டு வருமானம் ரூ.1,03,000–க்கு மேற்பட்டு ரூ. 6.00 இலட்சம் வரையில் உள்ள சிறுபான்மையினர்களுக்கு சுய தொழில் செய்ய அதிகபட்சம் ரூ.30.00 இலட்சம் வரையில் ஆண் பயனாளிகளுக்கு ஆண்டிற்கு 8% வட்டி மற்றும் பெண் பயனாளிகளுக்கு 6% வட்டியில் கடன் வழங்கப்படுகின்றது. | விண்ணப்பதாரர் மதவழி சிறுபான்மையினர் இனத்தவரான முஸ்லீம், கிருத்துவர், சீக்கியர், புத்தமதத்தவர், பார்சீ, ஜைனர் ஆகியோர்களில் ஒருவராக இருத்தல் வேண்டும்.<br><br>**வயது வரம்பு:** 18 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும்.<br><br>ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மட்டுமே கடன் வழங்கப்படும்.<br><br>**சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:-**<br>1. பள்ளி மாற்றுச் சான்றிதழ்/ சாதி சான்றிதழ்.<br>2. வருமான சான்றிதழ்.<br>3. உணவு பங்கீடு அட்டை அல்லது இருப்பிட சான்றிதழ்.<br>4. வங்கிகள் கோரும் தேவையான ஆவணங்கள்.<br>5. திட்ட அறிக்கை.<br><br>கடன் தொகையை 60 மாத தவணைகளில் திரும்ப செலுத்தப்பட வேண்டும். | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்<br>மாவட்ட ஆட்சியரகம்,<br>———————————<br>மாவட்டம்.<br>(அல்லது )<br><br>மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர்<br><br>அல்லது<br><br>மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அல்லது அதன் கிளைகள் அல்லது நகர கூட்டுறவு வங்கி அல்லது தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள். |

| | | |
|---|---|---|
| ரூ.5.00 இலட்சத்திற்கு மேல் வழங்கப்படும் கடன் தொகையில் முதலில் 50% கடன் வழங்கப்படும். மீதமுள்ள 50% கடன் தொகை, முன்பு வழங்கப்பட்ட கடன் தொகை முழுமையாக உபயோகப்படுத்தப் பட்டுள்ளதா என்பதை உறுதி செய்த பின் விடுவிக்கப்படும்.<br><br>**<u>கடன் பங்குத் தொகை விவரம்</u>**<br><br>தேசிய கழகத்தின் பங்குத்தொகை 90%<br>டாம்கோ பங்குத்தொகை 5%<br>பயனடைவோரின் பங்குத்தொகை 5%<br><br>இக்கடன் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் அதன் கிளைகள் அல்லது நகர கூட்டுறவு வங்கி அல்லது தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மூலமாக வழங்கப்படுகிறது. | தவணை தவறிய கடன்களுக்கு 5 சதவீதம் அபராத வட்டி கூடுதலாக இத்திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட வட்டி விகிதத்துடன் விதிக்கப்படும். | |
| **<u>ஆ) கறவை மாடு வாங்குவதற்கான கடன்</u>**<br><br>1. இக்கடனுதவி ஆவின் மூலம் 6 சதவீத வட்டி விகிதத்தில் இரண்டு கறவை மாடுகள் வாங்குவதற்கு வழங்கப்படுகிறது.<br><br>2. இரண்டு கலப்பின பசுக்கள் வாங்குவதற்கு அதிக பட்சம் ரூ.50,000/–மும் இரண்டு உயர்ரக முர்ரா எருமைகள் வாங்க அதிக பட்சம் ரூ.70,000/– வரையும் கடன் வழங்கப்படுகின்றது.<br><br>**<u>கடன் பங்குத் தொகை விவரம்</u>**<br><br>தேசிய கழகத்தின் பங்குத்தொகை 90%<br>டாம்கோ பங்குத்தொகை 5%<br>பயனடைவோரின் பங்குத்தொகை 5% | விண்ணப்பதாரர் மதவழி சிறுபான்மையினர் இனத்தவரான முஸ்லீம், கிருத்துவர், சீக்கியர், புத்தமதத்தவர், பார்சீ, ஜைனர் ஆகியோர்களில் ஒருவராக இருத்தல் வேண்டும்.<br><br>ஆண்டு வருமானம் கிராமப் புறங்களில் ரூ.81,000/–க்கும், நகர்புறங்களில் ரூ.1,03,000/–க்கும் மிகாது இருத்தல் வேண்டும்.<br><br>**<u>வயது வரம்பு:</u>** 18 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும்.<br><br>ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மட்டுமே கடன் வழங்கப்படும்.<br><br>**<u>சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:-</u>**<br>1. பள்ளி மாற்றுச் சான்றிதழ்/ சாதி சான்றிதழ்.<br>2. வருமான சான்றிதழ்.<br>3. உணவு பங்கீடு அட்டை அல்லது இருப்பிட சான்றிதழ்.<br>4. வங்கிகள் கோரும் தேவையான ஆவணங்கள். | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்<br>மற்றும்<br><br>ஆவின் நிறுவன அதிகாரிகள், சென்னை<br>மற்றும்<br><br>மாவட்டங்களிலுள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம். |

| | | |
|---|---|---|
| | கடன் தொகையை 36 மாத தவணையில் திரும்ப செலுத்தப்பட வேண்டும்.<br>தவணை தவறிய கடன்களுக்கு 5 சதவீதம் அபராத வட்டி கூடுதலாக இத்திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட வட்டி விகிதத்துடன் விதிக்கப்படும். | |
| <u>இ) ஆட்டோ வாங்குவதற்கான கடன் உதவி.</u><br>சிறுபான்மையின மக்கள் ஆட்டோ வாங்குவதற்கு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்த பின்னர் தாய்கோ வங்கி மூலம் இக்கடன் 6% வட்டியில் அளிக்கப்படுகிறது.<br><br><u>கடன் தொகை:</u><br>எல்.பி.ஜி ஆட்டோ – ரூ.1.21 இலட்சம்<br>மற்ற ஆட்டோ – ரூ.1.00 இலட்சம்<br><br><u>கடன் பங்குத் தொகை விபரம்:</u><br>தேசிய கழகத்தின் பங்குத்தொகை 90%<br>டாம்கோ பங்குத்தொகை 5%<br>பயனடைவோரின் பங்குத்தொகை 5% | விண்ணப்பதாரர் மதவழி சிறுபான்மையினர் இனத்தவரான முஸ்லீம், கிருத்துவர், சீக்கியர், புத்தமதத்தவர், பார்சி, ஜைனர் ஆகியோர்களில் ஒருவராக இருத்தல் வேண்டும்.<br>ஆண்டு வருமானம் கிராமப் புறங்களில் ரூ.81,000/–க்கும், நகர்புறங்களில் ரூ.1,03,000/–க்கும் மிகாது இருத்தல் வேண்டும்.<br><u>வயது வரம்பு:</u> 18 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும்.<br>ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மட்டுமே கடன் வழங்கப்படும்.<br>ஆட்டோ தொழில் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.<br>ஆட்டோ ஓட்டுநர் வில்லை (Badge) பெற்றிருக்க வேண்டும்.<br>இலகுரக வாகன ஓட்டுநர் உரிமம் பயன்பாட்டில் இருத்தல் வேண்டும்.<br>கடன் தொகையில் 10% தாய்கோ வங்கிக்கு வைப்பு நிதியாக செலுத்த வேண்டும்.<br>இக்கடன் 48 மாத தவணைகளில் திரும்ப செலுத்தப்பட வேண்டும்.<br>தவணை தவறிய கடன்களுக்கு 5 சதவீதம் அபராத வட்டி கூடுதலாக இத்திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட வட்டி விகிதத்துடன் விதிக்கப்படும். | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்<br>மாவட்ட ஆட்சியரகம்,<br>––––––––––––––<br>மாவட்டம்.<br>(அல்லது)<br>பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம். |

| | | |
|---|---|---|
| **<u>ஈ) போக்குவரத்து இனக் கடன்</u>**<br><br>இத்திட்டத்தின் கீழ் ரூ.3.13 இலட்சம் கடன் தொகையாக 10 சதவீத வட்டியில் நான்கு சக்கர வாகனங்கள் முறையே கார், வேன் மற்றும் டிராக்டர் ஆகியவைகள் வாங்க கடன் தொகைகள் இக் கழகம் மூலம் வழங்கப்படுகின்றன.<br><br>**<u>கடன் பங்குத் தொகை விபரம்:</u>**<br>டாம்கோ பங்கு 90%<br>பயனாளி பங்கு 10% | விண்ணப்பதாரர் மதவழி சிறுபான்மையினர் இனத்தவரான முஸ்லீம், கிருத்துவர், சீக்கியர், புத்தமதத்தவர், பார்சி, ஜைனர் ஆகியோர்களில் ஒருவராக இருத்தல் வேண்டும்.<br><br>ஆண்டு வருமானம் கிராமப் புறங்களில் ரூ.81,000/–க்கும், நகர்புறங்களில் ரூ.1,03,000/–க்கும் மிகாது இருத்தல் வேண்டும்.<br>**<u>வயது வரம்பு:</u>** 18 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும்.<br>ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மட்டுமே கடன் வழங்கப்படும்.<br><br>வாகன ஓட்டுநர் உரிமம் பயன்பாட்டில் இருத்தல் வேண்டும்.<br><br>இக்கடன் 60 மாத தவணைகளில் திரும்ப செலுத்தப்பட வேண்டும்.<br><br>தவணை தவறிய கடன்களுக்கு 5 சதவீதம் அபராத வட்டி கூடுதலாக இத்திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட வட்டி விகிதத்துடன் விதிக்கப்படும். | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நல அலுவலர்கள்<br>மாவட்ட ஆட்சியரகம்,<br>——————————<br>மாவட்டம்.<br>(அல்லது )<br><br>மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர்<br><br>அல்லது<br>மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அல்லது அதன் கிளைகள் அல்லது நகர கூட்டுறவு வங்கி அல்லது தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி |
| **<u>II. சிறுகடன்</u>**<br>சிறுபான்மை சுய உதவிக் குழுக்களின் அங்கத்தினர்களுக்கு (ஆண்/பெண்) ஜவுளி வியாபாரம், காலணி விற்பனை செய்தல், சிற்றுண்டி, பலகாரம், ஊறுகாய் (ம) அப்பளம் தயாரித்து விற்பனை செய்தல், கூடை பின்னுதல் போன்ற சிறு வியாபாரம் செய்து தங்களது பொருளாதாரத்தை உயர்த்திட சிறு வணிகக் கடன் வழங்கப்படுகிறது.<br><br>இத்திட்டத்தில் அதிகபட்சமாக ரூ.1,00,000/– வரை 7% வட்டியில் சிறுபான்மையின சுய உதவிக் குழுவில் உள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் கடனாக வழங்கப்படும்.<br><br>தற்போது ஆண்டு வருமானம் ரூ.1.03 இலட்சத்திற்கு மேற்பட்டு ரூ. 6.00 இலட்சம் வரையில் உள்ளவர்களுக்கு கடன் தொகையினை ரூ.1,50,000/– வரையில் ஆண்களுக்கு ஆண்டிற்கு | சுய உதவி குழுவில் உறுப்பினர்கள் அதிகபட்சமாக 20 நபர்களும், குறைந்தபட்சமாக 10 நபர்கள் இருத்தல் வேண்டும். குறைந்த பட்சம் 60% சிறுபான்மையினரும் எஞ்சிய 40% பிற்பட்டோர்/ மி.பி.வ/ சீ.ம / ஆதிதிராவிடர் / பழங்குடியினராக இருக்கலாம்.<br><br>மேலும், அந்த குழு குறைந்தது ஆறு மாதம் சேமித்தல் மற்றும் கடன் அளித்தல் பணியில் தொடர்ந்து நன்றாக செயல்பட்டு இருக்க வேண்டும்.<br><br>ஆண்டு வருமானம் கிராமப் புறங்களில் ரூ.81,000/–க்கும் நகர்புறங்களில் ரூ.1,03,000/–க்கும் மிகாது இருத்தல் வேண்டும். | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நல அலுவலர்கள்<br>மாவட்ட ஆட்சியரகம்,<br>———————— மாவட்டம்.<br>(அல்லது )<br><br>மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர்<br><br>அல்லது<br><br>மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அல்லது அதன் கிளைகள் அல்லது நகர கூட்டுறவு வங்கி, தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி |

| | | |
|---|---|---|
| 10% வட்டியிலும் மற்றும் பெண்களுக்கு 8% வட்டி விகிதத்திலும் உயர்த்தி வழங்க புதுடில்லி தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகம் உத்தரவிட்டுள்ளது<br><br>**<u>கடன் பங்குத் தொகை விபரம்:</u>**<br><br>தேசிய கழகத்தின் பங்கு தொகை– 90%<br>டாம்கோ பங்கு தொகை – 5%<br>பயனாளியின் பங்கு தொகை – 5% | இக்கடன் 36 மாத தவணைகளில் திரும்ப செலுத்தப்பட வேண்டும். | |
| **<u>III. கல்விக் கடன்</u>**<br><br>சிறுபான்மை மாணவ / மாணவிகள் அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் இளங்கலை / முதுகலை தொழிற்கல்வி / தொழில் நுட்பக்கல்வி (ம) குறுகிய கால உயர்திறன் வளர்ச்சி படிப்பு பயில்பவர்களுக்கு (Short Term High Skill Development Courses) கல்விக் கடனுதவிகள் வழங்கப்படுகின்றன.<br><br>இத்திட்டத்தில் பின்வரும் இனங்களுக்காக கடன் அளிக்கப்படுகிறது.<br><br>**<u>கடனுதவி விவரங்கள்</u>:**<br><br>குறுகிய கால உயர்திறன் வளர்ச்சி கல்வி, தொழிற்கல்வி (இளங்கலை / முதுகலை) பட்டப்படிப்பு , வேலைவாய்ப்புப் பட்டப்படிப்புகள் பயிலும், ஆண்டு வருமானம் கிராமப்புறங்களில் ரூ.81,000-க்கு மிகாமலும் , நகர்ப்புறங்களில் ரூ.1.03 இலட்சத்திற்கு மிகாமலும் உள்ள சிறுபான்மையின மாணவ / மாணவியருக்கு ஒரு கல்வி ஆண்டிற்கு வழங்கப்படும் கல்விக் கடன் ரூ.2.00 இலட்சத்திலிருந்து தற்போது ரூ.3.00 இலட்சம் ஆக உயர்த்தப்பட்டு அதிகபட்சம் ரூ.15.00 இலட்சம் வரை 3 விழுக்காடு என்ற குறைந்த வட்டி விகிதத்தில் கல்விக்கடன் வழங்கப்படுகிறது.<br><br>மேலும் வெளிநாடுகளில் “தொழிற்கல்வி “பயிலும் சிறுபான்மையின மாணவ / | விண்ணப்பதாரர் மதவழி சிறுபான்மையினர் இனத்தவரான முஸ்லீம், கிருத்துவர், சீக்கியர், புத்தமதத்தவர், பார்சி, ஜைனர் ஆகியோருள் ஒருவராக இருத்தல் வேண்டும்.<br><br>**<u>வயது வரம்பு:</u> 16–32**க்குள் இருக்க வேண்டும்.<br><br>ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மட்டுமே கடன் வழங்கப்படும்.<br><br>**<u>விண்ணப்பிப்பதற்கான</u>**<br><br>**<u>ஆவணங்கள்</u>:**<br><br>1. சாதி சான்றிதழ் / பள்ளி மாற்று சான்றிதழ் நகல்<br>2. வருமான சான்றிதழ் நகல்<br>3. இருப்பிட சான்றிதழ் நகல்<br>4. உண்மைச் சான்றிதழ் (Bonafide Cerificate) அசல் நகல்<br>5. கல்விக் கட்டணங்கள் செலுத்திய இரசீது / செலான் (Original)<br>6. மதிப்பெண் சான்றிதழ் நகல்<br>7. வங்கி கோரும் இதர ஆவணங்கள்<br><br>**<u>கடன் தொகையினை திருப்பிச் செலுத்தும் கால வரம்பு</u>:**<br><br>கல்வி பருவக்காலம் முடிந்த தேதியிலிருந்து, அடுத்து 6–வது மாதத்திலிருந்து அல்லது பணியில் அமர்ந்த தேதியிலிருந்து இதில் எது முந்தையதோ அந்த | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நல அலுவலர்கள்<br>மாவட்ட ஆட்சியரகம்,<br>———————— மாவட்டம்.<br>(அல்லது )<br><br>மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர்<br><br>அல்லது<br><br>மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அல்லது அதன் கிளைகள் அல்லது நகர கூட்டுறவு வங்கி (அல்லது) தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி. |

| | | |
|---|---|---|
| மாணவியருக்கும் ஒரு கல்வி ஆண்டிற்கு ரூ.4.00 இலட்சம் வீதம் அதிக பட்சம் ரூ.20.00 இலட்சம் வரை 3 விழுக்காடு வட்டியில் அதிகபட்சம் 5 ஆண்டுகளுக்கு கல்விக்கடன் மேற்குறிப்பிட்ட வருமான வரம்பின் அடிப்படையில் வழங்கப்படுகிறது.<br><br>மேலும் ஆண்டு வருமானம் ரூ.1.03 இலட்சத்திற்கு மேற்பட்டு ரூ.6,00,000 வரையில் உள்ளவர்களில் இந்தியாவில் தொழிற்கல்வி பயில்பவர்களுக்கு ஒரு கல்வியாண்டிற்கு ரூ.4.00 இலட்சம் வீதம் அதிகபட்சம் ரூ.20.00 இலட்சம் வரையிலும், வெளிநாட்டில் தொழிற்கல்வி பயில்பவர்களுக்கு ஒரு கல்வி ஆண்டிற்கு ரூ.6.00 இலட்சம் வீதம் அதிகபட்சம் ஐந்து ஆண்டுகளுக்கு ரூ.30.00 இலட்சம் வரையிலும், ஆண் பயனாளிகளுக்கு ஆண்டிற்கு 8 விழுக்காடு வட்டியிலும் மற்றும் பெண் பயனாளிகளுக்கு ஆண்டிற்கு 5 விழுக்காடு வட்டியிலும் கடன் வழங்கப்படுகிறது.<br><br>மேற்படி கல்விக் கடனில், சேர்க்கை கட்டணம் / பயிற்றுவிப்பு கட்டணம், புத்தகம், எழுதுபொருள் மற்றும் படிப்புக்கு தேவையான உபகரணங்கள், தேர்வுக் கட்டணம், விடுதி மற்றும் உணவுக் கட்டணம் (விடுதியில் தங்கி பயில்பவர்களுக்கு மட்டும்) ஆகியவை அடங்கும். இத்திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட பாடப்பிரிவுகளின் விவரங்கள் www.nmdfc.org and www.bcmbcmw.tn.gov.in/welf schemes **என்கிற இணையதள முகவரியில் வெளியிடப்பட்டுள்ளன.**<br><br><u>கல்விக் கடன் புதுப்பித்தல்</u>:–<br><br>கல்விக் கடன் பெற்ற பின், தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் மாணவ / மாணவியர் பருவ தேர்வுகளில் / தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருப்பின் புதுப்பித்தல் கல்விக் கடன் உதவித் தொகை வழங்கப்படும். | தேதியிலிருந்து அசல் மற்றும் வட்டி தொகை ஆகியவை 60 மாத தவணைகளில் வசூலிக்கப்படும்.<br><br>**<u>அபராத வட்டி</u>:**<br>கடன் தவணைத் தொகை செலுத்த தவறினால் 5% அபராத வட்டியுடன் அசல் (ம) வட்டித் தொகை ஆகியவற்றை மாணவ / மாணவியர் / பெற்றோர் / பாதுகாவலர்களிடம் வசூலிக்கப்படும்.<br><br>புதுப்பித்தல் கல்விக் கடன் உதவித் தொகை விண்ணப்பத்துடன் முந்தைய ஆண்டில் தேர்ச்சி பெற்ற மதிப்பெண் சான்றிதழை கல்வி நிலைய முதல்வர் /துறைத் தலைவரின் (HOD) கையொப்பம் பெற்று வங்கியில் தவறாது சமர்ப்பிக்க வேண்டும். | |

குறிப்பு: **1. விண்ணப்பப் படிவங்கள் கட்டணமின்றி கலம் (3) இல் குறிப்பிட்டுள்ள அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.**

**2. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை தேவையான ஆவணங்களுடன் கலம் (3)ல் குறிப்பிட்டுள்ள அலுவலகங்களில் அளிக்கலாம்.**

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்,
807, 5வது தளம், அண்ணா சாலை, சென்னை–600 002
தொலைபேசி : 044–28514846
நிகரி : 044–28515450
மின்னஞ்சல் : tnminoritiescorporation@yahoo.co.in